



ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்

முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3]  [தனி இதழ் 25 ந. பை.

| மலர் 27 | பிப்ரவரி 1965 | இதழ் 2 |
|---|---|---|


# ஒரே ஒரு வழி!

## கொதிப்புணர்ச்சியும் கொந்தளிப்பும்

ஏறத்தாழ ஒரு மாத காலமாகத் தமிழ் நாடு எல்லையற்ற கொதிப்புக்கும் கொந்தளிப்புக்கும் உறைவிடமாகக் காட்சி அளித்து வருகிறது.

பல்வேறு கல்லூரிகளையும் உயர் நிலைப் பள்ளிகளையும் சேர்ந்த மாணவர்கள், மூன்று வார காலம் தங்கள் கல்வி நிலையங்களுக்குச் செல்லாமல் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்.

தங்களுடைய மனவேதனையைக் காட்டும் அறிகுறியாகக் கறுப்புக் கொடி ஏற்றுதல்—கறுப்புப் பட்டை அணிதல் — தடையை மீறி ஊர்வலம் நடத்துதல்—அஞ்சல் நிலையங்கள் முன் மறியல் செய்தல்—புகைவண்டித் தொடர்களை நிறுத்துதல் முதலிய பல்வேறு செயல்களில் மாணவர்கள் ஈடுபட்டு இருந்திருக்கிறார்கள்.

ஜனவரித் திங்களின் இறுதிக் கிழமையிலிருந்தே தமிழ் நாட்டு மாணவர் சமுதாயம், குமுறிக் கொந்தளித்து வீறிட்டு வெடித்த ஓர் எரிமலை போலவும், சுழன்று சுழன்று வீசிய புயற்காற்று போலவும் காட்சி அளித்து வருகிறது.

இந்தச் சூழ்நிலையை யொட்டி, அரசாங்க ஆலோசனைக்கு இணங் கத் தமிழ் நாட்டில் உள்ள எல்லாக் கல்லூரிகளும், உயர்நிலைப் பள்ளி களும், தொழில் நுணுக்கப் பள்ளிகளும், ஒரு மாதத்திற்கு மேலாக மூடப்பட்டு கிடக்கின்றன.

1942 ஆம் ஆண்டின் ஆகஸ்டுத் திங்களில் தொடங்கிய இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் கூட மாணவ சமுதாயத்தில் இவ் வளவு கொதிப்புணர்ச்சியும் கோபாவேசமும் இருந்ததில்லை. அந்தக் காலத்தில் கூடத் தமிழ் நாட்டுக் கல்வி நிலையங்கள் இத்தனை வாரங்கள் மூடப்பட வேண்டிய நிலை உருவாக வில்லை.

இறுதியில், சில நாட்கள், மாணவர்களுடைய கிளர்ச்சியை, சில சமூக விரோத சக்திகள், தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத் திக்கொண்டு, புகைவண்டிப் பெட்டிகளைக் கொளுத்துதல், அஞ்சல் நிலையங்களைத் தகர்த்தல், தொலை பேசி அமைப்புகளைப் பெயர்த்தெறி தல், 'சிக்னல்' கம்பிகளை அறுத்தல் முதலிய வெறுக்கத்தக்க செயல் களில் ஈடுபட்டு வன்முறை வெறியாட்டம் ஆடின என்பது வருந்தத் தக்க ஓர் உண்மை. ஆனால் அத்தகைய தீய சக்திகளின் கோர தாண்டவம் உருவாகிறவரையில் மாணவர்களின் கிளர்ச்சி மாணவர் களின் அளவோடு இருந்த வரையில், மாணவர்களின் ஆர்ப்பாட்டங் கள், மிக மிக அமைதியான முறையிலும் ஒழுங்கான வகையிலும் இருந்தன என்பதை யாவரும் மறுக்க முடியாது.

## உண்மையான காரணம்

இதுவரை தமிழ் நாட்டின் வரலாறே கண்டிராத அளவுக்கு மாணவர்களின் சமுதாயத்தில் ஏற்பட்ட வேதனைக்கும் துயரத்திற்கும் கோபத்திற்கும் கொந்தளிப்புக்கும் காரணம் என்ன என்பதை, ஊரும் உலகமும் நன்கு அறியும்.

"ஆங்கில மொழிதான் இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழி. அதனோடுகூட, சில பல செயல்களுக்கு, வேண்டுமானால் இந்தி மொழியையும் பயன்படுத்திக் கொள்ளலாம்" இது, இந்த ஆண்டின் ஜனவரித் திங்கள் 25 ஆம் நாள் வரை இருந்துவந்த சட்டபூர்வமான நிலைமை.

"இந்தி மொழிதான் இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழி. அதனோடுகூட, சில பல. செயல்களுக்கு, வேண்டுமானால் ஆங்கில

மொழியையும் பயன்படுத்திக் கொள்வோம்''—இது, இந்த ஆண்டின் ஜனவரித் திங்கள் 26 ஆம் நாளிலிருந்து சட்டப்படி ஏற்பட்டுள்ள புது நிலைமை.

சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்வதானால், ஆங்கிலம் மட்டுமே ஆட்சிமொழி என்று இருந்த நிலைமை மாறி, இந்தி மட்டுமே ஆட்சி மொழி என்கிற நிலைமை 26-1-1965 முதல் ஏற்பட்டுவிட்டது.

இந்தி மொழிக்குத் தரப்பட்டுள்ள இந்தப் பதவி உயர்வின் விளைவாக,

1. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் உட்பட இந்தியாவில் உள்ள பிற மொழிகளுக்கு இல்லாத ஒரு தனிச் சலுகை—ஓர் ஒப்பற்ற அந்தஸ்து—இந்தி மொழிக்கு மட்டும் தரப்படுகிறது. இதன் விளைவாக, இந்தி மொழிக்கு மட்டும் உயர்ந்த நிலை; பிற மொழிகளுக்கெல்லாம் தாழ்ந்த நிலை என்கிற வேறுபாடு உருவாகிவிடுகிறது.

2. இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், இனி, அந்த ஒரு மொழியை மட்டும் படித்தால் போதும். அந்தப் படிப்பை வைத்துக்கொண்டே இந்தியப் பேரரசில் உத்தியோகம் பெற்று விடமுடியும். ஆனால் இந்தி பேசாத பிறமொழி மக்களோ, தங்களுடைய தாய்மொழி—ஆங்கிலம்—இந்தி ஆகிய மூன்று மொழிகளைப் படித்தாக வேண்டும். இந்த வேறுபாட்டின் விளைவாக, இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் இந்தியாவின் முதல் தரக் குடிமக்கள் என்கிற நிலையும், தமிழ் முதலில் பிற மொழிகளைத் தாய் மொழிகளாகக் கொண்டவர்கள், இரண்டாந்தர குடிமக்கள் என்கிற நிலையும் ஏற்பட்டுவிடுகிறது. ஓர் ஜனநாயக ஆட்சி முறையில், மக்கட் சமுதாயத்தின் பல பிரிவுகளுக்கிடையே, இத்தகைய வேறுபாடு ஏற்படுவது, சகிக்கமுடியாத கொடுமை, தாங்கமுடியாத அக்கிரமம்.

தமிழகத்து மாணவர் சமுதாயத்தின் உள்ளத்தில் ஆழமாகவும் அழுத்தமாகவும் ஏற்பட்டுவிட்ட கருத்துக்கள் இது.

ஜனவரி 26 முதல் இந்தி மொழிக்குத் தரப்பட்டிருக்கிற புதிய அந்தஸ்தின் விளைவாகத் தமிழ் நாட்டின் எதிர்காலமும் தமிழ் மொழியின் நிலைமையும் மட்டுமல்ல, தங்களுடைய எதிர்காலமும் அளவற்ற, ஆபத்துக்கு ஆளாகிவிட்டது என்பது, தமிழக மாணவர்கள் அனைவருடைய உள்ளத்திலும் ஏற்பட்டுவிட்ட அச்சமாகும்.

தங்கள் எதிர்காலத்தைப் பற்றிய இந்த அச்சம்—அச்சத்தின் விளைவாக ஏற்பட்ட அதிருப்தி—அதிருப்தியிலிருந்து கிளைத்து எழுந்த வெறுப்பு—வெறுப்பிலிருந்து பிறந்துவிட்ட கொதிப்பு—இந்த

உணர்ச்சிகளின் விளைவாக ஏற்பட்டதுதான், தமிழக மாணவர்களின் வரலாறு காணாத வேலை நிறுத்தம்.

தங்களுடைய வருங்காலமும், தமிழ் நாட்டினுடைய வருங்காலமும், இந்தி மொழி ஆதிக்கத்தின் காரணமாக, இருள் நிறைந்ததாக மாறிவிடும் என்று, ஆயிரமாயிரமாக உள்ள மாணவர்களின் உள்ளங்களில் தானாகத் தோன்றிய அச்சத்தின் விளைவாக உருவாகிய இந்த வேலை நிறுத்தத்தை, சுதந்தரக் கட்சியினரால் தூண்டிவிடப் பட்டது என்றோ, திராவிட முன்னேற்றக் கழகத்தால் உருவாக்கப் பட்டது என்றோ, முன்னாள் கவர்னர் ஜெனரல் திருவாளர் இராசகோபாலாச்சாரியார் அவர்களால் கிளப்பி விடப்பட்டது என்றோ, யாராவது கூறுவார்களானால், உண்மைக்கு மாறான கூற்று, அதைவிட வேறொன்று இருக்கமுடியாது. அவ்வாறு கூறுபவர்கள், அவர்கள் எவ்வளவு பெரிய இடங்களில் வீற்றிருப்பவர்களானாலும் சரியே, ஒன்று உண்மையை உணராதவர்களாக இருக்கவேண்டும். அல்லது, வேண்டுமென்றே உண்மையைத் திரித்தும் மறைத்தும் பேசுபவர்களாக இருக்கவேண்டும்.

## தமிழகம் மட்டுமல்ல—தென்னகம் முழுவதும்.

தமிழ்நாட்டு மாணவர் உலகில் கொழுந்துவிட்டு எரிகிற இந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி, தமிழகத்தோடு முடிந்துவிடுகிறதா என்றால், இல்லை. ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய தென்னகத்தின் பிற பகுதிகளிலும் இந்தி எதிர்ப்பு முழக்கம், மாணவர் உலகத்திலிருந்து மண்ணையும் விண்ணையும் அதிர வைக்கிற அளவுக்குத் தோன்றியிருக்கிறது.

ஆந்திர மாநிலத்தில் உள்ள திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பல்வேறு கல்வி நிலையங்களில் ஏற்பட்ட இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் விளைவாக, அந்த நிலையங்கள் யாவும், கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளன. ஆந்திர நாட்டைச் சேர்ந்த கர்னூல், கடப்பை, நெல்லூர், சித்தூர், அநந்தப்பூர் பாபட்லா, குண்டூர், மதனப்பள்ளி, புத்தூர் முதலிய பல்வேறு பகுதிகளில் மாணவர்களின் ஊர்வலங்கள்—வேலை நிறுத்தங்கள்—இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன.

கேரள மாநிலத்தைச் சேர்ந்த திருவனந்தபுரம், கொல்லம், கோட்டயம், திருச்சூர், பாலக்காடு, கள்ளிக்கோட்டை உள்ளிட்ட பற்பல நகரங்களில் கேரள மாணவர்கள் இந்தித் திணிப்பை மிக வன்மையாகக் கண்டித்து, தங்கள் கல்வி நிலையங்கட்குச் செல்லாமல், கிளர்ச்சி நடத்தியுள்ளார்கள்.

இவற்றைப் போலவே, கருநாடக மாநிலத்தைச் சேர்ந்த பெங்களூர், மைசூர் முதலிய நகரங்களிலும் மாணவர்களின் முழக்கம் விறிட்டெழுந்துள்ளது.

நாளிதழ்களில் வெளியாகியுள்ள செய்திகளையெல்லாம் கூர்ந்து கவனித்தால், இந்தித் திணிப்புக்கு எதிராக எழுந்துள்ள வெறுப்புணர்ச்சியும், தமிழக மாணவர்களிடம் மட்டுமல்ல, தென்னகத்தில் உள்ள எல்லா மாநில மாணவர்களிடையேயும் பரவியுள்ளன என்பதும், தென்னக மாணவர்களிடையே மட்டுமல்ல—தென்னிந்தியாவில் உள்ள வழக்கறிஞர்கள், தொழிலாளர்கள், தொழில் நிபுணர்கள், முதலீட்டாளர்கள், மருத்துவர்கள், வணிகர்கள், அலுவலகச் சிப்பந்திகள், பத்திரிகை ஆசிரியர்கள், சிந்தனையாளர்கள் ஆகிய எல்லாத் திறத்தாரிடமும் இந்தித் திணிப்புக் கண்டன உணர்ச்சி தோன்றியுள்ளது என்பதும், தெள்ளத் தெளிவாக விளங்கும்.

இன்னமும் தெளிவாகக் கூறவேண்டுமானால், இந்தி ஆதிக்க எதிர்ப்பு முழக்கம், தென்னகத்தோடு மட்டும்கூட நிற்கவில்லை. வட இந்தியாவில் உள்ள இந்தி பேசாத பகுதிகளிலும் பரவியுள்ளது. சிறப்பாகவும் குறிப்பாகவும், வங்காள மாநிலத்தில், இந்தி எதிர்ப்பு இயக்கம் வேகமும் விறுவிறுப்பும் பொருந்தியதாக அமைந்துள்ளது

காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களையே பெரும்பான்மையாகக் கொண்டுள்ள வங்காள மாநிலச் சட்ட மன்றமே முன்வந்து, சில நாட்களுக்குமுன், ஆங்கிலத்தின் உபயோகத்தை நெடுங்காலத்திற்குத் தொடர்ந்து வைத்திருக்க, இந்தியப் பேரரசினர் ஆவன செய்ய வேண்டும் என்று **ஏக மனதாகத்** தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அது மட்டுமல்ல. கல்கத்தாவின் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் சில நாட்களுக்குமுன் வேலை நிறுத்தம் செய்து தங்கள் வெறுப்புணர்ச்சியைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். சென்ற மாதம் வரை மேற்கு வங்காளச் சட்டமன்றத்தின் மேலவைத் தலைவராக விளங்கியவரும், தமிழ் இந்தி உட்பட இந்தி மொழிகள் பலவற்றிலும் ஆழ்ந்த புலமை படைத்தவரும், இந்தியத் துணைக் கண்டத்தின் தலை சிறந்த அறிஞர்களில் ஒருவருமாகிய திருவாளர் சுனித்குமார் சாட்டர்ஜி அவர்கள், 22—12—65 அன்று, கட்டாக் நகரில் நடைபெற்ற வங்காள இலக்கிய மாநாட்டில் ஆற்றிய தலைமையுரையில்,

"இந்திய அரசாங்கத்தால் இப்போது பின்பற்றப்பட்டுவருகிற மொழிக் கொள்கை, நம் நாட்டை எதிர் நோக்கியுள்ள மிகச் சிக்கலான—இன்றியமையாத பிற பிரச்சினைகளில் நம் மனம் செல்ல விடாமல் மறக்கச் செய்து, இந்தியா முழுவதையும் குழப்பத்தில் ஆழ்த்தும்" என்றும்,

*"இந்திய அரசினரின் இந்த மொழிக் கொள்கை, அனைத்து இந்திய ஒற்றுமையின் ஆணி வேரைத் தாக்கிச் சிதைத்து, உணர்வோடு கூடிய நம்முடைய ஒருமைப்பாட்டையும் வலிவிழக்கச் செய்கிறது" என்றும்,*

*"அரசாங்கத்தின் இந்த மொழிக் கொள்கை, இந்திய நாட்டு மக்களில், இந்தி பேசும் பகுதியினரை அரசாங்கத்தின் முதல்தர மான செல்லப் பிள்ளைகளாகவும், இந்தி பேசாத பகுதியினரை இரண்டாந்தரமான—செல்வம் குறைந்த பகுதியினராகவும் ஆக்கி விடும்; அப்படி ஆக்குவதன் மூலமாக, இந்தக் கொள்கை, இந்திய மக்களை இரண்டு வகுப்பினராகப் பிரித்துவிடும் என்று அஞ்சுகிறேன்" என்றும்;*

*"இந்த மொழிக் கொள்கையானது, இந்தியாவில் உள்ள பல் வேறு மொழிகளின் முன்னேற்றத்திற்கு இடையூறாகவும், அம் மொழிகளின் வளர்ச்சிக்காக எடுத்துக் கொள்ளப்படும் செயல் முறை களுக்குத் தடைக் கல்லாகவும் இருக்கும்" என்றும்,*

*அழுத்தந் திருத்தமாக எடுத்துக் காட்டியுள்ளார்.*

இதுவரை வெளியாகியுள்ள செய்திகளையும் உண்மைகளை யும் கருத்துக்களையும் ஒன்ருக வைத்து, நடுநிலையில் நின்று ஆராய்ந்துபார்த்தால், ஓர் உண்மை தெள்ளத் தெளிவாக விளங் கும். இந்திய அரசாங்கத்தின் ஆட்சிமொழியாக இந்தி மொழி உயர்த்தப்படுவதை, பொதுவாக இந்தி பேசாத மாநிலங்களும் சிறப்பாகத் தென்னக மாநிலங்களும் விரும்பவில்லை என்பதே அந்த உண்மை

**சிக்கல் தீர்வதற்கான ஒரே ஒரு வழி.**

*ஆட்சி மொழிச் சிக்கல் சம்பந்தமாக இந்தி பேசாத மக்களுக்கு ஏற்பட்டுள்ள எல்லையற்ற வேதனையும் அளவற்ற துயரமும் ஆழமான அச்சமும் தீரவேண்டுமானல், அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக் கிறது. வேறு வழி எதுவும் கிடையாது. வேறு எந்த வழியும் பிரச் சினையைத் தீர்க்காது.*

"இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாகவும், இந்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்கட்கும், இடையே செய் திப் போக்குவரத்து மொழியாவும், பல்வேறு மாநில அரசாங்கங் கட்கு இடையே செய்திப் போக்குவரத்து மொழியாகவும், ஆங் கில மொழி மட்டுமே பயன்படுத்தப்படும்" என்கிற முறையில் அமைந்த விதி ஒன்று, இந்திய அரசியல் திட்டத்தில் சேர்க்கப் பட வேண்டும். இந்த விதிக்கு மாருக அரசியல் திட்டத்தில்

தற்போது காணப்படுகிற விதிகள் யாவும் அறவே அகற்றப்பட வேண்டும்.

**இந்திய மொழிச் சிக்கல் தீர்வதற்கான ஒரே ஒரு வழி இதுதான்.**

இந்த ஒரு வழிதான், நியாயமான வழி; இந்திய மக்கள் அனைவரையும் ஏற்றத் தாழ்வின்றி, ஒத்த நிலையில், சரி நிகர் சமானமாக வைக்கத்தக்க வழி; இந்தியாவின் தேசிய மொழிகளாக அரசியல் திட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ள பதினான்கு மொழிகளில் எந்த ஒரு மொழிக்கும் தனிச் சலுகையோ தனி உயர்வோ அளிக்காமல், எல்லா மொழிகளுக்கும் ஒரே வகையான நிலையை அளிக்கும் வழி; இந்திய நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டையும் கட்டிக் காத்துப் பேணி வளர்க்க வல்ல பொன்னான வழி; நடு நிலை உணர்ச்சியும் தீர்க்க தரிசனமும் இராஜதந்திரமும் படைத்த அரசாங்கத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளத் தக்க நல்வழி.

இந்திய அரசாங்கத் தலைவர்களும், பாராளு மன்றமும், அந்த மன்றத்தின் பெரும்பான்மை வாக்குகளைத் தன்னிடம் வைத்துள்ள காங்கிரஸ் கட்சியும், சிக்கல் தீர்வதற்கான இந்த அறவழியை மனப் பூர்வமாக ஏற்றுக்கொண்டு, அரசியல் திட்டத்தில் இதற்குத் தேவையான திருத்தத்தை நிறைவேற்றிவைப்பதில் உடனடியாக ஈடுபடுவராயின், மொழிச் சிக்கல் தீர்ந்துவிடும்; நாட்டின் ஒற்றுமை சிதறாமல் இருக்கும்; இந்தியாவின் எதிர்காலம் ஒளி மிகுந்ததாகவும் புகழ் நிறைந்ததாகவும் திகழும்.

சிக்கல் தீர்வதற்குரிய ஒரே ஒரு வழியாக உள்ள இந்த நல்ல வழியை ஏற்காமல், அரசியல் திட்டத்தைத் திருத்துவதற்குத் துணிச்சலோடு முன்வாரமல், இந்திய அரசாங்கத் தலைவர்கள்,

"மொழிப் பிரச்சினையில் தென்னாட்டவருக்கு உள்ள அச்சம் அடிப்படை அற்றது" என்றும்,

"தென்னகத்தில் இந்தி திணிக்கப்படுகிறது என்பது உண்மையன்று" என்றும்,

"இந்தி பேசாத மக்களின் நியாயமான குறைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்வோம்" என்றும்,

"இந்தி ஆதிக்கமா—அப்படி ஒன்று இருக்கிறதா—எங்கள் கண்களுக்கு அது தெரியவில்லையே" என்றும்,

வெறும் சொற்களைக் கூறிக்கொண்டு வீண் பொழுது கழிப்பதால் துளியளவும் பயன் விளையாது.

## தென்னகத்திற்குத் தேவை உறுதிமொழிகள் அல்ல!

இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி மொழி உயர்நிலை பெறுவதால் இந்தி பேசாத மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்படும் என்பதற்காக, மாபெருந்தலைவர் நேரு அவர்கள், 1959–ஆம் ஆண்டில் சில உறுதி மொழிகளை அளித்தார்கள். அது போலவே, தற்போது இந்திய நாட்டின் தலைமை அமைச்சராக உள்ள திருவாளர் லால்பகதூர் சாஸ்திரி, உள்துறை அமைச்சராக உள்ள திருவாளர் குல்சாரிலால் நந்தா, ஒலிபரப்புத் துறை அமைச்சராக உள்ள திருமதி இந்திரா காந்தி, தமிழகத்தின் முதலமைச்சராக உள்ள திருவாளர் பக்தவத்சலம், அனைத்து இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவயாக உள்ள திருவாளர் காமராஜர் ஆகியோரும், ஏனைய பல அமைச்சர்கள்—காங்கிரஸ் தலைவர்களும், மொழிப் பிரச்சினை பற்றிப் பல்வேறு உறுதிமொழிகளை அடிக்கடி அளித்துவருகிறார்கள்.

இத்தகைய உறுதி மொழிகளால் தென்னக மக்களின் அச்சம் தீராது என்பதையும், இந்தி பேசாத மக்கள்மீது ஏற்பட்டுவிட்ட இந்தித் திணிப்பையும் ஆதிக்கத்தையும் அகற்றுவதற்கு உரிய ஆற்றல் இந்த உறுதி மொழிகளுக்குக் கிடையாது என்பதையும் இந்தப் பெருந்தலைவர்கள் உணராததுதான், மிக்க வியப்பை அளிப்பதாக இருக்கிறது.

பல்வேறு அமைச்சர்களும் தலைவர்களும் அளிக்கிற உறுதி மொழிகளே, பல சமயங்களில் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டனவாகவும், முரண்பட்டனவாகவும் இருக்கின்றன. இத்தகைய விபரீதமான நிலையில், யாருடைய உறுதிமொழி சரியானது, எவருடைய உறுதிச் சொல் தவறானது என்பதை எப்படித் தெரிந்து கொள்வது?

ஓர் அமைச்சர் தருகிற உறுதிமொழியை, அவர் இறுதிவரையில் கடைப்பிடிப்பார் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?

உறுதி மொழியைத் தந்துவிட்ட அமைச்சர், நாணயம் உள்ளவராகவும், உறுதி மொழியைச் செயல்படுத்துவதற்குத் தேவையான அரசியல் செல்வாக்கு உடையவராகவும் இருப்பார் என்று வைத்துக் கொண்டாலும், அவரே எத்தனைக் காலத்துக்குத் தொடர்ந்து அமைச்சராக இருக்க முடியும்? அவருக்குப் பின்னர் அமைச்சர்களாக வருபவர்கள், அவருடைய உறுதி மொழியை ஏற்றுக்கொள்வார்கள் என்று எப்படிக் கூறமுடியும்?

ஓர் உறுதிமொழியைத் தருபவர் எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் சரி, அவர் பெற்றுள்ள பதவி எத்துணை உயரியதாக இருந்தாலும் சரி, அவருடைய உறுதிமொழி வெறும் உறுதிமொழி

தானே தவிர, அதற்குச் சட்டபூர்வமான நிலைமை அல்லது தகுதி கிடையாது என்பதை யாராவது மறுக்க முடியுமா ?

மொழிச் சிக்கல் சம்பந்தமாக ஏதேனும் ஒரு தகராறு நீதி மன்றத்திற்குச் செல்லுமானல், அப்போது நீதிமன்றம், மொழிச் சிக்கல் பற்றி அரசியல் திட்டமும் பிற சட்டங்களும் யாது கூறுகின்றன என்பதைத்தான் கவனித்துத் தீர்ப்பு வழங்கும். அமைச்சர்கள் அளித்த உறுதி மொழிகளைப் பற்றி நீதிமன்றம் துளியளவும் கவலைப் படத் தேவையில்லை — கவலைப்படுவதும் முறையல்ல. இதுதானே, சட்டப்படியுள்ள நிலைமை ? இத்தகைய நிலைமையில், சட்டத்தையும், அரசியல் திட்டத்தையும், நீதி மன்றங்களையும் பொறுத்த அளவில், அமைச்சர்களின் உறுதிமொழிகளுக்கு மதிப்பு இல்லை என்பது வெள்ளிடைமலை அல்லவா ?

இந்த உறுதிமொழிப் பிரச்சினை பற்றித் "தினமணி" ஏடு, அதனுடைய 13—2—1965 இதழில் எழுதியுள்ள தலையங்கத்தின் பின்வரும் பகுதி, நிலைமையை அழுத்தந்திருத்தமாகவும் தெள்ளத் தெளிவாகவும் எடுத்து விளக்குகிறது.—

"மந்திரியைக் கேட்காமலே, சர்க்காரின் பேரால் உத்தரவுகள் போட, சர்க்கார் காரியதரிசிகளுக்கு அதிகாரம் உண்டு. தமது உத்தரவு சட்டப்படி சரியா என்பதை மட்டுமே பார்த்துக்கொண்டு அவர்கள் பல உத்தரவுகள் போடமுடியும். ஆகையால் நேருஜியும் சாஸ்திரியும் என்ன சொல்லியிருந்தாலும், அது ஓர் உத்தரவாக இருந்தாலொழிய, சட்டத்துக்குப் பொருந்திய உத்தரவாக இருந்தா லொழிய, காரியதரிசிகள் என்ன செய்வார்கள், என்ன செய்யமாட் டார்கள் என்பது, அந்தந்தக் காரியதரிசியின் அபிமானங்களையும் வெறுப்புக்களையும் பொறுத்ததாகவே இருக்கும்.

"உதாரணமாகச் சமீபத்தில் டில்லி சர்க்கார் காரியாலயத்தி லிருந்து வெளியான சில சுற்றறிக்கைகளும் உத்தரவுகளும் மந்திரி களைக் கேட்காமலே வெளிவந்திருக்கின்றன. அவையெல்லாம் சரி யானவையல்ல என்று மந்திரிகள் சொல்லலாம். ஆனால் அவை சட்ட விரோதமானவை யென்று சொல்லமுடியாது. அந்த உத்தரவுகளை வெளியிட்ட அதிகாரியைத் தண்டிக்கவும் முடியாது. ஏனென்றால் அவர்கள் செய்தது, அவர்களது அதிகாரத்துக்கு உட்பட்ட செய் கையே.

"சாகித்திய அகாடமியிலிருந்து சென்னையில் உள்ள ஒரு சங்கீத வித்வானுக்கு ஹிந்தியில் கடிதம் வந்திருக்கிறது என்பதைக் கேள்விப்பட்ட ஒரு யூனியன் மந்திரி ஆச்சரியம் அடைந்து, அது முற்றிலும் அசட்டுத்தனம் என்று கூறினாராம். இவர் ஆச்சரியப்

படலாம். ஆனால் சட்டப்படி அவ்வாறு இந்தியில் எழுதியது தவறு என்று சொல்ல முடியாது."

"தினமணி"யின் தலையங்கத்தில் காணப்படுகிற இந்த வாசகங்களைவிடத் தெளிவாக எப்படி உறுதிமொழிப் பிரச்சினையை விளக்க முடியும்?

இந்தத் தலையங்கத்திலிருந்து ஓர் உண்மை, விளக்கமாகத் தெரிகிறது. "ஆங்கிலம் மட்டுமே இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக இருக்கும்" என்கிற விதியை இந்திய அரசியல் திட்டத்தில் இணைத்து, அந்த விதிக்கு முரணாக உள்ள பிற விதிகளை அகற்றுவது என்கிற ஒரே ஒரு ஏற்பாட்டின் மூலம்தான் தென்னக மக்களின் அச்சங்களைப் போக்க முடியுமே தவிர, உறுதி மொழிகளாலோ, விளக்க உரைகளாலோ அல்ல என்பதுதான், அந்த உண்மை.

இந்திய அரசாங்கத் தலைவர்கள் பின்பற்ற வேண்டிய பாதை— அரசியல் திட்டத்தைத் தக்க முறையில் திருத்தியாக வேண்டிய கட்டாயம், தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

இப்போது தேவைப்படுவதெல்லாம், நியாயமான அந்தப் பாதையில் செல்வதற்கு உரிய நடுநிலை உள்ளமும், ஜனநாயக உணர்ச்சியும், ஓரளவு துணிச்சலுமே ஆகும்.

## கவிஞர் கோல்ரிட்ஜ் பாடுகிறார்

பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் தோன்றி வளர்ந்து மாண்டு மடிந்து விட்டன. மனிதனும் அவற்றை மறந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகள் சென்றுவிட்டன. பிறகு அகழ்வாராய்ச்சியாளர்கள் பூமியைத் தோண்டிப் பொறுமையோடு சோதித்துப் பார்த்து அவற்றின் சின்னங்களை இப்போது நமக்குக் காட்டுகிறார்கள். ஆனால், சாம்ராஜ்யங்கள் அழிவுற்றாலும் எத்தனையோ கருத்துக்களும் கற்பனைகளும் அழியாது இன்றளவும் சிரஞ்சீவியா யிருக்கின்றன. மேரி கோல்ரிட்ஜ் பாடுகிறார்:

"எகிப்து எங்கே, கிரீஸ் எங்கே, திராய்நகர் எங்கே? மணிமுடி தரித்த ரோமாபுரி எங்கே? வெனிஸ் நகரின் செருக்கு எங்கே! எல்லாம் மண்ணோடு மண்ணாயின.

ஆனால், அவற்றின் மணி வயிறு வாய்த்த குழந்தைகள் கண்ட கனவும் புனைந்த கவிதையும்—

நிலையற்றனவே, சத்தற்றனவே, பயனற்றனவே, நிழல் போன்றனவே,

காற்றில் கலக்கும் சூனியமே என்று பிறர் நினைத்தார்கள்.

ஆனால், அவை என்றும் அழியாவரம் பெற்றனவே.

—நேருஜி, உலக சரித்திரம்.

# காவிரியும் கரிகாலனும்

பி. ஸ்ரீ.

காவிரி ஆற்றில் வெள்ளம் பெருகி வரும் காட்சி விவசாயிகளான நம் மக்களுக்குப் பெருங் குதூகலத்தை நெடுங்காலமாக அளித்து வந்திருக்கிறது. இந்த ஆற்றங்கரை நாகரிக வளர்ச்சியின் ஒரு சிறந்த நினைவுக்குறி ஆடிப் பெருக்கு விழா. இப்பண்டிகை ஆதியில் காவிரிப் பெருக்கு விழாவாகக் காவிரி தீரவாசிகளால் கொண்டாடப் பெற்றதுதான். பல்கலைக் கழகத் தமிழகராதியில் இந்த விழாவின் பெயர்கள் இரண்டுக்கும் 'ஆடிமாதம் 18ம் பெருக்கு' என்றே பொருள் கூறப்படுகிறது. தமிழ் நாட்டின் தலை சிறந்த ஆறு காவிரிதானே.

இப்பண்டிகை ஆதியில்காவிரிப் பெருக்கு விழாவாகக் காவிரி தீரவாசிகளால் கொண்டாடப் பெற்றதுதான். பல் கலைக் கழகத் தமிழகராதியில் இந்த விழாவின் பெயர்கள் இரண்டுக்கும் 'ஆடி மாதம் 18ம் தேதியில் நிகழும் காவிரிப் பெருக்கு' என்றே பொருள் கூறப்படுகிறது. தமிழ் நாட்டின் தலை சிறந்த ஆறு காவிரிதானே.

காவிரி, வைகை, தாம்பிரபருணி என்ற பொருநை நதி, பெண்ணை, பாலாறு என்ற ஐந்து நதிகள் நாட்டை வளமுறச் செய்கின்றன என்பதை நமது மறுமலர்ச்சிக் கவி பாரதியார் பின்வரும் இன்னிசைப் பாடலால் தெரிவிக்கிறார்.

காவிரி தென் பெண்ணை பாலாறு
தமிழ் கண்டதோர் வையை
பொருநை நதி—என மேவிய ஆறு
பல ஓடத் திருமேனி செழித்த தமிழ்நாடு.

இந்த ஆறுகளில் காவிரியை முதன்மைத் தோன்ற வைத்துக் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத் தக்கது.

காவிரி முதலான ஆறுகளால் தமிழ் நாட்டுக்கு மேனி செழித்தது மட்டுமா? நாகரிகமும் பண்பாடும் கலைகளும் செழித்து வந்திருக்கின்றன. தேவைக்கு மிகுதியான பொருள்களை உற்பத்திசெய்தவர்கள் அவற்றைப் பிறருக்குக் கொடுத்து தங்களுக்குத் தேவையான பொருள்களில் அவர்களிடம் உள்ளவற்றை வாங்கிக் கொள்ள விரும்பினார்கள். அதனால் பண்டமாற்று முறை தோன்றி, வாணிபமும் வளரலாற்று. கடல் ஓடியும் தம் முன்னோர் வாணிபம் செய்தார்கள். எனினும் சாராம்சத்தில் நமது நாகரிகம் கிராம வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட விவசாய நாகரிகம்தான்.

வடநாட்டு நாகரிகத்தையும் பண்பாட்டையும் பெரும்பாலும் இமய

மலையில் தோன்றும் கங்கை ஆற்றின் 'நன் கொடை' என்று கூறுவதுபோல, தமிழகத்தின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் முக்கிய அம்சங்களில் குடகு நாட்டில் தோன்றி காவிரிப்பூம் பட்டினம்வரை வந்து கடலில் கலக்கும் காவிரி ஆற்றின் 'நன் கொடை' என்று கூறுவது பொருத்தமே. இந்த 'நன் கொடையை' வைகை, தாம்பரபருணி முதலான நதிக் கரைகளில் வசித்து வந்திருக்கும் தமிழர்களும் பேணி வளர்த்து வந்திருக்கிறார்கள்.

'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்று இடைக்காலத்தில் வாழ்ந்த ஔவையார் கூறியிருப்பதும் ஆற்றங்கரைப் பண்பாட்டின் சிறப்பை வற்புறுத்துவதுதான் இத்தகைய பண்பாடு. காவிரியை அன்னையாகவும், தெய்வமாகவும் போற்றி வந்ததிலும் அதிசயமில்லை. தமிழ் அறிஞர்கள் காவிரியைத் தமிழ் நாட்டு கங்கை என்று போற்றியதுடன் கங்கையிற் புனித மாய காவிரி... அதாவது கங்கையைக் காட்டிலும் புனிதமான காவிரி ஆறு என்றும் கொண்டாடினர்.

கந்த புராணத்தில் காவிரியின் உற்பத்தி புராண ரீதியில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே காவிரி என்ற சொல்லுக்கு உண்மை பொருளும் கிடைக்கிறது. தேவேந்திரன் சூரபத்மனுக்கு அஞ்சிச் சீகாழியில் வந்து தங்கிச் சிவபெருமானுக்கு நந்தவனக்கைங்கரியம் செய்ய வேண்டுமென்று ஒரு பூஞ்சோலை அமைத்திருந்தானாம். பூஞ்சோலையை 'கா' என்ற ஓரெழுத்தொரு மொழியால் குறிப்பிடுவதும் உண்டு. நீர் வளக் குறைவால் அந்த 'கா' விரிந்து செழிக்கவில்லை.

அதற்கு வேண்டிய நீர் அகஸ்திய முனிவரின் கமண்டலத்தில் இருப்பதாக நாரதர் தெரிவித்தார். அதற்காக இந்திரன் வினாயகரை பிரார்த்திக்க, அவர் ஒரு காகத்தின் உருவங்கொண்டு அகஸ்தியரின் கமண்டலத்தைக் கவிழச் செய்தாராம். அந்த நீர் ஆறாகப் பெருகி வந்து இந்திரனின் 'கா' வை விரிந்து செழிக்கச் செய்ததாம். அதனால் தான் காவிரி ஆறு இப்பெயர் பெற்றது என்கிறது கந்த புராணம்.

காவிரி பெருகி வரும் இடமெல்லாம் சோலைகளாகவும் இயற்கை யழகு வாய்ந்த தலங்களாகவும் விரிந்திருப்பது வெளிப்படை. இந்த நதிக்கு இந்த அழகிய பெயரை இட்டவர்கள் தமிழர்களே என்றும் இது தமிழ்ப் பெயரே என்றும் கருதுவதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் 'காவேரி' என்ற பெயரை நினைவூட்டி. 'அது வடசொல் அல்லவா?' என்று கேட்பவர்களும் உண்டு.

'காவேரி' என்ற சொல்-வடிவம் ஆக்நேய புராணத்தில் காணப்படுகிறது. கவேர முனிவரின் மகள் காவேரி என்றும் அவள் புனித நதியாகித் தென்னகத்தை வளப்படுத்தினாள் என்றும் இந்த

வடமொழிப் புராணம் தெரிவிக்கிறது. எனவே, காவேரி வடசொல்தான் என்பர். உண்மை என்னவென்றால், காவேரி, என்ற வட சொல் காவிரி என்ற தமிழ்ச் சொல்லின் சிதைவுதான்.

பல சொற்கள் வட மொழியிலிருந்து தமிழுக்கு வந்திருக்கின்றன. சில சொற்கள் தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்றிருப்பதும் உண்மைதான். இத்தகைய சொற்களில் காவிரியும் ஒன்று. சங்க காலத்திற்குப் பின்தோன்றிய தமிழ் இலக்கியங்களில் காவேரி என்ற இரண்டு சொல்—வடிவங்களையும் காண்கிறோம். ஆனால் காவிரி என்ற சொல் வடிவைத்தான் சங்க காலத்தில் காண்கிறோம். அகநானூரில் சோழ மன்னரின் துறைமுகப் பட்டினமான காவிரிப்பூம் பட்டினம் பிரஸ்தாபிக்கப்படுகிறது. இதன் பிற்காலப் பெயர்தான் காவேரிபட்டணம்.

காவிரி குடகுமலைச் சிறுமிதான். இச்சிறுமி தவழ்ந்தும் தத்தித்தத்தி ஓடியும், விளையாடியும் மகிழ்கின்றாள் மைசூர் பிரதேசத்திலே. இவள் விளையாட்டு தமிழகத்தின் பகுதியான கொங்கு நாட்டையும்ஓரளவுவாழ்வித்திருக்கிறது. ஆனால் காவிரியின் கருணைக்குச் சிறப்பாக இலக்காயிற்று சோழநாடு. இந்த நதியைச் 'சோழர்' தம் குலக்கோடி என்று சிறப்பித்துப் பேசுகிறார் மணிமேகலை ஆசிரியர். 'சோழர் தம் தெய்வக் காவேரி' என்கிறார் சிலப்பதிகார ஆசிரியர்.

காவிரியால் சோழ நாட்டு மக்கள் நெடுங்காலமாகப் பெரும்பேறு பெற்று வந்திருக்கிறார்கள். சோழ நாட்டில் எங்கே பார்த்தாலும் காவிரித் தீர்த்தம்தான்; கிளை ஆறுகளாகவும், கால்வாய்களாகவும், பொய்கை முதலிய நீர்நிலைகளாகவும் காவிரித் தண்ணீர் மக்களை ஊட்டி வளர்த்து வந்திருக்கிறது தாய்ப்பால் போலே. இதனால்தான் சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவடிகள் காவிரியை, 'வளநாடு மகவாய் வளர்க்கும் தாய்' என்று வாயாரப்பாடி நெஞ்சார வாழ்த்தியுள்ளார்.

சோழ நாட்டை காவிரி நாடு என்றும், சோழனைக் 'காவிரி நாடன்' என்றும் தமிழ்ப் புலவர்கள் சிறப்பித்துப் பேசுகிறார்கள்.

> தண்ணீரும் காவிரியே
> தார்வேந்தன் சோழனே!

என்று பாடியிருக்கிறார்கள். சோழ நாட்டின் செல்வமும் சிறப்பும் தமிழ் நாடு முழுமைக்கும் வரப்பிரசாதமாக உதவின என்ற கருத்துடன் மணிமேகலை ஆசிரியர் காவிரியைத் 'தமிழ்ப்பாவை' (அழகிய தமிழ்ப்பெண்) என்றும் குறிப்பிடுகிறார்.

குடகுச் சிறுமி தமிழ்ப் பெண்ணாகிக் காவிரித் தாயாகி வளர்ந்து வந்திருக்கும் அழகு மிகவும் ரஸமான வரலாற்றுப் பகுதிகளில் ஒன்று. தலைக்காவிரி குழந்தைக் காவிரிதான். வளைந்தும் நெளிந்தும் செல்லும் மலைகளுக்கு இடையே தவழ்ந்தும் விளையாடி

யும் வந்து அருவிகளாகக் குதிக்கிறாள். உபநதிகள் பெற்றுப் பேராறாக ஓடி வருகிறாள் காவிரிப் பெண். அந்த நாளில் கிருஷ்ண ராஜ சாகரம் என்ற நீர்த்தேக்கம் இல்லை; அணைக்கட்டுகளும் இல்லை

கொங்கு நாட்டுப் பகுதியில் வேகமும் ஆழமும் அதிகரிக்கப் பெற்று கம்பீர அழகுடன் அகன்ற காவிரியாகவும் சோழ நாட்டில் பிரவேசிக்கிறாள். இதுவரையில் பெற்றிருக்கும் உபநதிகளின் காணிக்கையால் காவிரிச் செல்வி தன் முழு உருவமும் பெற்றுப் பேரழகுடன் தமிழர்களுக்குக் காட்சி வழங்குகிறாள். அரங்கனின் திருவடிகளை வருடி அருள் பெற்று காவிரித்தாய் தஞ்சைமாவட்டத்தை நோக்கி விரைகிறாள்.

கிளை நதிகள் இல்லாமலும் அணைகள் இல்லாமலும் சரியான கரைகள் அமைக்கப்பெறாமலும் இருந்த காலத்தில் காவிரி வெள்ளம் சோழநாட்டில் பெருஞ்சேதங்களை விளைவித்து வந்தது. அந்த அழிவுகளைத் தடுத்துக்காவிரிக்குக் கரைகளும் அணைகளும் அமைத்துப் பயன்படுத்திக் கொண்ட பெருமன்னர்களில் கரிகாற் சோழனின் பெயர் மிகவும் பிரசித்தமானது.

பழைய சோழ மன்னர்களில் தலை சிறந்து விளங்கிய இவன், போர்களிலும் பெரு வெற்றிகள் பெற்றான். சமாதான காலங்களிலும் நாட்டு மக்களுக்குப் பெரும் பணிகள் புரிந்து பேரும் புகழும் பெற்றான். தெலுங்கு நாட்டில் ஆட்சி செலுத்திய சோழர்களில் பல கிளையினரும் கூடத் தங்கள் முன்னோன் கரிகாலன் என்று கூறிக் கொண்டனர்.

பழைய தமிழ் இலக்கியம் இவன் புகழைப் பாடியிருக்கிறது. அந்தப் புகழ் நாளடைவில் கதைகளிலும் கற்பனைகளிலும் செழித்து வளர்ந்து வந்திருப்பதையும் காண்கிறோம். இந்தப் புகழின் ஒரு முக்கிய அம்சம், இவன் காவிரிக்குக் கரைகட்டி அந்த வெள்ளத்தை விவசாயிகளுக்குப் பெரிதும் பயன் படச் செய்து அவர்களை வாழ்வித்தான் என்பது.

கரிகாலனுடைய ஆரம்ப வாழ்க்கை அபாயகரமான சூழ்நிலையில் உருவாயிற்று. போர்க்களங்களில் வெற்றிமேல்வெற்றியாகப் பெற்றே இவன் தன் வீர சிங்காதனத்தை நிலைபெறச் செய்ய வேண்டிய தாயிற்று. இந்த வெற்றிகளால் கரிகாலன் தமிழகத்திற்கே ஒரு சக்கரவர்த்தி ஆகிவிட்டான் எனலாம். பிறகு நீடித்த சமாதான காலத்திலே இவனுடைய முயற்சிகள், காவிரிக்கு அணையும், கரையும் அமைப்பது போன்ற முயற்சிகள் போர்க்களத்து வெற்றிகளைப்போல் ஏர்க்களத்திலும் ஏராளமான வெற்றிகளைத் தேடிக் கொடுத்தன.

கரிகாலன் தன் தலைநகரமான உறையூரை அரண் செய்து புதுப்பித்துக் கொண்டான்; துறைமுகமான காவிரிப் பூம்பட்டினத்தில் வாணிபம் செழிக்கச் செய்தான்.

அரசு செலுத்துவதில் இவன் பொது மக்களின் நலத்தையே குறிக்கோளாகக் கொண்டிருந் தான் என்று சங்கப் புலவர்கள் ஒருமுகமாய்க் கூறுகிறார்கள். இந் தலட்சியம்தான், காவிரி வெள் ளத்தைக் கட்டுப்படுத்தி உழவர் களுக்கு வாழ்வு பெருமாறு செய்ய இவனைத் தூண்டியிருக்க வேண் டும். கரிகாலனுக்கு 'பெருவளத் தான்' 'திருமாவளவன்', என்ற பட்டப் பெயர்களும் உண்டு. சோழ நாட்டைச் சோழ வளநாடு ஆக்கிய தனிப் பெரும் புகழ் இந்த இரட்டைப் பெயர்களிலும் ஒளி வீசக் காண்கிறோம். இப் பெயர்களும், காவிரியின் கரை களை உயர்த்தி அழிவு வெள் ளத்தை அழகு வெள்ளமாகவும், பயன் தரும் வெள்ளமாகவும், இவன் செய்து கொண்டான் என் பதற்குச் சான்றுகளாய்க் கருதப் படலாம்.

பழைய சிலா சாஸனங்களி லிருந்து, கரை மீறிப் பாய்ந்த காவிரியை இவன் கட்டுப்படுத்தி யதை அக் காலத்து மக்கள் ஓர் அற்புதமாகவே மதித்தனர் என்று தெரியவருகிறது. இவனால் வெல் லப்பட்டிருந்த பல அரசர்களும் காவிரிக்குக் கரைகளை உயர்த்திய இவனது முயற்சிகளுக்குத் துணை புரிந்தனர் என்றும் தெலுங் குச் சாஸனங்கள் சில தெரிவிக் கின்றன.

கரிகாலனை போன்ற சோழ மன்னர்கள் காவிரி வெள்ளத்தை விவசாயத்திற்குப் பயன் படுத்திக் கொள்ள வேண்டுமென்று கரை கட்டினார்கள் என்பதும், அணைகள் அமைத்தார்கள் என்ப தும், கிளை நதிகள் வெட்டினார் கள் என்பதும், போர்க்களத் திலே ஒரு கண்ணும் ஏர்க்களத் திலே ஒரு கண்ணுமாயிருந்தார் கள் என்பதும் வரலாறு ஒப்புக் கொள்ளக் கூடிய செய்திகளே.

கரிகாற் சோழனைப் போன்ற வீர மன்னர்களின் போர் வீரத் தைக் காட்டிலும் காவிரிக்குக் கரை கட்டியது போன்ற சமா தான வீரம் தமிழ் மக்களுக்கு நிலைத்த நன்மையைச் செய்திருக் கிறது. இத்தகைய வீரப் பணி களின் பயனாக, காவிரியில் புது வெள்ளம் பெருக்கெடுத்து வரும் போது உழவர்கள் ஆரவாரத் துடன் பல தொழில்களில் ஈடு படுகிறார்கள் என்றும் மதகுக ளின் வழியாகச் சலசல வென்று காவிரி நீர் பாய்கிறது என்றும், ஆண்களோடு பெண்களும் புதுப் புனலாடி மகிழ்ச்சி அடைகிறார் கள் என்றும், இத்தகைய காட்சி களுக்கிடையேகாவிரி அன்னை கம் பீரமாக நடந்து கைவீசி வரு கிறாள் என்றும் பொருள்படப் பாடியிருக்கிறார், சிலப்பதிகார ஆசிரியர்.

காவிரி, இரு கரையும் நிறைந்த புது வெள்ளமாய்ப் பெருகி ஓடு கிறது. வெள்ளத்தை தாங்கிச் சமாளித்துக் கொள்ள முடியாமல் உடைந்து கொண்டிருந்த கரைப் பகுதிகளெல்லாம் நன்றாக உயர்த் தப்பட்டு இப்போது உறுதியாக

நிற்கின்றன. மக்கள் இப் புது வெள்ளத்தின் பண்பட்ட அழகும் பெருமிதமும் கண்டு காவிரி அம்மனுக்குக் காணிக்கையாக மங்கலப் பொருள்கள் வழங்கி வழிபடுகிறார்கள். இப் பேருவகையில் அரசன் கரிகாலனும் கலந்து கொள்கிறான்.

காவிரியை வாழ்த்திய பின் மக்கள் தங்கள் அரசனையும் 'காவிரி உள்ளவரையிலும் வாழ்க!' என்று வாழ்த்தினார்கள். கவிஞர் ஒருவர், 'காவிரி மணலினும் சிறக்க நின் ஆயுள்' என்று வாழ்த்துகிறார். காவிரி நாட்டின் நெல்வளம் மக்களை நீராட்டிப் பல வகைச் சித்திர அன்னங்களுடன் விருந்தாடத் தூண்டுகிறது.

கரிகாலன் தெய்வக் காவிரியை நோக்கித் தெய்வீக குதூகலம் அடைந்தவன் போல், 'இன்று—இந்த ஆடித்திங்களின் பதினெட்டாம் நாள் ஒரு புனித நன்னாள்' என்று கம்பீரக் குரலில் முழக்கம் செய்கிறான்.

இப்படிக் கொண்டாடப் பெறுகிறது, ஆதி ஆடிப் பெருக்கு விழா!

—"தினமணி"

## 'கீதாஞ்சலி'

எங்கு மனம் பயமற்றுத் தலை கம்பீரமாய் நிமிர்கிறதோ,

எங்கு அறிவு சுதந்திரத்தோடு ஒளிர்கிறதோ,

எங்கு உலகம் குறுகிய குடும்பப் பூசல்களால் பிளவுறாமல் உருப்பெற்றிருக்கிறதோ,

எங்கு உண்மையின் ஆழத்தினின்று சொற்கள் உதயமாகின்றனவோ,

எங்கே தளராமுயற்சி பரிபூரணத்தை நோக்கிக் கைகளை நீட்டுகின்றனவோ,

எங்கே பகுத்தறிவான தெள்ளிய ஓடை, சிறந்த பழக்கங்கள், பயங்கரப் பாலை மணலில் பாய்ந்து வறண்டு மறையவில்லையோ ?

எங்கே உள்ளத்தை நினது அருள் முடிவற்றுப் பரந்த சிந்தனையிலும் செயலிலும் ஈர்த்துச் செல்கிறதோ,

அந்தச் சுதந்திர சுவர்க்கத்தில் எந்தையே என் நாடும் விழிப்புறுமாக.

— ரவீந்திரநாத் தாகூர்

# லாலா லஜபதிராய்

## வாழ்க்கை வரலாறு

நமது நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் போது நாடு கடத்தப்பட்ட பெருமையும், போலீஸ் தடியடிப் பிரயோகத்தின் போது நெஞ்சில் அடிக்கப்பட்டு வீர மரணம் அடைந்த பெருமையும் ஒருங்கே பெற்றவர் லாலா லஜபதிராய். அவர் ஆற்றல் மிக்க மகோன்னதமான அரசியல் தலைவராக மட்டும் விளங்கவில்லை. பாரத நாட்டை மேன்மைப்படுத்துவதற்கு முற்பட்ட பல்வேறு சக்திகளுக்கும் முதல்வராகத் திகழ்ந்தார். அவரது வாழ்வும் தியாகமும் இன்றைய மக்களுக்கும் வருங்கால சந்ததியாருக்கும் உணர்ச்சியூட்டும் சக்தியாகும். அம்மாவீரரின் நூற்றாண்டு விழாவே ஜனவரி 28–ந் தேதி நாடு முழுதும் கொண்டாடப்பட்டது.

லாலா லஜபதி ராய் 1865–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28–ந் தேதி பஞ்சாப் மாநிலம் பிரோஸ்பூர் ஜில்லாவில் துடிகே என்னும் சிறு கிராமத்தில் பிறந்தார். அவர் அகர்வால் பனியா வகுப்பைச் சேர்ந்தவர். அதனால்தான் போலும் அவர் சமூக சீர்திருத்தவாதியாகவும் அரசியல் தலைவராக இருந்தும் கூட கைத்தொழில், நிதி இயல் முதலிய விஷயங்களில் அவருக்கு நிரம்ப ஆர்வமும் ஈடுபாடும் இருந்தது. இவர் தமது தாய் தந்தையர்பால் பேரன்பு கொண்டவர். இவரது தாய் ஹிந்து தர்ம நெறிக்கேற்ற கிரக ராணியாக விளங்கினார். இவரது தந்தையார் முன்ஷி ராதாகிருஷ்ணன் அரசாங்கப் பள்ளி ஒன்றில் பாரசீகம், உருது போதிக்கும் ஆசிரியராக இருந்தார். உருதுவில் நல்ல பயிற்சி உள்ளவர். பல நூல்களும் எழுதியவர்.

### கல்லூரி ஏற்படுத்தினார்

லஜபதிராய் இளமையில் பலவீனமான உடம்போடும் போதிய வசதிகள் இல்லாமலும் இருந்தார். ஆனால் படிப்பில் மிகுந்த கெட்டிக்காரர். பஞ்சாப் சர்வகலாசாலையில் படித்துப் பட்டம் பெற்று தமது 18 வது ஆண்டில் வழக்கறிஞரானார். குடும்ப பாரம்பர்யத்தின் மூலம் பெற்ற ஒழுக்கம், மதி நுட்பம் ஆகிய பண்புகளும், கல்வி, சுற்றுப்புற சூழ்நிலை ஆகியவை மூலம் படிந்த குணங்களும் அவரது வளர்ச்சியை உருவாக்கின. அக்காலத்தில் வாழ்ந்த சமய ஞானிகளின் போதனைகள் அவர் கருத்தை ஈர்த்தன. கல்வி, சமூகம், அரசியல் முதலியவைகளில் சீர்திருத்தப் பணிகளில்

அவர் அக்கறையும், ஈடுபாடும் கொண்டார். மாணவராக இருந்த போதே ஆர்ய சமாஜஸ்தாபக ரான சுவாமி தயானந்தரின் உப தேசங்களால் கவரப்பட்டார்.

லஜபதிராய் வெகு விரைவில் வக்கீல் தொழிலில் பிரபலமடைந் தார். ஆர்ய சமாஜப் பணிகளில் பங்கு கொண்டார். 1892ல் லா கூரில் குடியேறி அங்கிருந்து வக் கில் தொழில் புரிந்து வந்தார். 1902–லிருந்து அவர் கவனம் தேச சேவையில் ஈடுபட்டது. தொழில் மூலம் பெற்ற வருமா னத்தை அவர் தேசப் பணிகளுக் குச் செலவிட்டார்.

## யுத்தகளப் பேச்சு

"வரட்டும், அவர்கள் வரட் டும், வரட்டும்! நம் நாட்டை, இந்தத் தீவை, என்ன பாடு பட்டாவது காத்தேதீருவோம். கடற்கரையில் நின்று அவர் களை (ஜெர்மானியரை) எதிர்ப் போம். அவர்கள் கப்பல்களி லிருந்து வந்து இறங்கும் இடங் களில் நின்று எதிர்ப்போம்; வயல்களிலும் தோட்டங்களி லும் நின்று அவர்களை எதிர்ப் போம். தெருக்களில் நின்று போராடுவோம்; மலைகள் மீதும், குன்றுகள் மீதும் தங்கியிருந்து அவர்களை எதிர்ப்போம். ஆனல், பணிய மாட்டோம். ஒரு காலும் நாம் பணியமாட்டோம்."

—வின்ஸ்டன் சர்ச்சில்

லாகூர் டி. வி. ஏ. கல்லூரி அமைப்பதில் லஜபதிராய் பெரும் பங்கு எடுத்துக் கொண்டார். கல் லூரி நிறுவன உபதலைவராகவும், கௌரவக் காரியதரிசியாகவும் கௌரவப் பேராசிரியராகவும் பணியாற்றினர். கல்லூரிக்கு நன் கொடைகள் அளித்தார். அமெரிக்க நாட்டுக் கல்வி முறை யை ஆராய்ந்து வர 1905ல் அமெரிக்கா சென்றார். திலகர் அரசியல் பள்ளியை ஏற்படுத்திய வரும் இவரே.

ஏழைகள் பால் பேரன்பு கொண்டவர் லஜபதிராய். பல அனாதை விடுதிகளை ஏற்படுத்தி னர். 1901ல் பஞ்சாப் பிரதேசப் பகுதிகளை எல்லாம் நேரில் பார்த்து விட்டு வந்தவர் என்ற முறையில் பஞ்ச நிவாரணக் கமி ஷன் முன்பு சாட்சிய மளித்தார். 1905ல் கங்ரா பூகம்பத்தை யடுத்து, நிவாரண வேலைகளில் பெரும்பங்கு எடுத்துக்கொண் டார்.

## இங்கிலாந்தில் காங்கிரஸ் பிரசாரம்

1888 ஆம் ஆண்டில் லஜபதி ராய் காங்கிரசில் சேர்ந்தார். காங் கிரஸ் மகாசபைக் கூட்ட நட வடிக்கைகளில் தீவிர பங்கெடுத்து பிரபலம் அடைந்தார். இந்திய மக்களின் அரசியல் குறைகளைப் பிரிட்டிஷ் மக்களிடம் எடுத் துரைப்பதற்காக 1905ல் இந்திய தேசிய காங்கிரஸ் பிரிட்டனுக்கு அனுப்பிய,குழுவில்லஜபதிராயும்

இடம் பெற்றார். இந்தப் பயணத்தில் தமது செலவுகளை அவர் தாமே ஏற்றுக்கொண்டார். அவரும் கோகலேயும் பிரிட்டனில் பல்வேறு பகுதிகளில் சுற்றுப் பிரயாணம் செய்து பிரிட்டிஷ் ஏதேச்சாதிகார ஆட்சியால் இந்திய மக்கள் படும் அவதிகளை பிரிட்டிஷ் மக்கள் மனதில் படும்படியாக எடுத்துரைத்தனர். இவரது வாக்கு வன்மை அப்பொழுது மிக நல்ல முறையில் பயன் பட்டது.

## தேசப் பிரஷ்டம்

இங்கிலாந்திலிருந்து திரும்பிய பின்பு லஜபதிராய், நாட்டின் அரசியல் முன்னேற்றத்திலும் பெரும் பங்கு கொண்டார். 1905ல் கோபாலகிருஷ்ணகோகலே தலைமையில் நடந்த காசி காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் வங்கத்தில் பிரிட்டிஷ் அடக்கு முறையைக்கண்டிக்கும் தீர்மானம் கொண்டு வந்தார். சுதேச இயக்கத்தில் மிகத் தீவிரமாக ஈடுபட்டார். இது கண்டு மிரண்ட பிரிட்டிஷார், இவரைப் புரட்சிக்காரர் என்றனர். பஞ்சாப் காலனித்துவ சட்டத்தையும் பாசன தீர்வை அதிகரிப்பையும் எதிர்த்தார். இது காரணமாக 1907 மே மாதம் 9–ந் தேதி இவர் மாண்டலேவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

ஆறு மாத கால தேச பிரஷ்டம் லஜபதிராயின் உடல் நிலையை வெகுவாகப் பாதித்து விட்டது. உடல் நல மடைந்த பின்பு காங்கிரஸ் தீவிர வாதிகளுக்கும் மிதவாதிகளுக்கு மிடையே இணைப்புக்காக இவர் பாடுபட்டார். ஆனால் இவரது இணைப்பு நோக்கம் நிறைவேறவில்லை. அதனால் ஏமாற்றமடைந்த லஜபதிராய் தமது கவனம் முழுவதையும் "தேசிய கல்வி" விஷயத்தில் திருப்பினார். பல தேசியப் பள்ளிகளை ஆரம்பித்தார். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் முன்னேற்றத்திலும் கவனம் செலுத்தினார். ஜப்பான், அமெரிக்கா நாடுகளில் கல்வி முறையை ஆராய்ந்து வா

---

" ஆபத்து மிக்க வாழ்க்கை வாழவேண்டும். நிகழ்வதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். அஞ்சாதீர்கள். எல்லாம் நன்றாக முடியும்.

—வின்ஸ்டன் சர்ச்சில்

போரில் நெஞ்சுறுதி; தோல்வியைப் பொருட்படுத்தாமலிருத்தல்; வெற்றியில் பெருந்தன்மை; சமாதான காலத்தில் நல்லெண்ணம் ஒவ்வொரு வீரனுக்கும் வேண்டும்.

—வின்ஸ்டன் சர்ச்சில்

இரத்தம், கண்ணீர், உழைப்பு ஆகியவற்றைத் தவிர உங்களுக்குத் தருவதற்கு என்னிடம் ஒன்றுமில்லை.

—வின்ஸ்டன் சர்ச்சில்

அந்த நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார்.

## தாயகம் திரும்பத் தடை

லஜபதிராய் வெளி நாடுகளில் இருந்த சமயத்தில் முதலாவது உலக மகா யுத்தம் மூண்டது. யுத்த சமயத்தில் லஜபதிராய் இந்தியா திரும்பினால் தங்கள் நலனுக்குப் பாதகம் ஏற்படும் என்று கருதிய பிரிட்டிஷ் ஆட்சி, சொந்த நாடு திரும்ப அவருக்குத் தடை விதித்தது. எனவே 5 ஆண்டு காலம் வெளி நாடுகளில் வசிக்கும் படியாக நிர்ப்பந்தம் லஜபதிராய்க்கு ஏற்பட்டது. அந்த ஐந்தாண்டு காலத்தில் அவர் இந்தியா ஹோம் ரூல் லீக் போன்ற அமைப்புகளை ஏற்படுத்தி பிரிட்டிஷ் சூழ்ச்சிகளை வெளிப்படுத்தினார். வெளி நாடுகளில் இருந்தபடி இந்திய சுதந்திரத்துக்காகப் பாடுபட்டார். இந்திய தகவல் நிலையம் ஏற்படுத்தினார். வெளிநாடுகளில் இருந்த போது பல புத்தகங்களும் எழுதினார்.

யுத்தம் முடிந்து 1920 பிப்ரவரி 20ல் லஜபதிராய் இந்தியா திரும்பியபோது தேச மக்கள் மகத்தான வரவேற்பு அளித்தனர். அவர் நாட்டில் இல்லாத போது ஏற்பட்ட நிகழ்ச்சிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின்பால் அவர் வெறுப்புக் கொள்ளும்படி செய்தன. ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ச்சி நடந்தது. அநியாக் கிரமத்துக்குக் காரணமான அதிகாரிகளை பிரிட்டிஷார் கண்டிக்கக்கூட இல்லை. எனவே லஜபதிராய் பிரிட்டிஷாரின் போக்கில் நம்பிக்கை இழந்தார். ஒத்துழையாமை இயக்கத்தில் முன்னணியில் நின்றார். 1920ல் நாட்டை எதிர் நோக்கிய பிரச்னைகளை விவாதிக்க காங்கிரஸில் விசேஷ மகா சபை கூட்டம் கல்கத்தாவில் நடைபெற்றது. இவரே காங்கிரஸ் அக்கிராசனராக இருந்து நடத்தி வைத்தார்.

ஒத்துழையாமை இயக்கத்தையொட்டி அந்நிய அரசாங்கத்தில் அடக்குமுறைகள் அதிகரித்தன. சிறைகள் நிரம்பின. லஜபதிராய் உட்பட பல தலைவர்கள் சிறைப்பட்டனர். லஜபதிராய் சிறையிலிருந்து விடுதலை ஆகிய போது ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தப்பட்டிருந்தது. சிற்சில இடங்களில் வகுப்புப் பூசல்கள் நிகழ்ந்தன. ஹிந்துக்களிடையே ஒத்துழைமை ஏற்படுத்தும் பணியில் லஜபதிராய் ஈடுபட்டார். ஹிந்து மகாசபையில் அவர் தமது பணியின் மூலம் அந்த ஸ்தாபனம் முற்றிலும் வகுப்பு வாத ஸ்தாபனம் ஆகாமல் தவிர்த்தார். வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தையும் லட்சுமணபுரி உடன் பாட்டையும் எதிர்த்தார்.

## வீர மரணம்

1925ல் லஜபதிராய் சுயராஜ்யா கட்சியில் சேர்ந்தார். ஆனால் பண்டித மோதிலால் நேருவுடன் கருத்து வேறுபாடு காரணமாக கட்சியிலிருந்து வெளியேறினார். சைமன் கமிஷன் நியமனம் பற்றி

அறிந்ததும் அவர் கொதிப்புற்றூர். சைமன் கமிஷன் எதிர்ப்பணியின் குரலாகச் செயல் பட்டார். சைமன் கமிஷனைப் பூர்ணமாக பகிஷ்கரிக்க விரிவான ஆயத்தங்கள் செய்தார்.

1928ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ந் தேதி லாகூரில் சைமன் கமிஷன் பகிஷ்கார ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கி நடத்திச் சென்றபோது போலீஸ் தடியடிப் பிரயோகத்தில் நெஞ்சிலே அடிபட்டார் லஜபதிராய். அதன் விளைவாக நவம்பர் 17ந் தேதி மரணமடைந்தார்.

## லஜபதிராய் ஏற்படுத்திய மக்கள் ஊழியர் சங்கம்

லாலா லஜபதிராய் 1921ல் மக்கள் ஊழியர் சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தினூர். மகாத்மா காந்தி அச்சங்கத்தை ஆரம்பித்து வைத்தார். தேசப் பணிக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களுக்காக ஓர் உன்னத வாழ்க்கை நெறி அதில் வகுத்துத் தரப்பட்டது.

தேசத்தின் கல்வி, கலாச்சார, சமூக பொருளாதார, அரசியல் முன்னேற்றத்துக்காகப் பாடுபடும் தேசிய மிஷனரி தொண்டர்களைத் திரட்டுவதும் அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதும் அச்சங்கத்தின் நோக்கமாகும்.

தங்கள் சொந்த முன்னேற்றத்தையோ, லோகாயத நலன்களையோ கருதாமல், தங்கள் வாழ்நாள் முழுவதையும் தேசப் பணிக்கு அர்ப்பணிப்பவர்களைத் திரட்ட வேண்டும் என்ற கருத்தில் இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

சங்கத்தின் ஆயுள் உறுப்பினர்கள், சங்கம் தரும் சொற்ப ஊதியத்தில் திருப்தியடைந்தவர்களாய் எளிய தியாக வாழ்வு வாழ்கிறூர்கள்.

மக்கள் ஊழியர் சங்கம் ஏற்படுத்தி 43 ஆண்டுகள் ஆகின்றன. இன்று அதில் 18 ஆயுள் உறுப்பினர்களும் 71 உதவியாளர்களும் இருக்கின்றனர். இச்சங்கத்துக்கு 9 மாநிலங்களில் மொத்தம் 21 கிளைகள் இருக்கின்றன. சென்ற 3–4 ஆண்டுகளில் 7 மாநிலங்களிலிருந்து 12 உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மற்ற மாநிலங்களிலிருந்து மாநிலத்துக்குக் குறைந்தது ஒருவர் வீதமாவது சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

மக்கள் ஊழியர் சங்கத்தில் சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் வருமாறு:

காலம் சென்ற ஸ்ரீ புருஷோத்தமதாஸ் தாண்டன், ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி, ஸ்ரீ பிஸ்வநாத் தாஸ், ஸ்ரீ பலவந்தராய் மேத்தா, ஸ்ரீ அல்குராய் சாஸ்திரி, காலம் சென்ற ஸ்ரீ ஹரிஹரநாத சாஸ்திரி, காலம் சென்ற ஸ்ரீ கோபபந்து தாஸ், ஸ்ரீ ராதாநாத், காலம் சென்ற லாலா அச்சிண்ட் ராம், ஸ்ரீ பர்சோத்தம்லால் சோந்தி, ஸ்ரீ பிரோஸ் காந்தி

# ஆவியீந்த தலைவனுக்கு

## தலைசிறந்த ராஜதந்திரி

"லாலா லஜபதிராய், மனிதர்களின் உள்ளங்களையும், தேசங்களின் போக்குகளையும் ஊடுருவிப் பார்க்கும் ஆற்றல் படைத்திருந்தார். வைரம் போன்ற உறுதியும், எந்தக் காரியத்தையும் திருந்தச் செய்யும் வல்லமையும் கொண்டு, தலைசிறந்த ராஜதந்திரியாகத் திகழ்ந்தார். ஐரோப்பாவில் தோன்றிய மகோன்னதமான அரசியல் தலைவர்களுக்கு சரிநிகரானவராக அவரை நான் கருதுகிறேன். (ஐரோப்பாவில் இன்று அவரைப் போன்ற உறுதிவாய்ந்த தலைவரில்லை. 1929) "அபரிமிதமான செயல் திறன் தங்களுக்குத் தான் உண்டு என்று கருதுவது மேற்கு நாட்டவரின் வழக்கம். லஜபதிராய் அத்தகைய செயல் திறன் பூராவையும் படைத்து அதற்குமேல் புராதன இந்தியாவின் ஆன்மீக சம்பத்தைப் பெற்றிருந்தார். பழங்கால ரிஷி புங்கவர்கள், மாவீரர்கள், புடம் போட்டெடுத்த தியாக சிலர்களை நினைவு படுத்தும் பண்புகள் அவரிடம் உள்ளன.

—ரோமெய்ன் ரோலன்டு

## மகோன்னத தலைவர்

"லாலா லஜபதிராய் மகோன்னதமான தலைவர். அவரது ஸ்தாபனத்தை வேறு யாராலும் நிரப்ப முடியாது. இவ்வளவு பரந்த அளவில் பொதுநலத் தொண்டாற்றியவர்கள் வேறு யாருமேயில்லை. அவருடைய அளப்பரும் ஆற்றல் ஒரு குறுகிய பாதையோடு நின்று விடாமல் தேசம் முழுவதற்கும் பயன்படும் நிலைமை வாய்ந்ததற்கு அவரது களங்க மற்ற தேசபக்தியே காரணமாகும். அரசியல், பத்திரிகைத் துறை இரண்டிலும் தலைமை ஸ்தாபனம் அவரைத் தேடி வந்தன."

—பண்டித மோதிலால் நேரு

"லாலா லஜபதிராய் தமது தாய் நாட்டின்பால் பேரன்பு கொண்டிருந்தார். தன்னலமின்றி வாழ்நாள் முழுதும் தேசத்துக்காகப் பாடு பட்டார். அவரது தூய நாட்டுப் பற்றும், சுதந்திர உணர்வும், ஆண்மையும், சத்திய மார்க்கமும் மக்கள் அனைவருடைய அன்புக்கும், பெரும் மதிப்புக்கும் அவரைப் பாத்திரமாக்கின".

—பண்டித மதன்மோகன் மாளவியா

## தனிப்பெரும் தலைவர்

"மற்றவர்களுக்கு இல்லாத ஒரு பெருமை லாலா லஜபதிராய்க்கு உண்டு. அதாவது ஆபத்துப் பாதையில் அவர் மக்களை அழைத்துச் சென்றபோது, மக்

களைப் பாதுகாப்பான நிலையில் வைத்து தாம் தன்னந்தனியாக முன்னால் சென்றார். தாக்குதலின் வேகத்தைத் தாம் ஏற்றார்.'' தாக்கும்படி நீங்கள் யோசனை கூறும்போது ''செல்லுங்கள்'' என்று சொல்லாதீர்கள்; ''வாருங்கள்'' என்று சொல்லுங்கள்'' என்பதாக சார்லஸ் பிராட்லா கூறிய பொன் மொழிப்படி அவர் வாழ்ந்து காட்டினார்.

—டாக்டர் அன்னி பெசன்ட்

## உணர்ச்சியூட்டும் சக்தி

''லாலாஜி தாயகத்துக்குச் சேவை செய்தபடி உயிர் நீத்தார். அவருடைய தியாகமும், வாழ்வும் வருங்கால சந்ததியாருக்கு உணர்ச்சியூட்டும் சக்தியாக விளங்கும்''.

—டாக்டர் அன்சாரி

## நம் கடமை

''லாலா லஜபதிராய் தமது வாழ்வு வல்லமை அனைத்தையும் தேசத்துக்காகக் கொடுத்தார். அந்த தேச பக்தரின் நினைவு அழியாத பெருமை பெற்று நிற்கும்படிச் செய்வது தேசத்தின் கடமை.''

—அபுல்கலாம் ஆசாத்

## தேசநலனே பிரதானம்

''அவருடைய கருத்தை ஒருவர் ஒப்புக் கொள்ளலாம் அல்லது ஒப்புக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் அவரது சேவா உணர்ச்சியையும் தன்னலமற்ற தியாகத்தையும் யாரும் மதித்தே ஆக வேண்டும். லாலா லஜபதிராய் மன்னித்து மறக்கும் சுபாவம் கொண்டவர். கட்சியைவிட தேசத்தையே அவர் முதன்மையாகக் கருதினார்.

—தேஜ் பகதூர் சாப்ரு

## சர்வதேச நோக்கு

''சர்வதேச நோக்கும்,உண்மையான ஜனநாயக உணர்வும் கொண்ட தலைவர்கள் ஒரு சிலரே உண்டு. அவர்களில் முக்கியமானவராக லாலாஜி விளங்கினார். அவர் மனம் என்றும் ஏழைகள் நலத்தையே எண்ணிக் கொண்டிருந்தது''

—எச். எஸ். எல். போலக்

## ஆன்மிக எழுச்சியின் சின்னம்

''லாலா லஜபதிராயின் கருணை உள்ளமும், சுதந்திர ஆர்வமும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் பால் அவரது அளப்பரும் பரிவும், அவரை ஆன்மீக எழுச்சியின் சின்னமாகக் காட்டின. தேசத்துக்காக அவர் பெருந்துன்பம் அடைந்தார். எதற்கும் அஞ்

# அகம் குளிர அர்ச்சனை!

சியதில்லை; வருந்தியதில்லை. யதேச்சாதிகாரத்தின் கொடுங்கோன்மையும் ஒடுக்கப் பட்ட மக்களின் பலவீனமும் எந்த அளவுக்குப் போகக்கூடும் என்பதை உணரக்கூடிய பெரிய மனம் அவருக்கு இருந்தது"

—பதிக் லாரன்ஸ்

## சூரியன் உள்ளவரை......

"வானத்தில் சூரியன் உள்ள வரை, லாலா லஜபதிராய் போன்றவர்களுக்கு மரணமும் இல்லை. லாலாஜி என்ற சொல் ஒரு சக்தியைக் குறிக்கும். இளமையிலிருந்தே தேச பக்திதான் அவருடைய மதம். குறுகிய பாசபந்தம் அவருக்குக் கிடையாது. அவர் தாய்நாட்டை நேசித்தார். உலகையே நேசித்தார். அவரது தேசியம் சர்வதேச கண்ணோட்ட முடையது.

"பல்வேறு துறைகளிலும் அவர் சேவை செய்தார். அவர் சமய சீர்திருத்தவாதி; சமூக சீர்திருத்தவாதி. சமூக சமய சீர்திருத்தங்களில் அவருக்கு இருந்த ஆர்வம், அரசியலிலே பங்கெடுக்கும்படியான நிலைமையை ஏற்படுத்திவிட்டது. எனவேதான் நம்மில் பலரைப் போல அவர் அரசியல் வாதியானார். லாலா லஜபதிராய் இல்லாதபோது பொதுஜன இயக்கமே இல்லை. சேவை செய்வதில் அவரது ஆர்வம் இணையற்றது. அவர் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தினார். அடக்கி ஒடுக்கப் பட்ட மக்களுக்கு நண்பராக இருந்தார். வறுமையை ஒழிப்பதில் தீவிர கவனம் செலுத்தினார். அரசியலில் அவர் இன்றியமையாத சக்தியாகத் திகழ்ந்தார். எதற்கும், அஞ்சாமல் அவர் தம் கருத்துக்களைக் கூறுவார். துன்பங்களை ஏற்பது என்பது வழக்கமாகவோ, அல்லது ஒரு முறையாகவோ இல்லாத நாட்களிலேயே அவர் துன்பங்களை ஏற்றார்.

"தேச முன்னேற்றத்துக்குப் பல்வேறு துறைகளிலும் பணியாற்ற அவர் ஏற்படுத்திய மக்கள் ஊழியர் சங்கத்தை நாம் மறக்க இயலாது. அந்தச் சங்கத்தைப் பற்றி அவர் பெரு நம்பிக்கை கொண்டிருந்தார். இந்திய நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் இருந்த இளைஞர்கள் இந்தச் சங்கத்தில் சேர்ந்து ஒன்றுபட்டு பொதுப் பணியாற்ற வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால் தாம் மேற்கொண்ட பெரும் வேலையை ஸ்திரமான முறையில் அமைக்க அவருக்கு காலம் இல்லாமல் போய் விட்டது"

—மகாத்மா காந்தி

## சொல்லும் செயலும் !

தேச சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட மிகப் பெரிய தலைவர்களுள் ஒருவர். 'இருதயத்தைப் பறித்தாலும் இந்திய சுதந்தரத்தை விடமாட்டேன் !' என்ற தியாக புருஷர் மட்டுமல்ல, அப்படியே தம் ஆவியை ஈந்தவரும்கூட.

—திரு. வி. க

# நோயற்ற வாழ்வே

## நவநாகரீக வாழ்க்கையால் நரம்புத் தளர்ச்சி நோய்! ஏமாற்றம், தோல்வி முக்கிய காரணம்!

ஸ்டட்கார்ட் (டாட்)—இந்தக் காலத்தில் பெரும்பாலான மன உளைச்சலே வியாதிகளுக்குக் காரணம். மனக்கவலை, பீதி, அச்சம் ஆகிய மனோநிலை காரணமாக நரம்புத் தளர்ச்சி நோய் ஏற்படுகிறது. இவைகளை வெறும் மருந்து, மாத்திரைகளினால் மட்டும் குணப்படுத்தி விட முடியாது. அவர்களுக்கு மனோதத்துவப்படி சிகிச்சை அளிக்க வேண்டியிருக்கிறது.

### கவலை ஒரு நோய்!

நரம்புத் தளர்ச்சிநோய் ஏற்படுவதற்கான காரணங்களை மேற்கு ஜெர்மன் நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். வாழ்க்கையில் வெறுப்பு, ஏமாற்றம், தோல்வி, பரபரப்பு, மனக்கவலை, மனப்பிராந்தி, தூக்கமின்மை, ஆஸ்த்மா, இருதய, இரத்தக் கோளாறு ஆகியவைகளினால் 50% பேர் நோயுறுகிறார்கள். நவநாகரீக வாழ்க்கை நடத்துபவர்களிடையே நரம்புத் தளர்ச்சி நோய் அதிகமாகக் காணப்படுகிறது. இதற்கு மனோநிலையே முக்கிய காரணம்.

மேற்கு ஜெர்மனியில் நரம்புத் தளர்ச்சி நோயைக் குணப்படுத்துவதற்காக முதலாவது ஆஸ்பத்திரி ஸ்டட்கார்டில் நிறுவப்பட்டு வருகிறது. இதற்கு 11·25 இலட்சம் டாலர் செலவாகும். இன்னும் 2 ஆண்டுகளில் இது முடிவடையும். அகில உலகப் புகழ்பெற்ற 11 நிபுணர்கள் இங்குப் பணியாற்ற இசைந்திருக்கிறார்கள். மனோதத்துவ சிகிச்சை முறைகள் அனைத்தும் இங்கு கையாளப்படும். இங்கு ஒரே சமயத்தில் 100 நோயாளிகளுக்கு 6 முதல் 8 வார காலம் சிகிச்சையளிக்கலாம். ஒவ்வொரு நோயாளிக்கும் தனித்தனி அறை ஒதுக்கப்படும்.

இடோ உல்ரிச்

### நிம்மதி ஓர் மருந்து!

ஐரோப்பாவிலேயே முதலாவதாக அமையும் இந்த ஆஸ்பத்திரியுடன் இணைவாக விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடம் ஒன்றும் நிறுவப்படுகிறது. இக்கூடத்தின் வாயிலாக நிம்மதிக்கு வழிதேடப்படுகிறது.

# குறைவற்ற செல்வம்

# முதியோர் உணவு

**நம் இளமைக் காலந்தொட்டு சுகாதாரப் பழக்க வழக்கங்களை மேற்கொண்டிருந்தால், அவை பிணி, அகால மூப்பு இவற்றிற் கெல்லாம் எதிராக அரண்போல் நின்று நம்மைக் காக்கும்.**

"முதியோர்களின் உணவு பற்றி உங்கள் கருத்து என்ன?" என்ற கேள்வியை யாராவது நம்மிடத்தில் கேட்டால், "என்ன, அதைப் பற்றிச் சிந்திக்க அது அவ்வளவு முக்கியமான காரியமா?" என்று எண்ணத் தோன்றும். ஏதோ வயதானவர்கள் எதையாவது உண்டு, என்னத்தையாவது குடித்து, காலத்தை அவர்கள் விரும்பியபடியே போக்கிக் கொள்ளட்டும் என்ற பொருட்படுத்தாத தன்மையுள்ள போக்குத் தான் நம்மில் அனேகரிடம் காணப்படுகிறது. ஆனால் அது தவறாகும்.

பொதுவாக, வயது முதிர்ச்சி யடைந்தவர்களிடம் நாம் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, அவர்களுக்கு உடம்பில் ஏதோ சில கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை நன்றாக உணர முடிகிறது. ஆனால் சில ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்துவிட்ட பிறகு பிணியும் தளர்ச்சியும் முதுமைத் தன்மையும் தாமாக வந்துவிடக் கூடியவை என்பது கட்டாயமல்ல. நம் இளமைக் காலந் தொட்டு சுகாதாரப் பழக்க வழக்கங்களை மேற்கொண்டிருந்தால், அவை பிணி, அகால மூப்பு இவற்றிற்கெல்லாம் எதிராக அரண் போல் நின்று நம்மைக் காக்கும். நேர்மையுடன் நிதான வாழ்க்கை நடத்துபவர்கள் நல்ல முதிர் வயதில், அதாவது, எண்பது அல்லது தொண்ணூறு வயது வரை சுகமாக வாழ முடிகிறது. வைத்திய நிபுணர் ஒருவர் வயோதிகர் ஒருவரிடம், "தாங்கள் இவ்வளவு காலம் ஆரோக்கியமாக வாழ முடிந்ததின் இரகசியம் என்ன?" என்று கேட்டாராம். அதற்கு அப்பெரியார் "என்னிடம் 3 ஸீ-க்களும் (cinema, coffee, cigarette) கிடையாது; இதுதான் இரகசியம்" என்றாராம்! ஆனால் இவைகளால் மாத்திரம் ஒரு தனி மனிதனின் வாழ்வு அடக்கமற்றது, நிதானமில்லாதது என்று கூறிவிட முடியாது. தகாத உணவு வகைகளைத் தெரிந்தெடுத்து, மிதமிஞ்சி உண்டு, அளவுக்கு மீறி உடம்பை அலட்சியப்படுத்தி, போதுமான தூக்கம், உடற்பயிற்சி இல்லாமல் வாழ்க்கை நடத்துபவர்கள், ஒரு குடிகாரனைப் போலவே, தங்கள் உடம்பிற்குப் பெருந் தீங்கை விளைவித்துக்கொள்கிறார்கள். ஆம், வாழ்க்கையின் எத்துறையிலும் அடக்கம் தேவை.

ஓடி விளையாடும் சிறுவர் சிறுமியர்க்கு சக்தியின் தேவை அதிகம் என்பதை நாம் நன்கு அறிவோம். குழந்தைகள் வளரும் காலத்தில், அவர்களது உடலின் எடைக்குத் தக்கபடி, காலரி, அதாவது உணவுச்சத்து அளவு அதிகம் தேவைப்படுகிறது. ஆனால் வாலிபப் பருவம் தாண்டிய பிறகு இந்தக் காலரி அளவு குறைவாகவே வேண்டும். எனவே அக்காலத்தில் உட்கொள்ளும் உணவின் அளவு குறைவுபடாவிட்டால், உடம்பின் பருமன் அதிகரிக்கும் நிலை ஏற்படுகிறது.

பொதுவாக, முப்பது வயதைத் தாண்டியவர்களின் உடம்பு பருத்துவிடுவது அவ்வளவு விரும்பத்தக்கதல்ல. ஆனால் நாற்பது வயதுக்குப் பிறகு இந்நிலை ஆபத்தானது. அநேக வியாதிகளால் பீடிக்கப்படுவதற்கு இது அனுகூலமாயிருக்கிறது. அஜீரணத்தால் அல்லற்படும்முதியவர்கள் அபரிமிதமான கொழுப்புப் பொருட்களும் சத்துப் பொருட்களும் செறிந்த உணவினை முக்கியமாகத் தவிர்க்க வேண்டும். உடம்பின் வளர்ச்சிக் காலத்தில் தான் திசுக்களின் வளர்ச்சிக்குப் புரோட்டீன் பொருள் தேவை. பின்னர் உடம்பை நன்னிலையில் வைத்துக் கொள்வதற்கும், திசுக்களைப் பழுது பார்ப்பதற்கும் வேண்டிய அளவே அது அவசியம்.

மேற்கூறப்பட்ட செய்திகளை 40-ல் இருந்து 60 வயதிற்குட்பட்டவர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். மேலும் ஒரு நல்ல வைத்தியரிடம் ஆண்டிற்கு ஒருமுறை உடம்பைப் பரிசோதித்துக்கொண்டு, அவரது அறிவுரைகளைக் கவனமாய்க் கேட்டு, எச்சரிக்கைகளுக்குச் செவி சாய்த்து நடக்க வேண்டும். எடை மிகுதியால் வரும் சிக்கல்கள் நன்கு உணரப்பட்டு, அதற்கேற்றபடி உணவின் அளவும், தன்மையும், உடற்பயிற்சியும் அமைய வேண்டும்.

உணவு முந்திய ஆண்டுகளைப் போலவே, திட்டமிட்ட, ஆனால்

## காய்களில் வைட்டமின் சீ

(100 கிராம் காயில் வைட்டமின் இருக்கும் மில்லி கிராம் அளவு)

| | |
|---|---|
| கத்தரிக்காய் | 23 |
| கலியாணப் பூசணிக்காய் | 1 |
| நெல்லிக்காய் | 600 |
| பாகற்காய் | 88 |
| பூசணிக்காய் | 2 |
| மாங்காய் | 3 |
| முருங்கைக்காய் | 120 |
| வாழைக்காய் | 24 |
| வெண்டைக்காய் | 16 |
| வெள்ளரிக்காய் | 7 |

அளவிற்குட்பட்ட, புரோட்டீன் அதிகமில்லாத உணவாக இருக்க வேண்டும்.

அறுபது வயதைத் தாண்டிய வர்கள் தாங்கள் நடுத்தர வயதில் சாப்பிட்டது போல், அவ்வளவு அதிகமாகச் சாப்பிடாமல் இருக்க வேண்டும் என்பதை நன்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

முதியவர்களின் ஆகாரம் எளியதாகவும், போஷாக்குடைய தாகவும், விரைவில் ஜீரணிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். மல ஜலம் கழிப்பதில் ஒழுங்கீனம் ஏற்படுமானுல், குடல் கெட்டு, அதனுல் உடல் வலிமை குன்றி, அதன் காரணமாக, பல வியாதிகள் வர ஏதுவாகலாம். எனவே ஏராளமான கனிகளும், காய்கறிகளும் உண்பது மிகவும் நல்லது. ஆனுல் அவைகளைச் சாப்பிடு முன் சுத்தமாக்கிக்கொள்ள வேண்டும். குடல் எளிதில் அழற்சியடையக் கூடியதாய் இருக்குமானுல், முட்டைக்கோசு போன்ற முரடான காய்கறி வகைகள் விலக்கப்பட வேண்டும்.

பல முதியவர்களுக்குப் பற்கள் சொத்தையாகவோ, தேய்ந்தோ, வலிவிழந்தோ அல்லது பற்களே இல்லாமலோ இருக்கக் கூடும். அப்படிப்பட்டவர்களுக்கு எதையும் மென்று உண்பதில் சிரமம் ஏற்படும். எனவே மென்மையான உணவு வகைகளே இவர்களுக்கு மிகவும் ஏற்றவை. ஜீரண சக்தி மிகவும் குறைந்து காணப்பட்டால், உணவும் மிகக் குறைவாகவே கொள்ள வேண்டும். ஆனுல் இடையில் சூடான பாலும், பிஸ்கோத்துகளும் அல்லது ஒரு கோப்பை சூப்பும், வாட்டின ரொட்டித் துண்டுகளும் அல்லது பழ ரசம் முதலியவற்றைக் காலையிலோ, மத்தியானமோ அல்லது படுக்கைக்குப் போகுமுன்போ கொடுக்கலாம்.

வயதானவர்களில் அனேகர் கீல்வாதத்தாலும், மூட்டு வீக்கத்தாலும், மிஞ்சிய இரத்த அழுத்தத்தாலும், சில சமயங்களில் இதே போன்ற வேறு இரண்டு மூன்று வியாதிகள் வந்தும் மிகவும் அல்லற்பட நேரிடுகிறது. அப்படிப்பட்டவர்கள் எளிதில் ஜீரணிக்கக் கூடிய பொருட்களைத் தான் கவனத்தோடு சாப்பிட வேண்டும். முக்கியமாக, பருப்பு வகைகள், பழங்கள், காய்கறிகள், பால் முதலியவற்றை உட்கொள்ள வேண்டும். ஆனுல் வாயுத் தொந்தரவு உண்டாக்கும் உணவுப் பொருட்கள், மாமிசம், மசாலா வகைகள், தேயிலைப் பானம், காப்பி முதலியவற்றை நிச்சயமாகத் தவிர்க்க வேண்டும்.

அவர்கள் உணவு எளியதாகவும், நன்கு ஜீரணிக்கக் கூடியதாகவும், புரோட்டீன் சத்தும் கொழுப்புச் சத்தும் குறைந்தும், வைட்டமீன் சத்துக்களும் தாது உப்புக்களும் மிகுந்தும் இருத்தல் அவசியம். இவ்வாறு செய்வதில் சிரமம் அதிகம் இல்லை.

—“ நல்வழி ”

# முசிறி

தமிழகம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வடக்கே வேங்கடத்தையும் தெற்கே குமரி முனையையும், கிழக்கே வங்கக் கடலையும், மேற்கே அரபிக் கடலையும் எல்லைகளாகப் பெற்றிருந்தது. இந்நாடு சேரநாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்னும் மூன்று பகுதிகளாகப் பிரிந்திருந்தது.

சேரநாடு என்பது மேற்குத் தொடர்ச்சிமலைக்கும் அரபிக் கடலுக்கும் இடைப்பட்டு, வடக்கே மங்களூரையும், தெற்கே கன்னியா குமரியையும் எல்லைகளாக உடையது. இன்றுள்ள திருவாங்கூர், கொச்சி நாடுகளும் மலையாள மாவட்டமும் சேர்ந்த நிலப் பகுதியே பண்டைச் சேர நாடாக இருந்தது. சேரநாடு மலைவளம் மிக்க நாடு. சேர நாட்டு மிளகும், அகிலும் சந்தனமும் தேக்கும் யானைத் தந்தமும் சீனம், அரேபியா, எகிப்து, கிரீஸ் முதலிய வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாயின. பட்டு, வாசனைப் பொருள்கள், இயந்திரக் கருவிகள் முதலியன அந்நாடுகளிலிருந்து சேர நாட்டிற்கு இறக்குமதியாயின.

மேலை நாடுகளைச் சேர்ந்த பிளைநி, தாலமி, பெரிப்ளூஸ் என்னும் நூலின் ஆசிரியர் ஆகியோர் கடல்வழித் தமிழகத்துக்கு வந்தனர். கடல் வாணிகம் பற்றிய பல செய்திகளைக் குறித்துள்ளனர். கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் கடல் வாணிகம் உயர்ந்த நிலையில் இருந்தது. சிலப்பதிகாரம், மணிமேகலை, பதிற்றுப் பத்து என்னும் நூல்கள் தோன்றின. அந்நூல்கள் சேரர்களைப் பற்றி மிகுதியாகக் கூறுகின்றன. சேர நாட்டிலிருந்த சில இடங்களை மேலை நாடுகளைச் சேர்ந்த பிளைநி முதலியோர் நாரா, திண்டிஸ், முசிரிஸ்வகாரே என்று குறித்துள்ளனர்.

நாரா என்பது சங்க நூல்களில் நறவு என்று குறிக்கப் பட்டுள்ளது. திண்டிஸ் என்பது தொண்டி எனப்படும். திண்டிஸ் என்றும் தொண்டி என்றும் வழங்கப்பட்ட பெயர் இன்று கடலுண்டி என்றும் கோயிலாண்டி என்றும் அழைக்கப்படுகிறதென அறிஞர் கருதுகின்றனர். முசிரஸ் என்பது முயிறிக்கோடு அல்லது முயிறி என்று தமிழில் வழங்கப்பட்டது. வகாரே என்பது கடற்கரைப் பட்டினமாகிய வைக்கரை என்னும் ஊராகும். இது கோட்டயத்திற்கு நேர் எதிராக உள்ளது.

## சேரநாட்டின் தொன்மை

எசுநாதருக்கு முன் தோன்றிய நூல்களாகத் தொல்காப்பியத்தை

மா. ரா. இளங்கோவன், M. A.

யும் சங்கத் தொகை நூல்களுள் காணப்படும் சில பாடல்களையும் அறிஞர் கூறுவர். தொல்காப்பியப் பொருளிலக்கணப் பகுதி சேர மன்னருடைய அடையாளப் பூவையும், தமிழகத்தோடு அவர்க்குள்ள உரிமையையும் குறிப்பிடுகின்றது. சேரர்களைப் பற்றிய குறிப்புக்கள் வட நூல்களில் காணப்படுகின்றன. ரிக் வேதமும், தைத்ரீயமும், வியாசர் பாரதமும் சேரர்களைச் 'சேரர்கள்' என்றே குறிப்பிடுகின்றன. இராமாயணத்தில் சீதையைத் தேடிச் சென்ற வானரர்க்குத் தென்னாட்டின் இயல்புகளைச் சுக்கிரீவன் கூறும்பொழுது சேர, சோழ, பாண்டியர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றான். மகாபாரதத்தில் தருமன் இராயசூயப் பெருவேள்வி செய்தபோது சேர, சோழ, பாண்டியரும் வந்திருந்ததாக வியாசர் குறித்துள்ளார்.

சேர நாட்டின் தொன்மையை உரைக்கவல்ல வரலாற்று நூல்கள் இரண்டு உள்ளன. அவை கேரள மான்மியம், கேரளோற்பத்தி என்பன. கேரள மான்மியம் என்பது வடமொழியில் எழுதப்பட்டது. கேரளோற்பத்தி என்பது மலையாள மொழியில் எழுதப்பட்டது.

## முசிறி

சேர நாட்டின் துறைமுகப் பட்டினங்கள் முசிறியும், தொண்டியுமாகும். முதலில் முசிறியைப் பற்றி அறிவோம். இது வால்மீகியாரால் பாராட்டப் பெற்ற சிறப்புடையது. சீதையைத் தேடிச் செல்ல வேண்டிய தென்னாட்டு நகரங்களாகச் சுக்கிரீவன் கூறிய இடங்களுள் ஒன்றாகக் கூறப்பட்ட 'முரசி' பதனம் என்பது முசிறியே யாகும். முசிறி மலையாளக் கரையில் பேரியாற்று முகத்துவாரத்தில் உள்ளது. ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்காவின் வட பகுதியில் உள்ள நாடுகள் ஆகியவற்றுடன் தமிழகம் வாணிக உறவு கொள்ள இத்துறைமுகப்பட்டினம் பெரிதும் துணையாயமைந்தது.

சுமார் கி.பி. முதல் நூற்றாண்டளவிலேயே தென்னாட்டுக்கும் மேலை நாடுகளுக்கும் வணிக உறவு இருந்தது. உரோம் நாட்டினர்—யவனர்கள் முசிறியில் தங்கினர். யவனர்கள் வேலைப்பாடு மிகுந்த மரக் கலங்களைச் செலுத்தி வந்தனர். பேரியாற்றின் வழிவந்தனர். முசிறியில் தங்கினர். பொன் கொடுத்து மிளகை வாங்கிச் சென்றனர். இதனைப் பின்வரும் அகநானூற்றுப் பாடலால் தெளியலாம்

பேரியாற்று வெண்ணுரை
கலங்க
யவனர் தந்த வினைமாண்
நன்கலம்
பொன்னொடு வந்து கறி
யொடு, பெயரும்
வளங்கெழு முசிறி'

முசிறி குட்டுவர்க்கு உரியது என்பதையும், மிளகு முதலியன அங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதையும் புறப்பா

டல் ஒன்றும் வற்புறுத்துகின்றது. முசிறியிலிருந்து கொண்டு செல்லப்பட்ட மிளகுக்கு மேலை நாடுகளில் நல்ல வரவேற்பு இருந்தது. போர்த்துக்கீசியர்கள் சேர நாட்டில் மட்டுமே விளைந்திருந்த மிளகை, ஜாவா, சுமத்திரா, முதலிய கிழக்கிந்தியத் தீவுகளில் பயிரிட்டனர். போர்த்துக்கீசியர்க்குப் பின்னர் பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் அம்முறையைப் பின்பற்றலாயினர்.

முசிறியில் விளைந்த மிளகை இந்திய நாட்டின் வட பகுதியினரும் விரும்பிப் பயன்படுத்தினர். அவர்கள் அம்மிளகை மரிசி என்ற சொல்லால் குறித்தனர். முசிறியில் விளைந்த மிளகை அது பிறந்த இடம் கருதி முசிறி என்றே வட நாட்டினர் அழைத்திருத்தல் வேண்டும். அப்பெயரே நாளடைவில் மருவி மரிசியாயிருக்க வேண்டும் என்றும் சிலர் கருதுகின்றனர். முசிறியின் மிளகுக்கு இருந்த சிறப்பை இவற்றால் நாம் உணரலாம்.

கிரேக்கர் முசிறியிலுள்ள தமது வணிகப் பொருள்களைக் காக்கும் பொருட்டு முசிறியில் இரண்டாயிரம் போர் வீரர்களை வைத்திருந்தனர் என்று பியுங்கேரியன் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. ரோம் நாட்டிலிருந்து அழகிய பேழைகளும், பாவை விளக்குகளும், மதுவகைகளும், தமிழகத்துக்கு வந்தன. மிளகு, தந்தம், நவரத்தினக்கற்கள், பட்டாடை, அகில், சந்தனக் கட்டை முதலியன தமிழகத்திலிருந்து யவனர்களால் கொண்டு செல்லப்பட்டன.

முசிறியின் சிறப்பைப் பரணர் என்னும் வரலாற்றுக் கவிஞர் பின் வருமாறு கூறியுள்ளார்:

'பரதவர் தாம் பிடித்துவந்த மீனை விற்றுவிட்டு அவற்றுக்கு ஈடாக நெற்குவியல்களைப் பெற்று மீள்வர். அந்நெற்குவியல்களைக் கொண்டு வந்த அம்பிகள் அவர் தம் மனைகளைச் சூழ உள்ள கழிகளில் வந்து நிற்கும். எனவே, அம்பிகளுக்கும் தாம் வாழும் மனைகளுக்கும் உள்ள வேறுபாட்டினை அவர்களால் உணர முடிவதில்லை. மிளகுப் பொதிகளைக் கலத்தில் ஏற்றும் பொழுது, ஏற்றுவார் எழுப்பும் பேரொலிக்கும் கடலொலிக்கும் வேற்றுமை அறியாமல் மக்கள் மயங்குவர். இங்ஙனம் முசிறித் துறைமுகம் தம்மிடம் வருவோர் தம் கண்களையும் காதுகளையும் மயக்கும் திறன் பெற்றிருந்தது. பிற நாட்டிலிருந்து வாணிகம் கருதி முசிறிக்கு வந்த நாவாய்கள் பொற்காசுகளைக் கொணர்ந்தன. அப்பொற்காசுகளைக் கழிகளில் இயங்கும் தோணிகளின் வழியாகக் கரைக்குக் கொண்டுவந்து சேர்ப்பர். பொன்தந்த பிறநாட்டு வணிகர்க்குச் செங்குட்டுவன் தன் நாட்டில் விளைந்த பல்வேறு பொருள்களையும் தந்தனுப்புவான். இங்ஙனம் வாணிகத்தால் வளம் சிறந்து விளங்கியது, முசிறித் துறைமுகம்.

# மொழியா? ஒருமைப்பாடா?

"தேசத்தின் ஒருமைப்பாடு முக்கியமா அல்லது 'இந்தியர்களாகிய எங்களுக்கு ஒரு பொது மொழி இருக்கிறது' என்று சொல்லிக்கொள்ளும் பெருமை முக்கியமா—என்பதை, யூனியன் சர்க்கார் உடனடியாக முடிவு செய்தாக வேண்டும். இதில் தாமதம் காட்டுவதோ அல்லது அந்தந்தப் பிரதேசங்களில் உள்ளவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு விதமாகப் பேசி, செப்பிடுவித்தைகள் செய்வதோ ஆபத்தானதாகும் என்பதை வலியுறுத்திக்கூற விரும்புகிறோம்.

இன்றுள்ள நிலைமையில், 'இந்தி தான் ஆட்சிமொழி' என்ற ரீதியில் பேசுவது முற்றிலும் தவறானதாகும். அதற்கு சென்னை ராஜ்யம் தயாராயில்லை.

பொது மொழி என்ற கானல் நீரை விரட்டிக்கொண்டு இந்தியைப் பற்றி இப்படியே பேசிக் கொண்டிருந்தால், தமிழ் நாட்டில் இந்திக்கு உள்ள எதிர்ப்பு வளருமே ஒழிய குறையாது.

இந்தியை ஆட்சிமொழியாக்கினால், தமிழ் நாட்டின் நலன்கள் பாதிக்கப்படும் என்ற அபிப்பிராயம் சரியா, இல்லையா என்று சர்ச்சை செய்தால் போதாது. இப்படி ஒரு அபிப்பிராயம் இருக்கிறது என்ற உண்மையை டில்லி உணரவேண்டும்.

இந்தியாவில் தமிழ் நாட்டினருக்குச் சம அந்தஸ்து இருக்காது என்ற கவலை வளருமானால், அது பிரிவினை சக்திகள் வளருவதற்கே இடம் தருவதாகும். இதை டில்லி சர்க்காரும், இந்தி பேசும் பகுதியினரும் உணரவேண்டும்.

தேச ஒருமை முக்கியமா, இந்தியின் அந்தஸ்து உயருவது முக்கியமா என்று இந்திப் பகுதியினர் சிந்தனை செய்ய வேண்டும்.

இந்தியை அகில இந்திய சர்க்கார் மொழியாக ஏற்பதற்கு வேண்டிய சூழ்நிலை இங்கு ஏற்பட்டிருக்கிறதா என்பதை சென்னை சர்க்கார் நெஞ்சில் கை வைத்துப் பார்க்கட்டும்.

இந்த ராஜ்யத்திலுள்ளவர்கள் சம்பந்தப்பட்ட வரையில், உணர்ச்சி பூர்வமான இந்தி எதிர்ப்பு அநேகமாக ஏகமனதாக இருக்கிறதென்று சொல்லுவது மிகையாகாது. பொது மொழி வேண்டியதுதான் என்று நினைப்பவர்கள் கூட, இப்போது உள்ள நிலைமையில் இந்தியை இங்கு சுமத்துவதென்பது சாத்தியமில்லை என்பதை ஒப்புக் கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். எனவே, மத்திய சர்க்கார் இந்த விஷயத்தில் காலதாமதமின்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும். அவர்கள் அவ்வித முடிவுக்கு வருவதற்கு ராஜ்ய சர்க்காரும் உதவி செய்யவேண்டும்.

யாரோ பொறுப்பற்ற ஒரு சிறு மைனரிட்டி கூட்டத்தினர் தான் இந்தி எதிர்ப்பு நாடகம் நடிக்கிறார்கள் என்பது மேடைப் பிரசங்கங்களுக்கு ஏற்றதாயிருக்கலாம். ஆனால், அப்படிக் கூறுவது உண்மைக்கு மாறானதாகும்.

இங்குள்ள தர்மசங்கடமான நிலையைச் சென்னை காங்கிரசு மந்திரிகள் டில்லி சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி, மொழிப் பிரச்சினையை ஒத்திப்போடும்படி வற்புறுத்தியிருக்கவேண்டும். அவ்வாறு செய்யாமல் அரசியல் சட்டம் திருத்தப்பட்டு, இந்தியின் அந்தஸ்து உயர்த்தப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில்தான் சனவரி 26–ந் தேதி முதல் இந்தி ஆட்சி மொழியாகும் என்ற அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்தி விஷயமாக பிரதம மந்திரியும், மற்ற யூனியன் மந்திரிகளும் ஒவ்வொரு விதமாகப் பேசுகிறார்கள். குடியரசு தினத்தன்று பிரதமர் சாஸ்திரி டில்லியில் பேசுகையில், 'இந்தியின் அபிவிருத்திக்குத் துரிதமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்' என்றார். அதே மூச்சில் 'இந்தி பேசாதவர்களுக்குப் பாதகமாக எதையும் செய்யக் கூடாது' என்கிறார். இந்திப் பிரியர்கள்—இந்தி எதிர்ப்பாளர்கள் இருவரையுமே திருப்தி செய்யப் பார்க்கிறார்.

குல்ஜாரிலால் நந்தா சில நாட்களுக்கு முன்பு சென்னையில் அளித்த ஒரு பேட்டியில், 'இந்தி பேசாதவர்களின் நலன்களுக்கு விரோதமாக ஒன்றும் செய்ய மாட்டோம்' என்றார். அதே மூச்சில் 'மத்திய சர்வீசுக்கு வர விருப்பவர்கள் இந்தி கற்றுக் கொள்வர்' என்றார்.

இம்மாதிரி செப்பிடு வித்தைகள் நிலைமையை மேலும் குட்டை குழப்பத்தான் செய்யும்.

தேசிய ஒருமைப்பாடுதான் முக்கியமென்றால், ஒரே ஒரு ராஜ்யம் ஆட்சேபித்தால்கூட அதைச் செய்யாமலிருப்பது விவேகம்.

ஆனால், இந்திப் பிரச்சினையில் யூனியன் சர்க்கார் நடந்து கொள்ளும்விதம் நாட்டைத் துண்டாடும் நிலைமையைத் தோற்றுவித்து விடுமோவென்று அஞ்ச வேண்டியிருக்கிறது.

இந்திக்கோ, பொதுமொழிக்கோ இப்போது ஒன்றும் அவசரம் வந்துவிடவில்லை. இதைக் காலவரையறையின்றி ஒத்தி வைப்பதுதான் நாட்டுக்கு நல்லது.

அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளதையே சர்க்கார் செய்வதாக பிரதமர் சாஸ்திரி பேசியிருக்கிறார். டில்லி சர்க்கார் பின்பற்றும் கொள்கை அரசியலமைப்புப்படி சரியா இல்லையா என்பதல்ல இன்றைய பிரச்சினை. தேசிய ஐக்கியத்தைக் காப்பாற்றுவதா அல்லது மொழிப் பிரச்சினையில் தேசிய ஐக்கியத்தைப் பலியிடுவதா என்பதே கேள்வி.

—"தினமணி"
29—1—65.

*நம் நாட்டு மூலிகை:*

# கரிசலாங்கண்ணி

**வேலூர் டாக்டர் ஏ. ஆர். கண்ணப்பன்**

தமிழ் நாட்டின் தனிப் பெரும் ஞான சாதன மூலிகைகள் மூன்று. முதலாவது தூதுவளை; இரண்டாவது கரிசலாங்கண்ணி; மூன்றாவது கண்டங்கத்திரி. கரிசலாங்கண்ணி என்னும் "பொற் கொடி"யை காசணுங் கண்ணி என்றும் சொல்வதுண்டு.

கரிசல் நிலம் என்ருல் தங்கச் சத்துள்ள நிலம் என்பது அனைவருக்கும் தெரியுமே! தேரையர் என்ற சித்தர் இயற்றிய "தேரையர் கரிசல்" என்ற நூல் மருத்துவர்களுக்கு நன்கு தெரிந்திருக்கும். கரிசல் என்பதன் பொருள் தூய்மையான தங்கத்தைக் குறிப்பிடுகிறது. எனவே பொற்கொடிக்கு கரிசலாங்கண்ணி, கரிசல் - ஆம் - காண் — நீ என்று சிலேடையாகச் சொல்லி வைத்தனர். அதாவது, தங்கமாகும் பார் நீ என்ருல், யார்தான் சும்மா இருப்பார்கள்!

கரிசலாங்கண்ணியில் நான்கு விதமுண்டு. வெள்ளை நிறமாகப் பூக்கும் செடி. இது சாதாரணமாக எளிதில் எங்கும் கிடைக்கக் கூடியது. குறிப்பாக நஞ்சை நிலப் பயிர்களிடையே வாய்க்கால், வரப்பு ஓரங்களில் காணலாம். உழுது பயிரிடும் குடியானவர்கள் இதை வேருடன் பிடுங்கி இதன் வேரால் பல்துலக்குவதும் உண்டு. நீலநிறம், சிவப்பு நிறம் உள்ள பூ பூக்கும் கரிசலாங்கண்ணியும் உண்டு. இவைகளை எங்கும் காணுவது அரிது. வனம் மிகுந்த மலைச்சாரல்களிலும் நதிகள், நீரோடைகளிலும் மிகவும் அரிதாகக் கிடைக்கும்.

நான்காவதாகக் கூறப்படுவது மஞ்சள் நிறப்பூவை உடைய கரிசலாங்கண்ணி. இதுதான் இங்கு பொற்கொடி என்று குறிப்பிடப் பட்டது. மற்றவைகளைப்போல இது செடியாக வளராமல், கொடி போல் படர்ந்து வளரும். இதை ஆங்கிலத்தில் "எக்லிப்டா ஆல்பா" என்பார்கள். இதற்கு பொற்றலைப்பாவை, மஞ்சட்பாவை, கையான்தகரை, பொற்றலைக் கையான், கரிசாலை, கைவீசி, கரியசாலை, பொற்பாவை என்றும் மருத்துவச் சொற்கள் உள்ளன. இந்தப் பொற் கொடி, அறுகம்புல் போல் கணுவில் வேர்விட்டுப் படரும். இதன் இலைகள் மாதுளை இலை போன்று, ஆனல் கனமாகவும் சொற சொறப்புடையதாயும் பசுமை நிறத்துடனும் காணும். கொடி லேசான சிவப்பு நிறமுடையதாயிருக்கும். இதன் பூக்கள், ஏறத்தாழ மஞ்சள் நிற சாமந்திபோல நடுவில் மகரந்த சேர்க்கை ஒரு திட்டுப் போல் அமைந்து, சுற்றியும் இதழ்கள் மலர்ந்து காணும். மலர் தங்க நிறம் தான்! மற்ற கரிசலாங்

கண்ணிகளைவிட, இந்தப் பொற்கொடிக்குத்தான் மிகுந்த சக்தியும் மருத்துவப் பயனும் உள்ளதாகப் பழைய ஏடுகள் கூறுகின்றன.

## பயனும் குணமும்

இந்தப் பொற்கொடியை வேருடன் எடுத்துக் கொடி, இலை, பூ யாவும் பயன்படுத்தலாம். பொதுவாக இது கல்லீரல், மண்ணீரல், நுரையீரல், சிறுநீரகம் ஆகிய ராஜ உறுப்புக்களில் வேலை செய்கிறது. மேல் குறிப்பிட்ட உறுப்புகளில் தேங்கும், அசுத்தங்களைத் துப்புரவு செய்து, கெட்ட நீர்களை வெளியேற்றவும் இவைகளின் சுரப்பி அணுக்களைத் தூண்டி, பித்தநீர், குருதி, மற்றும் உடலுக்குத் தேவையான சுரப்பிகளை உற்பத்தி ஆக்கம் செய்கிறது. அந்தந்தஉறுப்புகளுக்குச்சக்தியையும் ஊட்டத்தையும் அளித்து

## விளக்கம்

# இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் எத்தனை பேர்?

### ஜனகணிதப்படி மொழிவாரி புள்ளி விவரங்கள்

திருவனந்தபுரம், பிப். 4—இந்தியாவில் உள்ள 44 கோடி மக்களில் 13.24 கோடி பேர் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கிறார்கள் என்று 1961 ஜனகணிதியின் பகுதியாகத் தொகுக்கப்பட்டுள்ள மொழிகள் பற்றிய அட்டவணை தெரிவிக்கிறது

நாட்டில் இந்தி பேசுவோர் மொத்தம் 16.51 கோடி பேர்.

இதைத் தவிர இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாமல், அதை உப மொழியாகக் கொண்டவர்கள் 93 லட்சம் பேர்.

இந்த அட்டவணையின்படி மொழிவாரி ஜனத்தொகை விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| ஹிந்தி | 133.435,450 |
| தெலுங்கு | 37,668,132 |
| வங்காளி | 33,888,939 |
| மராத்தி | 33,286,771 |
| தமிழ் | 30,562,698 |
| உருது | 23,323,518 |
| குஜராத்தி | 20,304,464 |
| கன்னடம் | 17,415,827 |
| மலையாளம் | 17,015,782 |
| ஒரிசா | 15,719,398 |
| பஞ்சாபி | 10,950,826 |
| அஸ்ஸாமி | 6,803,465 |
| காஷ்மீர் | 1,956,115 |
| சமஸ்கிருதம் | 2,544 |

அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிகளின் கணக்கு மட்டும் மேலே தரப்பட்டுள்ளது.

ஊக்குவிப்பதுடன் நன்றாக இயங்கவும் வைக்கும். பொற்கொடியின் சிறப்பான வேலை எங்கு என்றால் கல்லீரல், மண்ணீரல் ஆகியவைகளில்தான்! இவைகள் பழுதடைந்த போதும், பித்தநீர் உற்பத்தி சரிவர ஆகாத போதும், ரத்தத்தின் இயற்கை நிறம் மாறி மஞ்சளாகி விட்ட போதும் உண்டாகக்கூடிய காமாலை, ரத்த சோகை, பித்தபாண்டு நீரேத்தம், நீர் குளுவான், மகோதரம், குன்மம், வீங்கிப் பெருக்கும் ஊதல், காமாலை, ரத்தமே குன்றி உடல் வெளுக்கும் நோய்கள் ஆகியவைகளில் பொற்கொடி நன்கு வேலை செய்து வியக்கத்தக்க குணத்தை உண்டாக்கும். மேலும் பாம்பு கடி விடம், குட்டரோகம், கண் விழி ஒளி மங்கும் போதும் பயன்படக் கூடியது. அன்றியும் உடலின் சப்த தாதுக்களையும் உரமாக்கி வலுவைத் தந்து உயிரணுக்களைத் தேற்றி தங்க நிறம் போன்ற சருமத்தை உண்டாக்கும் குணமுடையது.

## உபயோகம்

நம் நாட்டவர் இதைக் கீரை இனமாகக் கருதி அடிக்கடி பருப்பு நெய் சேர்த்து பொரியல், குழம்பு-கடையல் ஆக உணவு பதார்த்தமாக உண்பது வழக்கம். இதனால் உடம்பில் தேங்கிய கெட்ட நீர்கள் வெளியாவதுடன், உடல் பலம் பெற்று மலச்சிக்கல் நீங்கி, புத்திக்குத் தெளிவும் ஆரோக்கியமும் தரும். உடல் கனத்தையும் பருமனையும் தொந்தியையும் கரைக்க விருப்புடையவர்கள் நாள் தோறும் பகல் உணவில் இரண்டு முதல் நான்கு வாரம் தொடர்ந்து உண்டு வர பயன் உண்டு.

## காமாலை, ரத்த சோகை, வீக்கம்

உடலின் உள்ளுறுப்புகள் வேலை செய்ய மறுத்துவிட்ட போதும், ரத்தம் சுண்டி முகம், உதடுகள், கண் இமைகள், உள்ளங்கை, பாதம் ஆகியவை வெளுத்துப்போய், கண்களுக்குக் கீழே நீர்பை போல் தொங்குதல், இருகன்னத் தாடைகளில் ஏதோ போட்டு அடைத்து வைத்தமாதிரி வெளுத்து, ஊதிப் பெருத்த சதைகள், முகமே விகாரமாகிவிட்ட ரத்த சோகை நோயாளிகளும், சிறுநீர் சரிவர போகாமல் தடையாகி, உடம்பை ஓர் நீர்ப்பை போன்று கை, கால், வயிறு, புறங்கை, புறங்கால் வீக்கம் கண்டு எதிலும் விருப்பம் இல்லாமல் சோகமடைந்தவர்களும், ரத்தம் உற்பத்தியாகாமல் வெளுத்து, உடல் பூராவும் வெளுத்தோ அல்லது மஞ்சள் நிறமாகி விட்டவர்களுக்கும் இதோ ஓர் எளிய முறை: பொற்கொடியின் (மஞ்சள் கரிசலாங்கண்ணி) இலை பத்து மட்டும், வேம்பின் பசுமையான இலை ஆறு மட்டும், நல்ல துளசியின் இலை பெரியதாக நான்கு மட்டும், கீழா நெல்லி இலை காம்புடன் இரண்டே இணுக்கு, ஆக நான்கும் புதியதாக எடுத்து, மண் போக அலசி, காலையில் எழுந்தவுடன், பல் துலக்கி பின் வெறும் வயிற்

றில் போட்டு நன்றாக மென்று தின்றுவிட வேண்டும். மாலை நான்கு மணிக்கும் இம்மாதிரி செய்தல் அவசியம். இப்படி 10 முதல் 20 நாள் வரை செய்ய மேல்கண்ட நோயெல்லாம் விலகி லட்சுமிதேவியான பொற்கொடியே வந்து குடிகொண்டதுபோல் முகம் பொலிவுடன் விளங்கும். காமாலைகளுக்கும் இம்முறை நன்கு பயன்தரும். பத்திய ஆகாரம்: காலை அரிசி கஞ்சி, தூதுவளை துவையல். பகல் சோற்றுடன் மிளகு நீர், மோர்—துவையல். இரவு பால், ரொட்டி ஆகியவைகளே. இதர உணவுகள் கூடாது.

## கடுமையான மஞ்சள் காமாலைகளுக்கு

பொற்கொடி, தும்பை இலை, கீழாநெல்லி இவைகளைச் சமமாக எடுத்து அரைத்து, கீழாநெல்லி கட்டுரையில் குறிப்பிட்ட அளவு முறைப்படி கொடுத்துவர கடுமையான மஞ்சள் காமாலைகள் நீங்கும். காரம், புளி கூடாது.

## நுரையீரல் நோய்களுக்கு

பொற்கொடி இலையை இடித்துப் பிழிந்த சாறு, அசல் எள் நெய், ஆக இரண்டும் சம பாகமாகக் கலந்து 1 படி அளவு: அத்துடன் அதிமதுரம் 1 பலம் இடித்துத் தூள் செய்து கலந்து அடுப்பில் வைத்து சாறு சுண்டிய பதத்தில் முறியாமல் காய்ச்சி இறக்கி வடிகட்டி வைத்துக்கொண்டு, இருமல், சளி, காசநோய், குரல் கம்மல், கபரோகம், ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு உள்ளங்கையில் பழைய காலணா அகலத்துக்கு இந்த நெய்யைவிட்டு நாக்கினால் நக்கி காலை மாலை இருவேளை சாப்பிட்டு வர குணமாகி விடும். இதையே தலைக்கு வாரம் ஒரு முறை முழுகி வருவதும் மிக்க பயன்தரும்.

## கண்களுக்கு மை

பொற்கொடி இலைச் சாற்றை எடுத்து, மாதுளம் கட்டுரையில் குறிப்பிட்டுளளது போல், மை செய்து கண் இமைகளுக்குத் தீட்டிவர கண்கள் மிக்க ஒளியும் கவர்ச்சியும் உடையதாக விளங்குவதுடன், கண் நோய்கள் வராமலே பாதுகாத்து வரும். காது வலிகளுக்கும் இதன் சாற்றைப் பிழிந்து காதில் விட்டு வர நோய்கள் அடங்கும். குழந்தைகளுக்கு அடிக்கடி காணும இருமல், ஜலதோஷம் ஆகியவைகளுக்கு இதன் சாறு நாலு துளி; தேன் பத்து துளி ஆகக் கலந்து ஒரு பாலாடை வெந்நீருடன் கொடுக்க தீரும்.

## பாம்பு கடி விஷம் நீங்க

இதன் சாற்றை அரை அவுன்ஸ் எடுத்து அதில் அரை குவளை புளித்த மோர் கலந்து குடிக்க பாம்பு கடி விஷம் நீங்கி விடும். தேள் கொட்டிய குடைச்சலுக்கும் இலையை மென்று தின்னச் சொல்லிக் கொடுத்து, சிறிதளவு இலையை அரைத்து தேள் கொட்டின இடத்தில் வைத்துக் கட்டினால் விஷங்கள் முறிந்து வலி அடங்கும்.

## நாள்பட்ட தீராத காமாலைகளுக்கு

"காமாலை கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் நிறம்" என்பது பழமொழி. இதன்படி காமாலை முற்றிவிட்டவர்கள் உடம்பில் வரும் வியர்வை, சிறுநீர், மலம், கண், சர்மம் யாவும் மஞ்சள் போல் பழுத்துவிட்டு இருக்கும். இது எந்தச் சிகிச்சையிலும் குணமாகாத அடங்காப்பிடாரி நோய். இது குணமாக வேண்டுமானால், இந்த மஞ்சள் கரிசலாங்கண்ணி என்ற பொற் கொடிக்குத் தான் அதிகாரமுண்டு. நாள்தோறும் இதன் இலைச் சாற்றை எடுத்து முதல் நாள் கால் அவுன்ஸ் ஆக துவங்கி இரண்டாம் நாளில் அரை அவுன்ஸ் இப்படியாக கால் அவுன்ஸ் அதிகமாகக் கூட்டிக் குடித்துக் கொண்டு வந்து 10–ம் நாள் இரண்டரை அவுன்ஸ் சாற்றை குடிக்க வேண்டும். மறு நாளில் இருந்து கால் அவுன்சாகக் குறைத்துக் கொண்டே வந்து துவங்கியது முதல் 20–ம் நாளில் கால் அவுன்ஸ் குடித்து நிறுத்தி விடவும். ஆக இந்த அரை மண்டலமும், இச்சா பத்தியமாக இருந்து வர, தீராத காமாலைகளும் தீர்ந்து போகும். ஆனால் அளவுக்கு மீறி ஆங்கில மருந்து ஊசிகளைப் போட்டுக் கொண்டவர்கள் உடலில் இது வெற்றி தரும் என்று நிச்சயமாகக் கூற முடியாது.

## குட்ட நோய்கள் தீர

பொற்கொடியும் கற்பக மூலிகைகளுள் ஒன்று. எனவே வேம்பின் 100 ஆண்டு மரப் பட்டையை எடுத்துச் சுத்தம் செய்து சிறு துண்டுகளாக்கி, ஒரு கோப்பையில் பரப்பி, அதன்மேல் பொற்கொடி இலையை இடித்துப் பிழிந்த சாற்றை விட்டு உலர்த்த வேண்டும். இப்படியே ஏழு முறை விட்டு உலர்த்தி எடுத்தபின் இடித்துத் தூள் செய்து துணியிலூட்டிய தூளை எடுத்து வைத்துக் கொண்டு வேளைக்கு 10 முதல் 15 அரிசி எடை பசும்பால், பசு வெண்ணெ, அல்லது வெந்நீருடன் ஒரு மண்டலம் முதல் மூன்று மண்டலம் வரை சாப்பிட்டு வர 18 வித குட்டங்கள் மறைந்து போகும். ஆனால் இம்முறை எல்லோருக்கும் சித்தியாவது கடினம். இதைத் தெய்வத்தின் அருள் துணை கொண்டு தயாரித்தல் அவசியம்.

சித்த மருத்துவர்கள் தயாரிக்கும் கரிசாலை லேகியம், அயம், அயக்காந்தம், மண்டூரம், மற்றும் பல செந்தூரங்களுக்கும் பொற்கொடியின் சாறு மிக மிக இன்றியமையாததாகும். மேலும் இதன் இலையை எடுத்துத் தூள் செய்து வைத்துக்கொண்டு (அனுபானம்) துணை மருந்தாகவும் கொடுத்து நோய்களை விரைவில் குணப்படுத்துவார்கள்.

## மயிர் செழித்து கருமையாக வளர

வெள்ளை நிறமாகப் பூக்கும் கரிசலாங்கண்ணி செடியை

கொண்டு வந்து இடித்து உரலில் போட்டு மாவரைப்பதுபோல் ஆட்டி எடுத்து சிறுசிறு பில்லைகளாகத் தட்டி உலர்த்தி எடுத்து வைத்துக் கொண்டு, வேண்டும் போது நல்லெண்ணை அல்லது தேங்காய் எண்ணெயில் கலந்து வைத்துக்கொண்டு, இரண்டு நாள் ஊறியபின் தலைக்குத் தடவி வர மயிர் கருமையாகவும் விரைவில் நரை விழாமல் நீண்டும் அடர்த்தியாகவும் வளரும்.

முக்கூட்டு கற்பக மூலிகை தைலம் என்பது ஓர் அரிய தமிழ் முறை. இதில் பொற் கொடி முக்கியமாகச் சேர்த்து தயாரிக்கிறார்கள். இதை உள்ளுக்கு வெளிப் பிரயோகமாக பயன்படுத்தி பல தீராத நோய்களையும் குணப் படுத்தி விடலாம்.

கீழாநெல்லி கட்டுரையில் குறிப்பிட்டபடி இந்தப் பொற்பாவையிலும் மந்திர உபாசனைகளை செய்து மை போட்டுப் பார்க்கும் டெலிவிஷன் செட்டு வேலைகளைச் செய்வதுண்டு. இதை ஆகம முறைப்படி பூசைசெய்து, காப்புக் கட்டி உயிர் கொடுத்து எடுத்து வைக்க உலகவசியம், தெய்வ வசியம், ஆகர்ஷணம் ஆகும். பொற் பாவை அஷ்டகர்ம மூலிகையின் உதவியால் சித்தர்களில் பலர் அணிமா (அணுவைப் போல் சிறுத்து மாயமாகி விடல்) மகிமா (பருப்பொருளாகி ஸ்தம்பித்தல்) போன்ற சித்து விளையாட்டுக்களைச் செய்துள்ளனர். அகத்தியர் பரிபூரணம் 400 என்ற நூலில் அஷ்டகர்ம தம்பனம் செய்யும் முறை கூறுகிறார்.

பணிந்து நின்ற "பொற் பாவை" தன்னை நீயும்<br>
பாலனை சுழி முனையான் மேருக்கேற்று<br>
அணிந்து நின்று யவசிவய என்று நீயும்<br>
அப்பனை கற்பூர தீபம் பார்த்து<br>
துணிந்து நின்று பூதி தன்னை கையில் வாங்கிச்<br>
சுத்தமுடன் லலாடமதில் பூசி விட்டால்<br>
அணிந்து நின்ற சத்துருக்கள் வசிய மாவார்<br>
அனைவரும்தான் பின் வணங்கி நிற்பார் கேளே!

"குருவில்லாத வித்தையில்லை, கருவில்லாத ஆட்டம் இல்லை" என்பது பழமொழி. ஆகவே இதையெல்லாம் குருமுகாந்திரமாகவே கற்றுத் தெளிதல் நன்மை பயக்கும். ஞான சாதனமாக விளங்கும் இந்தப் பொற்பாவையை கையில் வைத்துக்கொண்டு பிறருக்குத் தீங்கு செய்ய நினைப்பவர் யாராயினும் சரியே, அவர்கள், பத்மாசூரன் போன்று அழிந்து போவர் என்று சித்தர்கள் கூறியுள்ளதும் குறிப்பிடத் தக்கது!

மகாலட்சுமியின் அம்சமாக விளங்கும் இந்தப் பொற்கொடியை நினைத்துக் கொள்ளுங்கள்! உடலுக்கு வரும் இனம் தெரியாத பிணிகளை எல்லாம் நீக்கி உடலைத் தங்கமயமாக்கி விடுவாள் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

—"தினமணி சுடர்"

# வரைமொழியும் வாய்மொழியும்

## தமிழ் மொழி மாற்றம்

ஒரு காலத்தில் எல்லோராலும் பேசப்பட்ட மொழி எழுதப் பட்டவுடன் இலக்கிய மொழியாக மாறிவிடும். பிறகு அது பேச்சு மொழி மாறுதலால் நாளடைவில் தனித்து நிற்றலும் உண்டு. இம் மாறுபாடுகள் இயல்பாக உண் டாகிவருதல் கண்கூடு. எழுதப் பட்ட காலத்திற்குரிய சொற் பொருள் பிற்காலத்தில் வேறுபடு தலும் உண்டு. சொற்களும் உரு மாறும்; வழக்கொழிந்துவிடும். இவ்வுண்மைகளைத் தொல்காப்பிய உரையாசிரியர்களும், சங்கநூல் உரையாளர்களும் ஆங்காங்குக் குறித்துச் செல்லலைக் காணலாம். 'அழன்' 'புழன்' என்ற தொல் காப்பியச் சொற்கள் வழக்கொழிந் தன. 'புரத்தல்' என்னும் சங்க காலச் சொல் 'காத்தல்' என்னும் பொருளில் இடம் பெற்றுவிட் டது. 'புரத்தல்—உண்டி கொடுத் துக் காத்தல்' என்பதே பழைய பொருள். இப்பொருளைக் கன் னட மொழியிற் காணலாம். இங் ஙனம் பிற்காலத்தில் பொருள் திரிந்த சங்ககாலச் சொற்கள் பல வாகும். தமிழின் இனமான தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளில் பழந் தமிழ்ச் சொற்களுக்கு நேரான பொருளைக் கண்டு மகிழலாம். பல சொற்கள் 'ஒரீஇ, நிறீஇ' என உருக்குலைந்து விட்டன. அவை முறையே 'ஒருவி, நிறுவி' என்று இருத்தற்கு உரியன. இங் ஙனம் அவ்வப்போது உண்டா கும் மாறுதல்களை இலக்கண ஆசி ரியர்கள் குறித்து, இலக்கிய மொழிக்கும், பேச்சு மொழிக்கும் தொடர்பு உண்டாக்க முயன் றனர்.

## ஆங்கில மொழி மாற்றம்

இவ்வேறுபாடு தமிழ் ஒன் றுக்கே என்று எண்ண வேண்டா. 16–ம் நூற்றாண்டினராகிய ஷேக் ஸ்பியர் நூலில் உள்ள சொற்கள் பல இன்றுள்ள ஆங்கிலத்தில் வழக்கொழிந்து விட்டன என் பதைத் தெள்ளத் தெளிய அறி ஞர் ஒருவர் விளக்கியுள்ளார். விளக்கி, இவற்றால், ஷேக்ஸ்பியர், இறந்த கால மொழியில் தம் நாட கங்களை இயற்றினர் எனல் பொருந்தும் என்று குறித்துள் ளமை கவனித்தற்குரியது "லத் தீன் (Latin) எப்படி இறந்த மொழியாகி விட்டதோ அது போலவே ஷேக்ஸ்பியர் காலத்து ஆங்கிலமும் இறந்துபட்டது. என்னை? அம்முறையில் அச் சொற்களைப் பயன் படுத்தி இன்று பேசுவார் இல்லாமையால்" என,

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

டாக்டர் ஸ்வீட் என்னும மொழி ஆராய்ச்சி நிபுணர் 'மொழிகளின் நேரிய தன்மை' என்ந மறறு நூலிற் கூறியுள்ளார்.

## வரைமொழி, வாய்மொழி-வேறுபாடுகள்

(1) இலக்கியமொழி என்றும் மாறுதல் அடையாதது. பேச்சு மொழி மாறிக்கொண்டேவரும்(2) இலக்கிய மொழியில் பாடிய அல்லது எழுதிய புலவரே தமது நடைக்குப் பொறுப்பாளி ஆகின்றார். அவர் இலக்கண இலக்கியங்களைத் துணைக்கொண்டு எழுதியிருப்பின், அவரது காலம் பிற்பட்டதாயினும், பண்டைய இலக்கியப் புலவர் வரிசையில் வைத்து எண்ணப்படுவர். இந் நிலைமை பேச்சு மொழிக்குப் பொருந்தாது. (3) பேச்சு மொழி (வாய் மொழி) இயல்பாகக் குழந்தைப் பருவத்திலிருந்தே வருவது; இயல்பாகப் பேசப்படுவது. ஆனல் இலக்கிய மொழி, ஆசிரியர் ஒருவரைக்கொண்டு அறிய வேண்டுவது.

இம்மூன்று காரணங்களால் இலக்கிய மொழிக்கும் பேச்சு மொழிக்கும் உள்ள வேறுபாடுகள் நன்கு விளங்கும்; பேச்சுத் தமிழ் மாறுதல் அடைவதற்குக் காரணமும் இலக்கிய மொழி மாருமைக்குக் காரணமும் நன்கு விளங்கும். இலக்கியத் தமிழ் பேச்சு வழக்கற்றமையின் அஃது அழியாது; பேச்சுத் தமிழ்வழக்கிலிருப்பதால் மாறிக் கொண்டே இருக்கும். பண்டை இலக்கண—இலக்கியங்களைப் படித்துச் சொல்பவர் சொல்லும் வரையிற்ருன் அவை பொதுமக்கள் கண்ணெதிரே தோன்றும்; இன்றேல் இறந்தவை ஆகும். பேச்சுத் தமிழில் கருத்தைச் செவ்வையாக விளக்க முடியாதபோதும், 'பண்டைத் தமிழில் இஃது எவ்வாறு கூறப்பட்டுள்ளது?' என்று பார்க்க உணர்ச்சி உண்டாகும் போதும், பழைய மொழிச் சுவையை நுகர அவா உண்டாகும். போதுமே, இலக்கிய—இலக்கண நினைவு எழும்.

## பண்டை வாய்மொழியே வரைமொழி

வரைமொழி (இலக்கிய மொழி)கள் யாவும் செப்பம் செய்யப் பட்டவையே யாகும். அவை பேச்சு மொழியைத் திருத்த முறையிற் கொண்டவை ஆகும். 'பேச்சு மொழி ஒழுங்கு நிலையை அடையின், இந்நிலையிற்ருன் இருக்கும்' என்பது போல நன்முறையில் அமைந்திருப்பது வரைமொழி. இலக்கிய மொழியாக இன்று இருப்பது ஒரு காலத்தில் பேச்சு மொழியாக இருந்தது. "இன்று கடினமாகவும் வியப்பாகவும் தோன்றும் தாந்தே, பெட்ரார்க் என்பவர்கள் வரைந்தலத்தீன் மொழிநடை ஒரு காலத்தில் சாதாரண மக்கள் பேசிவந்த மொழியே என்பதை நாம் அறிதல் வேண்டும். இவ்வுண்மை எல்லா மொழிகட்கும் பொருந்தும்" என டாக்டர் ஸ்வீட்

தமது நூலில் குறித்திருத்தல் கவனிக்கத் தக்கது.

## நடை வளர்ச்சி

இவ்வாறு சாதாரணமாக வழங்கிய மொழி ஒன்றைச் செப்பம் செய்தலும் முடிவுகொடுத்தலும் பிறவும் நீண்ட கால வளர்ச்சியாக இருத்தல் வேண்டும். சான்றாக, ரிக்வேத மொழி வளர்ச்சி அவ்வேத காலத்திற்கு மிகமுன்னரே தொடங்கப் பெற்றிருத்தல் வேண்டும். ஏனெனில், திடீரென மொழி அமைதி அவ்வளவு செம்மையாக அமைதல் இயற்கைக்கு மாறானது ஆதலால் என்க. வாழையடி வாழையாக வந்த செய்யுள் நடையே ரிக்வேத நடையாகும். அவ்வாறே பண்டைச் சங்க நூல் தமிழ்நடை. அச்சங்க காலத்திற்கு முன்பே பண்பட்டு வளர்ச்சி அடைந்து வந்த நடை யென்பதை அறிதல் வேண்டும்.

## வாய்மொழி வரைமொழி ஆகும் முறை

ஒருநாட்டு மொழி முதலில் கொச்சையாகவும் காடு முரடாகவும் இருக்கும். இதனைச் செப்பம் செய்யச் சிற்பிகள் தோன்றுவர்; செப்பம் செய்வர். அங்ஙனம் செப்பம் செய்யப்பட்டதே இலக்கிய மொழி. முதன் முதலில் மொழியைச் செப்பம் செய்து எழுதும் நிலைக்குக் கொண்டு வருபவரே உயர்ந்தவர்; உழைப்பாளிகள். இதற்கெனச் சிலர் தோன்றி வேலை செய்தல் இயற்கையின் சிறப்பென்றே இயம்புதல் வேண்டும். ஒருவர் சொல் முடிவுகளைச் செப்பம் செய்வார்; ஒருவர் நடையை ஒழுங்காக்குவார்; ஒருவர் கருத்துக்களைப் பதப்படுத்துவார்; வேறு ஒருவர் கருத்துக்களை வெளியிடுவதற்குரிய சொல் அடுக்குகள் உண்டாக்குவார். இங்ஙனம் பேரறிஞர் பலரது கூட்டு உழைப்பாற்றான் மொழி செம்மையுறுதல் உலக இயற்கை. இப்பெரு மக்களது தனிப்பட்ட நடை 'மொழிச் செல்வமாக'ப் பின்னோரால் கருதப்படும் அரிய தொடர்கள், ஓசை நயம், எதுகை மோனை இன்ன

## புத்த பிக்குகள் கட்டிய பழைமையான பாலம்!

உல்ம் (டாட்)—மேற்கு ஜெர்மனியில் மிகப் பழைமையான கண்டுப்பாலம் டான்யூப் நதியின் குறுக்கே அமைந்திருக்கிறது. இதை 1720ல் அந்தப் பகுதியிலிருந்த புத்த விகாரத்தைச் சேர்ந்த புத்த பிக்குகள் கட்டினார்கள். 245 ஆண்டுகள் ஆனபின்னரும் இந்தப் பாலம் சேதமடையாமல் பலமாக இருந்து வருகிறது. எந்தப் பருவக்காலத்திலும், புழுபூச்சிகளாலும் கெடாத வகையில் புதுவகை வர்ணப்பூச்சைத் தடவி இந்தப் பாலத்தின் பலகைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்று பெருகியுள்ள அபரிமிதமான போக்குவரத்தையும் இந்தப் பாலம் தாங்கி வருகிறது.

பிற அழகுகள் படிப்படியாகப் படித்தவரிடம் பரவும்; அளவளாவும் பொழுது இவை அவரது உரையாடலை அணி செய்து ஆரா இன்பம் அளித்தல் உறுதி. சொல் அழகும் பொருள் அழகும் பின்னிச் செல்லும் பான்மை கற்றோர்க்குக் கழி பேருவகை விளைப்பதாகும். இத்தகைய உயரிய பண்பை முதலில் உண்டாக்கித் தரும் மொழிவல்லுநர்க்கு உலகம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டதன்றோ? என்று கர்டினல் நியூமன் அறைந்துள்ளமை உண்மையே ஆகும். இக்கூற்றால், 'வாய்மொழி' எங்ஙனம் செப்பம் செய்யப்பட்டு, 'வரைமொழி' ஆகின்றது என்பது எளிதிற் புலனாகும்.

## வரைமொழியை வாய்மொழி ஆக்கலாம்

வரைமொழியும் வாய்மொழியும் ஒன்றாக இருத்தல் இயலாதா? 'இயலாது' என்று கூறுதல் தவறாகாது; மொழிப்புலமை எய்துதல் அனைவர்க்கும் ஆவதொன்று. சாதாரணப் படிப்புடையார் ஓரளவு பயிற்சி பெறின், பிழையின்றி எளிய நடையிற் பேசலாகுமேயன்றிப் புலவர் நடையிற் பேசுதல் இயலாது. ஆயின், அனைவரும் கல்வி அறிவு பெறின் தாய்மொழியைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டுமென்னும் ஆர்வம் அழுத்தமாக இருப்பின்—அந்நிலையிற் பிழையற்ற தமிழ், பொதுமக்கள் வாழ்வில் நடனம் செய்யும். அந்த முறை இன்று படித்தவர் வாழ்க்கையிலும் காணுதல் அருமையாக இருக்கிறது! உள்ளத்தில் மொழிப்பற்று வன்மையோடு உறுத்துங்கால், பிழையற்ற முறையிற் பேச வேண்டுமென்னும் உணர்ச்சி தோன்றும்; அதற்குரிய முயற்சி தோன்றும்.

“குழந்தைகள் சிறு பருவத்திலேயே பெற்றோர்—மற்றோர் பழக்கத்தால் பிழையறப் பேசப் பயிலுவாராயின், மொழி மாறுதல்

### தெய்வத் தமிழ்

“தமிழ் மொழி தெய்வ மொழி. தெய்வத்தைப் பாடாத பாட்டெல்லாம் தமிழ்ப்பாட்டல்ல. தமிழ் என்ற சொல்லுக்கே சிவமென்றுதான் கருத்து. தெய்வ நம்பிக்கை உள்ளவனாயிருந்தாலொழிய அவன் “தமிழ் வாழ்க” என்று சொல்லுவதில் பொருள் கிடையாது. உலகமெல்லாம் தெய்வ நெறியைப் பரப்புவது தமிழனின் முதற் கடமையாகும். அதுதான் தமிழ் மணம் நமக்கு. தெய்வ நம்பிக்கை இருந்தால் உலகத்தில் இருளைப்போக்க முடியும். இந்த அடிப்படை உண்மையை நாம் மறக்கக்கூடாது. தமிழ் தோன்றியதே தெய்வத்தைப் பாடத்தான். தமிழ் பரமார்த்த ரகசியங்களைப் பெற்றுள்ளது. தோத்திரத்தில் சிறந்தது திருவாசகம்; சாஸ்திரத்தில் சிறந்தது திருமந்திரம்.”

—ம. பொ. சிவஞானம்

அடையாது. ஆங்கிலச் சிறுர் இன்னும் ஆங்கிலோ-சாக்ஸன் சொற்களைப் பேசுதல் காணலாம். இதற்குப் பழக்கமே காரணம் ஆகும். மொழியில் உண்டாகும் மாறுதல்கள் முதலில் எளியவை யாகவும் சிறியவை யாகவும் காணப் படினும்-அவையே சில தலைமுறை களில் அம் மொழியின் தன் மையை மாற்றிவிடுவன ஆகும்" என மொழி இலக்கணப்புலவ ரான டாக்டர் 'ஸ்வீட்' கூறி யிருத்தல் கருதத் தக்கது.

## மொழியால் உண்டாகும் பிளவு

எனவே வரைமொழி பயின்று, அம்மொழியினைப் பேசுவார்க்கும் அங்ஙனம் பேசாதார்க்கும் உள்ள தொரு வேறுபாடு நாளடைவில் பெருகித் தோன்றும் என்பது புல னாகும். படித்த மக்கள் ஒருவா றும் படியா மக்கள் ஒருவாறும் பல தலைமுறைகளாய்ப் பேசி வருவதலால் தமிழ் (ஒவ்வொரு மொழியும்) 'வரைமொழி' என வும், 'வாய்மொழி' எனவும் இரண்டாகி, வரைமொழி ஒரே நிலையில் மாறாது நிற்ப, வாய் மொழி காலம் கழியக் கழிய மாறுதல்கள் ஏற்று ஏற்றுப் போதல் இயல்பாய் நடைபெறு கின்ற நிகழ்ச்சியாக இருக்கின் றது. மேலும், ஒரே மொழி, மக்கள் அறிவு நிலைக்கு ஏற்ப மாறுதல் அடைதலும் இயல்பு; எனவே ஒரே மொழியை, 'இழுத் துக்கொண்டு' என்று படித்த வரும், இழுத்துக்கிட்டு, ஈத்துக் கிட்டு, இஸ்துகினு எனப் படிப் படியாகக் கீழ்நிலையில் உள்ள மக்களும் பேச இயல்பாகவே இடம் ஏற்படுகிறது. இந்நிலை வளர வளர, முன்னரே படியாத மக்களைப் பல்வேறு காரணங்கள் காட்டி வேறுபடுத்தி வந்த படித் தவர், இம்மொழி வேறு பாட்டை யும் துணையாகக் காட்டித் தம் மைச் சமூகத்தினின்றும் வேறு பிரித்துக்கொள்ளமுனைதல் கூடும். இலக்கணம் வகுத்து, வாய்மொழி, வரைமொழியிற் புகாவண்ணம் எல்லை எடுப்பர்; தம் பிள்ளைகளை அவ்வாய் மொழியைப் பேசாத வாறு பாதுகாத்தலும் செய்வர். இங்ஙனம் மொழி மாறுதல் சமூகத்தில் இரண்டு பிரிவுகளை இயல்பாகவே உண்டாக்கி விடு கின்றது.

## பிளவு ஒழிய வழி

இப்பிளவு நீங்கவேண்டுமாயின் பிள்ளைகளை இளம்பருவ முதலே வரைமொழியைப் பயிலச் செய் தல் வேண்டும்; அதனிற் பிள்ளை களைப் பேசப் பழக்கல் வேண்டும்; இஃதொன்றே நாளடைவில் சமூ கத்தைத் தூயமொழி பேசவைக் கும் தக்க மொழியாகும். 'தொட் டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' ஆதலின், இளமையில் உண்டா கும் சொற்களின் பிழையற்ற உச் சரிப்பு, ஒலி அமைப்பு முதலிய வற்றை இளமையிற் பண்படச் செய்தல் வேண்டும். இவை இள மையில் வலியுறுமாயின், அவரது வாழ்க்கையில் வரைமொழி வாய் மொழியாதல் திண்மை என்று சொல்லலாம்.

இலக்கியம்

# சிரிப்புத்தான் வருகிறது!

நெ. அ. பூ. கலைச்செல்வம்

அவன் அவளைச் சந்தித்தான். அவள் கண்களோ அவன் கண்களைச் சந்தித்தன. அவ்விருவர் கண்களும் என்ன பேசிக் கொண்டனவோ! அவளைக் காண்பதற்காகவே அவன் வருவான். அவனுக்காகவே அவளும் காத்திருப்பாள். நாட்கள் நகர்ந்தன. அவர்கள் உள்ளத்தில் காதல் வளர்ந்தது. அதற்குத் துணையாக இருந்தாள் அவள் தோழி. ஒரு நாள்! பொருளீட்ட வெளிநாடு செல்ல விரும்பிய அவன் தலைவியின் இசைவுபெறத் தோழியிடம் செய்தியைச் சொல்லி அனுப்பினான். தோழியும் தலைவியிடம் சென்று சொன்னாள். பிரிவை சகித்துக்கொள்ள முடியுமா அவளால்! தானும் வருவேனென்றாள். தலைவனிடம் சென்றாள் தோழி. தலைவி சொன்னதைச் சொன்னாள். அதைக் கேட்ட தலைவன் தன்னுள் சிரித்துக்கொண்டான். அதனோடு விட்டானில்லை. தன் நெஞ்சோடு பேசினான். என்ன பேசினான்? அது இதோ:

"நெஞ்சமே! நமக்குச் சிரிப்புத்தான் வருகிறது. நாமோ காட்டைக் கடந்து செல்லவேண்டியிருக்கிறது. காடு என்றால் சொல்லவும் வேண்டுமோ! அதுவும் நாம் செல்ல இருப்பதோ கோடைகாலம். நாட்டிலேயே சகித்துக்கொள்ள முடியாத கதிரவனின் கொடுமையைக் காட்டிலேயா சகித்துக் கொள்ள முடியும். கடந்துசெல்ல இருக்கின்ற காட்டில் கருமையான முகங்களையுடைய முசுக்கள் (ஒருவகைக் குரங்கினம்) நிறைந்திருக்கும். ஆனால் அவைகளும் இந்தக் கோடையில் அங்கிருக்காது. வேற்றிடம் சென்றிருக்கும். காரணம், குடிப்பதற்குக்கூட நீரின்றிக் குளங்களெல்லாம் வறண்டு போயிருக்கும். மண்பட்டுப் போயிருக்கும். அதனடியிலே, காட்டு வழி செல்பவர்கள் நீர் உண்பதற்காகக் குழிதோண்டி வைத்திருப்பார்கள். அந்தக் குழியிலும் குடிப்பதற்கும் ஒப்பாத கலங்கலான நீர் சிறிதளவே கிடக்கும். நீர் கிடைக்கப் பெறுமையினால் அலைந்து திரிந்த ஒரு களிறு அந்தக் கலங்கலைத் துதிக்கையால் எடுத்துக் கன்றினையுடைய தன் இளைய பிடியின் பரந்த தலையிலே சொரிந்து அதனுடைய வெம்மை போக்கி விட்டோம் என்ற எண்ணத்தில் எஞ்சிக் கிடந்த சேற்றினைக் கொண்டு தன் உடலில் பூசித் தன்னுடைய வெம்மையைப் போக்கிக் கொள்ளும். சேறு பூசிக் கொண்டதனால் அதன் நிறமே வேறுபட்டுத் தோன்றும். எரிக்கின்ற வெயி

வில் ஆறு குளமே வறண்டு போகின்றதென்றால் சேறு எம்மாத்திரம். அதிலும் உடலில் பூசப்பட்ட சேறு வெகு சீக்கிரம் காய்ந்து போகும். சேறு காய்ந்தால் சொல்லத்தேவையில்லை. சொரியெடுக்கும். சொரியெடுத்த தன் முதுகினை பாதையின் பக்கத்தே உள்ள கடப்ப மரத்தின் மீது உராய்ந்து கொள்வதனால் போக்கிக் கொள்ள முயலும் வலிமையுடையதாயிற்றே களிறு! அது உராய்ந்தால் மரம் அசையாமல் ஆடாமலா இருக்கும். அசையும். அதனால் சிவந்த காம்புகளையுடைய அக்கடம்பின் வெண்மையான பூங்கொத்துக்கள் உதிரும். பூவிழந்த செடியும், பொட்டிழந்த மங்கையும் பொலிவிழப்பது போல் அந்தக் கடப்ப மரங்களும் பூங்கொத்துக்களை இழந்ததினால் களையிழந்து போகும். அதனால் அடர்த்தியான நிழலும் குறைந்துபோய், வரி வரியாக வரி நிழலாக விளங்கிக் கொண்டிருக்கும். அத்தகைய வரி நிழலிலே தங்கித்தங்கிச் செல்ல வேண்டும். இத்தனை கொடுமைகளையும் என்னோடு சேர்ந்து அனுபவிக்க வருவேன் என்கிறாளாம், பரந்த மென்மையான தோளினையுடைய என் காதலி.

மேலும் காட்டுவழியே செல்பவர்களை வழிமறித்து அவர்கள்பால் உள்ள பொருள்களைக் கவர்ந்து செல்வதோடல்லாமல் அவர் தம் உயிருக்கும் ஊறுவிளைவிக்கும் இயல்பினை உடையவர்கள் மழவர்கள். வழிப்பறி செய்த பொருள்களை எடுத்துக்கொண்டு விரைவாகச் செல்லவேண்டியவர்களாதலால் தேரேறி வருவார்கள். தேருருள்கள் பலமுறை ஊர்ந்து செல்வதால் தடம் தோன்றிப் பாதையாக அமையும். அதையே பாதையாகக் கொண்டு செல்லும் வாணிக மாக்கள் வெண்மையான பனை ஓலைக் குடைகளிலே சோற்றைப் பொதிந்து எடுத்துச் செல்வர். பயங்கர இரைச்சலோடு வேகமாக வீசும் சூறாவளிக் காற்று வணிக மக்கள் எடுத்துச் செல்கின்ற சோறு பொதிந்த ஓலைக் குடைகளைக் கவர்ந்து செல்லும். அதனால் ஏற்படுகின்ற ஒலியானது தன் பிணையின் குரலெனக் கருதி, என்ன ஆபத்தோவென அஞ்சிய மானேறு தன் பிணையினை அழைத்துக்கொள்ள கூப்பிட்டபடியேயிருக்கும்.

அத்தகைய காட்டுவழியில் என் அருமைக் காதலியும் நம்மோடு வருவேன் என்கிறாளாம். காட்டுவழி அறியாதவள், என்பால் உள்ள காதல் மிகுதியால் அவ்வாறு சொல்கிறாள். அவள் அறியாமையை நினைக்கும்போது நமக்குச் சிரிப்புத்தானே வருகிறது!

**நாம்நகை யுடையம்**
**நெஞ்சே !—கடுந்தெறல்**
**வேனில் நீடிய**
**வானுயர் வழிநாள்,**
**வறுமை கூரிய**
**மண்நீர்ச் சிறுகுளத்**
**தொடுகுழி மருங்கில்**
**துவ்வாக் கலங்கல்**

கன்றுடை மடப்பிடிக்
கயந்தலை மண்ணிச்
சேறுகொண் டாடிய
வேறுபடு வயக்களிறு
செங்கோல் வாலிணர்
தயங்கத் தீண்டிச்
சொரிபுறம் உரிஞிய
நெறியயல் மராஅத்து
அல்குறு வரிநிழல்
அசைஇ, நம்மொடு
தான்வரும் என்ப,
தடமென் தோளி—
உறுகண் மழவர்
உருள்கீண் டிட்ட
ஆறுசெல் மாக்கள்
சோறுபொதி வெண்குடைக்
கணைவிசைக் கடுவளி
எடுத்தலின், துணைசெத்து
வெருளேறு பயினும்
ஆங்கண்,
கருமுக முசுவின்
கானத் தானே.

(*அகம்–121, பாடியவர்: மதுரை மருதன் இளநாகனார். திணை: பாலை. துறை: தோழியால் 'தலைவி தான் வரும்' எனக் கேட்ட தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது*).


# புதுமுறை சங்க வாய்பாடு

(V. K. சேஷாத்திரி. B. A., L. T.,
Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0- 13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

மானேஜர்,
அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

# சென்னை ராஜ்யத்தைப் பற்றிய விபரங்கள்:

—::—

| | | |
|---|---|---|
| பரப்பளவு (பரப்பாலே பத்தாவது ஸ்தானம் பெற்றது): | — | 130,357 சதுர. கி. மீ. 50,331 சதுரமைல் |
| மக்கட் தொகை | — | 33,686,953 (33·7 கோடி) |
| மக்கள் நெருக்கம் | — | 258 பேர் ஒரு சதுர கி. மீ. |
| (மக்கள் நெருக்கத்திலே ஐந்தாவது ஸ்தானம் பெற்றது) | — | (672 பேர் ஒரு சதுர மைலுக்கு) |
| மக்கட் தொகை பெருக்கம் 1951–61 | — | 21·4 சதவீதம் |
| நில விளிம்பு ஒதுக்க நீளம் | — | 1,200 கி. மீ· (750 மைல்) |
| கரையோர நீளம் | — | 992 கி. மீ.(620 மைல்) |
| மாவட்டம் | — | 13 |
| தாலுக்கா | — | 103 |
| பட்டினங்களும் நகரங்களும் | — | 338 |
| நிலத்தீர்வை கொண்ட கிராமங்கள் | — | 14,124 |
| மொத்த கிராமங்கள் பட்டிதொட்டிகள் உட்பட | — | 19,120 |
| பாராளுமன்ற உறுப்பினர்: லோக்சபா | — | 41 |
| ,, ,, ராஜ்யசபை | — | 18 |
| ராஜ்ய சட்ட சபை உறுப்பினர் | — | 207 |
| ராஜ்ய மேல்சபை ,, | — | 63 |
| எழுத்தறிந்தோர் சதவீதம் | — | 33·4 சதவீதம் |
| பல்கலைக் கழகங்கள் | — | 2 |
| கலை, விஞ்ஞானக் கல்லூரிகள் | — | 69 |
| பொறி இயல், கல்லூரிகள் | — | 6 |
| மருத்துவக் கல்லூரிகள் | — | 5 |
| மிருக மருத்துவ கல்லூரி | — | 1 |
| போதகர் பயிற்றும் கல்லூரிகள் | — | 19 |
| உயர்நிலைப் பள்ளிகள் | — | 1,998 |
| ஆதாரப் பள்ளிகள் (30 செப்டம்பர் 1964 கணிதப்படி) | — | 30,138 |
| தொழில் முறை பயிற்சிப் பள்ளிகள் | — | 88 |
| பஞ்சாயத்து யூனியன் | — | 374 |
| பஞ்சாயத்து | — | 12,523 |
| வளர்ச்சி திட்ட பகுதி | — | 373 |
| விவசாய பரப்பளவு | — | 14,817 |
| கால்நடைகள் | — | 24,638,800 |
| காட்டுப் பகுதி பரப்பு | — | 17·1 சதவீதம் |
| ஒதுக்கப்பட்ட காடுகள் பரப்பு | — | 17,236 சதுரமைல் |
| மின்சார வசதிகொண்ட நகரங்கள், கிராமங்கள் (1–அக்டோபர்–1964 வரை கணக்குப்படி) | — | 17,579 |
| பதிவு பெற்ற தொழிலகங்கள் (1963–ம் வருட முடிவில்) | — | 6,572 |

# மறையாத மேதை

**எஸ். ஜெயலக்ஷிமி**

**'வின்ஸ்டன் சர்ச்சில்'** :—உலக வரலாற்றில் தமக்கென்று ஒரு தனியான இடத்தைத் தேடிப் பிடித்துக் கொண்டவர். போர்க்கள புருஷராகவும், அரசியல் தந்திரியாகவும், வீரமும் விவேகமும் கலந்த சொற்பொழிவாளராகவும், ஈடற்ற இலக்கிய மேதையாகவும் விளங்கிய அன்னவர் பெருமை நிலத்தினும் பெரிது; வானினும் உயர்ந்தது. ஆம்; அப்படிப்பட்ட அஞ்சா நெஞ்சம் பெற்றவரின் வரலாற்றுச் சுருக்கமே இது.

*'தோன்றிற் புகழோடு தோன்றுக !' என்னும் மணிமொழிக்கு ஒரு சான்றாக, 1874ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், 30ஆம் நாளன்று மாலையில் எதிர்பாராதவிதமாகப் பிறந்தார்.*

*ஆம் ; அதிசயமான கால கட்டம் தான் அது.* ரேண்டாப் சர்ச்சில் *பிரபுவின் வாழ்க்கைத் துணைவியான* ஜென்னி ஜெரோம் *என்பவர், விநோத மண்டபத்தில் நடந்து கொண்டிருந்த நடனத்தைக் கண்டு களித்துக் கொண்டிருந்தார். பின்னால் நடக்கப் போவதை முன்னாலேயே அறிந்து கொள்ளும் சக்தி எல்லோருக்குமே இருப்பதில்லை என்பதற்கு ஒரு சான்றாக விளங்கிய அம்மையார் சிறிது நேரத்துக்கெல்லாம் எதிர்பாராத விதமாக ஏற்பட்டு விட்ட பிரசவ வேதனையால் துடிக்கலானார். அந்தக் கொடிய துன்பத்திலிருந்து ஒரு மணி நேரத்துக்கெல்லாம் விடுபட்ட ஜெரோமுக்கு ஆண் குழந்தை*

*ஜனவரியில் எதிர்பார்த்த குழந்தை, நவம்பர் மாதத்தின் இறுதியிலேயே பிறந்துவிட்ட அதிசயம் ! இதன் விளைவாக இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்த பெற்றோர் தம் குழந்தைக்கென்று ஒரு சிறந்த பெயரைத் தேர்ந்தெடுத்துச் சூட்டினர்; அந்தப் பெயர்தான்,*

*சரியவிருந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கீர்த்தியை நிமிர்த்தியது; இரும்பு நெஞ்சம் படைத்த இட்லரை, 'ராஜதந்திர' மந்திரத்தால் வீழ்த்தியது; நேச நாடுகளுக்கு நல் விருந்தை நல்கியது.*

*ஆம்; வின்ஸ்டன் லியோனார்டு ஸ்பென்ஸர் சர்ச்சில் ! இந்த நீண்ட பெயரின் சுருக்கமே, 'வின்ஸ்டன் சர்ச்சில்' ஆகும்.*

*இவரது இளமைப் பருவம், அதாவது, பள்ளிப் பருவம் சோகம் சூழ்ந்ததென்றே சொல்ல வேண்டும். இவரது சப்பையான மூக்கும், உருண்டையான தலையும் பெற்றோர்களுக்குப் பிடித்திருந்*

தது போல் அவரது கல்வியிலே பிடித்திருக்கவில்லை. பள்ளிப்படிப்பில் அக்கரையின்றி கிடந்த சர்ச்சில் போர்தளபதியாக மாறவேண்டுமென்கிற வேட்கையில் அலைந்தார். அந்த ஆசையின் விளைவாகத்தான் பிற்காலத்தில் இவர் போர்த் தலைவனாக ஆளாகினர் என்று சொல்வது மிகையாகாது. ஆனால் அவரது தாயின் மனோபாவமோ, அவரது எண்ணத்துக்கு முற்றிலும் மாறாக இருந்தது. அதாவது தம் கணவர் இங்கிலாந்தில் நிதிமந்திரியாக இருப்பதுபோல் தம்முடைய மகனும் எதிர்காலத்தில் இருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டார். அந்த ஆசையின் விளைவாக லண்டன் மாநகரில், 'அஸ்காட்' என்னும் இடத்தில் இருக்கின்ற ஒரு பள்ளியில் சர்ச்சிலைச் சேர்த்தார். சேர்த்தென்ன செய்ய? அவருக்குப் படிப்பில் அக்கறை இருந்தால்தானே? அதனாலேயே தாய் தந்தையரின் வெறுப்புக்கு ஆளாகி, சில பல வேளைகளில் அடிகளையும் பெற்றார். பின்னர், அந்தப் பள்ளியிலிருந்து 'கிண்டர்' என்னும் பள்ளியில் சேர்த்தனர். அதன் விளைவாக அவருக்கல்ல, அவர்தம் பெற்றோர்க்கு ஒரு விதத்தில் திருப்தி ஏற்பட்டது. ஆனால் இவருக்கு ஆசிரியராக அமைந்த, 'ஈவாமூர்' என்பவருக்குப் பெரிய தலையிடியாக அமைந்தது. இதற்குக் காரணம் வின்ஸ்டனுக்குப் பள்ளிப் பாடத்தில் அக்கறையின்மைதான்! ஆயினும் சோர்வடையாமல் இவருக்குப் பாடம் சொல்லிக்கொடுத்து வந்தார்.

இந்தப் பள்ளியின் படிப்பு முடிந்ததும் இவரது தந்தையால் 'ஹாரோ' என்னும் பள்ளியில் சேர்க்கப்பட்டார். இந்தப் பள்ளியில் சேர்வதற்கென்று ஒரு சிறு தேர்வு முறை இருந்தது. அந்த எளிய தேர்வில் கூட இவர் தோல்வியைத்தான் கண்டார். இதன் விளைவாக இப்பள்ளியின் தலைமையாசிரியர், 'மிகப் பெரிய பிரபுக்கு இப்படிப்பட்ட புத்தியில்லாத பிள்ளையா பிறந்திருக்கவேண்டு' மென்று மனத்துள் எண்ணி, கடைநிலை வகுப்பில் கடைகோடி மாணவனாக இவரைச் சேர்த்துக் கொண்டார். அப்போதும் இவருக்குப் பாடத்தில் ஆர்வம் பிறக்கவில்லை. அதற்குப் பதிலாக குதிரை ஏற்றத்திலும் நீச்சல் விளையாட்டிலும் நல்ல பயிற்சி அடைந்தார். இராணுவ பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடுவதில் அதிக ஆர்வம் பெற்றார். இராணுவ பொம்மைகளை வரிசைக் கிரமமாக நிறுத்தி வைப்பதும் யுத்த விளையாட்டு நடத்து

### முன்னேற வழி...

''வாழ்வின் கடமைகள்
வருத்துவ மெய்யே,
வாழ்வின் சுகங்களோ
வறியன நிலையில்,
குறியதும் தன்னொளி
குறைந்து பொய்மை,
செறிவதாய்த் தோன்றினும்
தீரம் இருளிலும்
பலமெலாம் உயத்து
மேலமுன் னேறுக''

—விவேகானந்தர்.

வதுமே இவரது அன்றாட பணியாயிற்று.

இந்தப் போக்கை மிகவும் கூர்மையோடு கவனித்து வந்த இவரது தந்தை, தம்முடைய மனத்தில் இருந்துவந்த மிகப் பெரிய ஆசையை ஒதுக்கி வைத்துவிட்டு, தம் மகனை அருகில் அழைத்து, "நீ இராணுவ முகாமில் சேர விரும்புகிறாயா?" என்று கேட்டார். இப்படிப்பட்ட ஒரு கேள்வியை தம் தந்தை கேட்பாரென்று கிஞ்சித்தும் எதிர்பார்க்காத சர்ச்சில் மிகப் பெருமிதத்தோடு தலையசைத்து ஒப்புதல் தெரிவித்தார்.

மகனின் விருப்பத்தை நிறைவேற்றத் துணிந்த அவர் தந்தை, ஹர்ஸ்ட் இராணுவக் கலாசாலையில் சேர்த்தார். இராணுவத்தில் அதிகப் பிடிப்புள்ள வின்ஸ்டன் சர்ச்சில் 1894ஆம் ஆண்டில் ஹஸார் பகுதிக்கு உயர்த்தப்பட்டார். எப்படியோ, இவரது மனம் கதிகலங்கி போகும் அளவுக்கு 1895ஆம் ஆண்டில் ரேண்டால்ப் காலமாகிவிட்டார். அப்போது சர்ச்சிலுக்கு 21 வயது பூர்த்தியாகி இருந்தது. இப்போது அவருக்குக் கைம்மை கோலம் கொண்டுவிட்ட தாயைத் தவிர வேறு யாருமே துணையில்லை.

இந்த வருடத்தில்தான் கியூபாவில் கலகம் பிறந்தது. உடனே ஒரு சில முக்கிய அதிகாரிகளின் உத்தரவின் பேரில் கியூபாவில் ஸ்பெயின் தேசத்துக்காகப் போர் புரிந்தார். அங்கிருந்து திரும்பி வருகையில் சுருட்டுப் புகையோடு வந்தார். ஆம்; அவருக்கென்று கியூபா தேடித்தந்த பரிசு இது.

கியூபாவிலிருந்து கீர்த்தியுடன் திரும்பி வந்த வின்ஸ்டன் சர்ச்சில் ஒரு இராணுவப் படையோடு இந்தியாவுக்கு—அதாவது, பெங்களூருக்கு வந்தார். இந்தக் காலகட்டத்தில்தான் நூல்களைப் படிப்பதிலும், 'போலோ' என்னும் விளையாட்டில் தீவிரம் காட்டுவதில் முனைந்தார், வீரர்கள் தூங்குவார்கள்; சர்ச்சில் தூங்கமாட்டார். எதையேனும் வாசித்துக் கொண்டிருப்பார். குறிப்பாக, கிரேக்க ஞானிகளான பிளேட்டோ, அரிஸ்டாடில், சாக்ரடீஸ் போன்றோரின் நூல்களைத் தம் அன்னையின் மூலமாக வரவழைத்து வாசித்துக்கொண்டிருப்பார். ஆம்; அவ்வளவு பிடிப்பு ஏற்பட்டுவிட்டது படிப்பில்.

1897ஆம் ஆண்டில் லண்டன் மாநகருக்குத் திரும்பி வந்தார்.

---

## 'ஞான விளக்கம்'

'ஞானம்' என்னும் சொல்லின் உயர்ந்த பொருள் யாது? ஞானி, இவ்வாறு பேசுகிறான் :— 'ஏ, பிரபுவே! இப்பிரபஞ்சம் முழுவதும் செயல்புரிபவன் நீ ஒருவனே. நானோ உன் கையில் உள்ள மிகச் சிறிய கருவியாய் இருப்பவன். எதுவும் என்னுடையது அன்று. யாவும் உன்னுடையதே. நான், என் குடும்பம், என் தானம், என் பண்புகள்—இவை யாவும் உன்னுடையனவே.'

—ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

பாரத பூமியின் வடமேற்கில் கலவரம் நிகழ்வதாகக் கேள்விப்பட்டு, அந்தப் பகுதிக்கு உரியவராக விளங்கிய பின்டன் பிளட் என்பவரிடம் அனுமதிச் சீட்டு பெற்றுக்கொண்டு மீண்டும் இந்தியாவை நோக்கிப் பயணமானார். கைபர் கணவாயில் சில நாட்கள் பணியாற்றிவிட்டுப் பெங்களூருக்குப் புறப்பட்டார். இதற்குப் பின்னர் இங்கிலாந்துக்குச் சென்று லங்காஷேர் துறையில் ஓல்டாம் தொகுதியில் கன்ஸர்வேடிவ் கட்சி உதவியால் போட்டி போட்டார். வெற்றி பெற்றாரா? ஊஹும்.... பழைய தோல்வியைத் தழுவினார்.

இந்தப் பருவத்துக்குப் பிறகு தான் போயர் சண்டை தொடக்கமாகியது. 1889–ஆம் ஆண்டில், 'மார்னிங் போஸ்ட்' என்ற இதழில் நிருபராகத் தொண்டாற்ற தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றார். 'போயர்' என்று சொல்லக் கூடிய பழங்குடி மக்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கு மிடையே போர் நிகழ்ந்தது. எனவே, சர்ச்சிலை, போயர் குதிரை வீரர்கள் சிறைபிடித்தனர். அவ்வீரர்களிடமிருந்து மீள்வதற்காக தம்முடைய துப்பாக்கியைத் தேடினார் அது கிடைக்கப் பெறாததால் பிரிட்டோனியா சிறையில் அடைக்கப்பட்டார். இச் சிறைவாசத்தைக் குறித்து மிகவும் வருந்தினார்.

சிறையின் கொடுமையிலிருந்து மீள்வதற்கு முடியாமல் சில நாட்கள் தவிப்புக்கு ஆளானார். 'ஏதேனும் ஒரு பயங்கரப் புரட்சியை நடத்தி இங்கிருந்து போய்விடலாமா?' என்று கூட எண்ணிவிட்டார். ஒரு சமயம் சிறையதிகாரியின் தொப்பியை கள்ளத்தனம் செய்தார். இதற்குப் பிறகு தன்னையொத்த பிரஜைகளோடு சிறையிலிருந்து விடுபட முயன்றார். அம் முயற்சி முழுப்பலன் அளிக்காமல் போகவே தம்மை மட்டும் விடுவித்துக்கொள்ள சுவரேறி குதித்தார். யாருடைய கண்களிலும் சிக்காவண்ணம் விரைந்து ஓடினார். உடனே?

பிரிட்டோனில் ஒரே பயங்கர அமளி....புதுப்புது வகையான பரபரப்புத் துளிகள். 'வின்ஸ்டன் சர்ச்சிலை உயிருடனோ அல்லது வெறும் பிரேதமாகவோ கொண்டு வந்து காண்பிப்பவர்களுக்கு 25 ஷில்லிங் இனாம்' என்ற பறையறிவிப்பு வேறு. ஆனால் அவர் யாருடைய வலையிலும் விழவில்லை. ஒரு வெள்ளையர் உறுதுணையோடு டர்பன் அடைந்தார். அங்கு அவருக்கு மக்கள் வெள்ளத்தால் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

1900 வருடத்தில் போயர் இங்கிலாந்து வாகை மாலை சூடி, 'லேடிஸ் மித்'தை கையடக்கம் செய்துகொண்டபோது அவ்விடத்திலே சேனசமுத்திரத்தோடு ஊர்வலமாக வந்தார், வின்ஸ்டன் சர்ச்சில்! இத்தக் கால கட்டத்தில்தான் அரசியலில் பங்கேற்றார். அதாவது, கன்சர்வேடிவ் பார்லிமெண்ட் அங்கத்

தினராக மாறினர். பின்னர் அந்தக் கட்சியில் மேலும் அங்கம் வகிக்கப் பிரியமில்லாமல் சில ஆண்டுகளுக்குள் லிபரல் கட்சிக்குள் நுழைந்தார்.

எப்படியோ....ஆண்டுகள் ஓடின ...1908–ஆம் ஆண்டில் வின்ஸ்டன் சர்ச்சிலுக்கும் ஸ்காட்லாந்துக்குரிய கிளமென்டைன் என்ற மங்கைக்கும் செப்டம்பர் திங்கள் 12–ஆம் நாளன்று மணவிழா நடந்தது. ஆம்; ஓர் இராணுவ அதிகாரியான சர். ஹோஸியரின் மகளை மணம் புரிந்து கொண்டார். 1909இல் டியானு என்னும் மூத்த மகளையும், 1911இல் ரேண்டால்ப் என்கின்ற மகனையும், 1914இல் சாரா (இவர் இப்போது திரைப்பட நடிகையாக உள்ளார்) என்னும் இன்னொரு மகளையும் செல்வங்களாகப் பெற்றார். 1918 லும் ஒரு மகன் பிறந்தான்; இறந்தான். இவர்களுக்குப் பிறகுதான் 1922இல் மேரி அவதரித்தாள்.

மீண்டும் வேதாளம் பழைய முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது. 1924ஆம் ஆண்டில் கன்ஸர்வேடிவ் கட்சியில் தம்மை அங்கத்தினராகப் பதிவாக்கிக் கொண்டார். பிரிட்டிஷ் அமைச்சரவையில் பல்வேறு வகையான பதவிகளில் அங்கம் வகித்தார்.

1940ஆம் ஆண்டு மே மாதம் பத்தாம் நாளன்று இட்லரின் பயங்கரப் படைகள் ஹாலந்தையும் பெல்ஜியத்தையும் நொறுக்கிக் கொண்டிருந்தன. அப்போது தான் தம்முடைய நாட்டின் நலே


" ஆரம்பக்கல்வி "
ஆபீஸ்.
94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை–1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விணணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்
முக்கிய அறிவிப்பு
Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு :

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

மைப் பீடத்தில் அமர்ந்தார், வின்ஸ்டன் சர்ச்சில். அதாவது சேம்பர்லின் பிரபு தம்முடைய பதவியிலிருந்து தாமாகவே விடுவித்துக் கொண்டதுடன் 66 வயது நிரம்பிய சர்ச்சில் போர்க்கால கூட்டாட்சியைத் தோற்றுவித்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குப் பிரதமரானார். இவரது பெருமைக்குக் கிரீடமாக அமைந்தது, அப்போது ஏற்பட்ட இரண்டாவது மகா யுத்தம்தான்!

1945ஆம் ஆண்டு ஜெர்மனி அடைக்கலம் புகுந்தது. அதே சமயத்தில் சர்ச்சிலின் பதவியும் சரிந்தது. அந்த வருடத்தில் ஜூலைத் திங்களில் நடந்தேறிய பொதுத் தேர்தலில் பிரிட்டன் சாம்ராஜ்யத்தில் தொழிலியக்கம் வாகை சூடியது.

ஆனாலும் அவர் தம் முயற்சியிலிருந்து விடபடவில்லை. 'தோல்வியே வெற்றிக்கு அடிப்படை' என்னும் தத்துவத்தை ஆரம்பப் பள்ளியிலிருந்து பெற்றவராதலால் 1951ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வெற்றி பெற்றுப் பழைய இடத்தைக் கைப்பற்றினார். அதாவது 77 வது வயதில் மீண்டும் பிரதமரானார். 1955ஆம் ஆண்டு வரை நேடோ, கொரியா, சீனா, தென்கிழக்கு ஆசியா, ஜெர்மனிக்குச் சேனைபலம், ஐரோப்பிய ஒற்றுமை, மத்திய கிழக்கு ஹைட்ரஜன் குண்டு முதலான முக்ய பிரச்னைகளை சமாளிக்க வேண்டிய கட்டத்தில் ஈடுபட்டார்.

1953இல் இவர் தம் திறமையை வெளிப்படையாக்கினார். எலிசபெத் மகாராணியின் முடிசூட்டு விழாவின் மூலமாகவும், காமன்வெல்த் மாநாட்டின் வாயிலாகவும் திறமையைக் காட்டினார். 1955 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதத்தில் தம்முடைய பதவியிலிருந்து விலகிக் கொண்டார். விலகிக் கொண்ட நாளிலிருந்து தமக்குப் பிரியமான ஓவியக் கலையில் ஈடுபடலானார். இவரது எழுத்து வன்மைக்குச் சான்றாக 1956 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், 'ஆங்கிலம் பேசுவோர் சரிதை' என்னும் நூல் வெளியாகியது. இதற்கு முன்னமேயே 1953இல் நோபல் பரிசு அடைந்திருந்த வின்ஸ்டன் சர்ச்சில் 1957இல் எலிஸிபெத் ராணியிடமிருந்து, 'நைட் ஆப் தி கார்டர்!' என்னும் கௌரவ பட்டத்தை அடைந்தார். காலஞ் சென்ற ஜான். கென்னடி இவ்வுலகத்தலைவர் வின்ஸ்டன் சர்ச்சில் பெருமகனுக்கு அமெரிக்க கௌரவக் குடியுரிமை மதிப்பீடு அளித்து அமெரிக்கமாந்தரின் பாராட்டுதலைத் தெரிவித்தார்.

1964ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27ஆம் நாளுடன் பார்லிமெண்டிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொண்டார், வின்ஸ்டன் சர்ச்சில்.

இப்படி,உலகமெலாம் புகழ் பரவ பணிபுரிந்த மேதை 1965 ஆம் ஆண்டில் மறையாத மேதையானார்.

# சர்ச்சிலின் மறைவும் மேதைகளின் துளிகளும்

''சர்ச்சிலின் பெருமைக்குச் செழிப்புற்றோங்கி விளங்கிவரும் ஐரோப்பா ஒரு நினைவுச் சின்னமாகத் திகழ்கிறது. தன் வாழ்வினைத்தையும் தன் தாய் நாட்டிற்காக அர்ப்பணித்தார். எக்காலத்திற்கும் அவரை எண்ணி அவரைப் பெற்ற நாடு பெருமை கொள்வது மிகவும் பொருத்தமே.

—ராஜாஜி.

''தன் வாழ்நாளில் வரலாற்றைத் தோற்றுவித்தவரின் வாழ்வு அமைதி கொண்டுவிட்டது. வரலாறு படிக்கப்படும்வரை சர்ச்சிலின் நினைவு நிலைத்து நிற்கும். உலக முழுவதுமே அவரது மரணச் செய்தி கேட்டுக் கண்ணீர்விடும்.''

—ஹெரால்டு வில்சன்.

உலகிலிருந்து மாமனிதர் ஒருவர் மறைந்துவிட்டார். அவரை பல தலைமுறைகள் நினைவில் வைத்திருக்கும். இருபதாவதுநூற்றுண்டு சரித்திரத்தில் அவருக்கு ஒப்பற்ற இடமுள்ளது.

—பிரதமர் சாஸ்திரி.

சர்ச்சில் மரணத்தால் உலகம் ஒரு பிரபல ராஜதந்திரியை இழந்து விட்டது.

—ஸ்ரீ காமராஜ்.

உலகில் இருள் சூழ்ந்து, மக்கள் நம்பிக்கை இழந்தபோது ஆண்டவன் நமக்கு வின்ஸ்டன் சர்ச்சிலை அளித்தார். அந்தப் பயங்கர அபாயக்காவல் பற்றியும், வெற்றி பெற்றவர்கள் பற்றியும் மக்கள் பேசும்வரை சர்ச்சிலின் பெயர் நீடிக்கும்.

—யு எஸ். ஜனாதிபதி ஜான்ஸன்.

இந்திய தேசிய இயக்கத்தை எதிர்த்த சமயத்தில்கூட இந்தியாவிடமும், அதன் கலாச்சாரத்திடமும் சர்ச்சில் மதிப்பு வைத்திருந்தார்.

—வி. கே. கிருஷ்ணமேனன்.

பிரெஞ்சு மக்களையும், உலக சுதந்திரத்தையும் காப்பதற்குப் பெரிதும் உதவியவர், வின்ஸ்டன் சர்ச்சில்.

—பிரெஞ்சு அதிபர் டிகால்.

ஒரு சரித்திர புருஷனாய்த் திகழ்ந்து அவர் இன்று 'சாந்தி' பெற்றுவிட்டார். வரலாறு உள்ளளவும் அவரது நினைவு நிலைத்திருக்கும்

—பிரதமர் வில்ஸன்.

சர். வின்ஸ்டன் நம் காலத்தின் அரிய மனிதர்களில் ஒருவர். தம் திறமை முழுவதையும் காட்ட உலக யுத்தம் அவருக்கு வாய்ப்பளித்தது. அபாய காலத்தில் நாட்டுக்குத் தலைமைவகிக்க அவர் மிகவும் தகுந்தவராக இருந்தார்.

—லார்டு அட்லி.

இட்லரின் சர்வாதிகாரப் பிடியில் உலகம் சிக்கி உழலாதவாறு உலகத்தைக் காப்பாற்றித் தந்த பெருமை பேரறிவாளர் சர்ச்சிலுக்கு உண்டு. அவர் உலகோரின் உள்ளத்தில் நீங்காத ஒரு இடத்தைப் பெற்றவர்.

—இரா. நெடுஞ்செழியன்.

உண்மையில் சமூக வாழ்வு நிலைகெடாதிருக்க வேண்டுமானால், தன்னைப்போல் பிறரை நேசிக்கும் அந்த நல்ல அன்பு மக்கள் உள்ளத்தில் நடமாட வேண்டும்.

# வளரும் சமூகம்

அ. மு. பரமசிவானந்தம், M.A., L.T.

இருபதாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் மனிதன் உலக அதிசயங்கள் அனைத்தையும் உணர்ந்தவனாகத் தன்னைக் காட்டிக் கொண்டாலும், இன்னும் அவன் அறிந்ததைக் காட்டிலும் அறியாதன பலப் பலவாம். மற்றும சென்ற காலத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் இம்மனிதன், தன் ஆராய்ச்சி எல்லையை ஓரளவே நிறுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. தானும் தன் சமூகமும் வளர்ந்த வரலாற்றை அவன் ஆராயத் தொடங்கி, எவ்வளவு தான் முயன்றாலும் ஒரு சில ஆயிரம் ஆண்டுகளோடுதான் மனிதன் நிற்க வேண்டியுள்ளது. ஆனால் எத்தனையோ லட்சக் கணக்கான ஆண்டுகள் அவனுக்கு முன்னே கழிந்துள்ளன என்பதை எண்ணிப் பார்க்கவும் அவனால் முடியவில்லை. உலகம் உண்டான நாளையும் அதில் உயிர் உண்டான நாளையும், அந்த உயிரினத்தின் உச்சியில் மனிதன் உண்டான காலத்தையும், அந்த, மனிதன் மெள்ளமெள்ளச் சமுதாயத்தை உருவாக்கின வரலாற்றையும் நாள் தோறும், நாடு தோறும் அறிஞர்கள் ஆராய்ந்து கொண்டே வருகின்றனர். எனினும் திட்டமான முடிவுக்கு ஒருவரும் வரவில்லையன்றோ!

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற முதுமொழி தமிழ் நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உண்டான ஒன்றாகும். உலகில் தோன்றிய யாரும் உறவினரே யாவர் என்ற கொள்கையில் உண்டாகிய உயரிய மொழி இது. திருவள்ளுவனார் 'பிறப் பொக்கும் எல்லாஉயிர்க்கும்' என்று உயிர்கள் அனைத்தையுமே ஒன்றுபடுத்திப் பேசுகிறார். இத்தகைய உயரிய பண்பே சமுதாயத்தின் உச்ச நிலை. 'எல்லாரும் நம்மவரே' என்று உதட்டால் அல்லாமல் உள்ளத்தால் பேசும் பண்பாடே சமுதாய வாழ்வின் ஒப்பற்ற பண்பாடு. ஆனால் அந்த நிலையை அடைய எத்தனை எத்தனை ஆயிரம் ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டும். ஆம்! அந்த நெடுங் காலத்துக்கு இடையில் பல்வேறு சூழல்களுக்கும் மாற்றங்களுக்கும் இடையில் சமுதாயம் வளர்ந்துகொண்டே வந்திருக்கின்றது.

'சமுதாயக் கட்டுப்பாடு' என்பது மனித இனத்துக்கு மட்டும்

பொருந்திய ஒன்று எனச் சிலர் வாதிட நினைத்தாலும், உண்மையில் ஆராய்ந்தால் அந்த வாதம் பொருந்தாது என்பது நன்கு விளங்கும். ஊர்ந்து செல்லும் எறும்பும், பறக்கும் பறவையும் சேர்ந்து வாழ்வதைக் காண்கின்றோம். மனிதனுக்குத் துன்பந் தரும் எனக் கருதும் தேனீக்களும் சேர்ந்து வாழவில்லை என்றால் தேன் கூடு ஏது? வீட்டில் வாழும் 'சிட்டுக் குருவி'யின் குடும்ப வாழ்க்கை சமுதாய வாழ்க்கைக்கு எத்தனையோ உண்மைகளை உணர்த்தவில்லையா! காலை மாலைகளில் வரிசை வரிசையாகப் பறந்து செல்லும் பறவைக் கூட்டங்களைக் கண்டு இன்றைய மனிதன் அத்தகைய ஒருமை உணர்வில் தான் வாழவில்லை என்று தலைதாழ்த்த வேண்டாமா? தனித்த கொடி தனக்குப் பற்றுக் கோடாகப் பக்கத்தில் உள்ள மரத்தைப் பற்றிப் படர்வதில்லையா? இடம்விட்டு இடம் தாவிச் செல்லும் எத்தனையோ உயிரினங்கள் கூட்டங் கூட்டமாக வாழ்வதனைக் காணுகின்ற நாம், 'கூடி வாழும் சமுதாயம்' மனித இனத்துக்கு மாத்திரமே என்பதை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்? காட்டுமிராண்டியாகக் கண்டதைத்தின்று காலம் கழித்த ஆதி மனிதன் ஒருவேளை இவற்றின் கூட்டுறவைக் கண்டு தானும் வாழ்தல் வேண்டும் என்று உணர்ந்து பின்னரே சமூகத்தை அமைத்துக் கொண்டிருப்பான். எப்படியாயினும் அவன் சமூகம் பல ஆண்டுகளில் உருவானது ஒன்றேயாகும்.

சமூகம்—ஓரறிவுயிர் தொடங்கி ஆறறிவுயிர் வரை கலந்து வாழ வேண்டும் என்று ஒன்றாக எண்ணும் சமூகம்—எப்படி உருவாயிற்று? 'நம்மவர்' என்று நாம் பேசும் போது மற்றொருவரை உடன் சேர்த்து எண்ணுகிறோமே அந்த நிலை எப்படி உண்டாயிற்று? மனிதன் 'தான்' என்ற எண்ணத்திலிருந்து விடுபட்டு சற்று அப்பால் நகர்ந்தால் இதற்கு விடை காண்பான். மற்ற உயிருள்ளவையும் இதற்கு விடை கூறவாய்ப் பெறவில்லையாயினும், செயலால் அந்த விடையே தருகின்றன என்பது உண்மை. 'தான்' என்ற சுய நலம் மெல்ல மெல்ல மறைய மனைவி, மக்கள், சுற்றம், இனம், நாட்டார், உலகத்தார், உயிரினம் என்று பரந்த நோக்கம் வளர்வதைக் காண்கிறோம். இந்த வளர்ச்சியே—உள்ள நெகிழ்ச்சியே சமூக வளர்ச்சிக்கு அடிப்படை. இதைத்தான் வள்ளுவர் தன் குறளில் மெள்ள மெள்ளக் காட்டி வளர்க்கின்றார். எனவே தன்னினும் வேறுபட்டவற்றையும், வேறுபட்டவர்களையும் 'தானாக' வோ இன்றேல் 'தன்னதாகவோ' காணும் பண்பாடே சமுதாய வாழ்வின் அடிப்படை. ஆம்! அந்த அடிப்படையில்தான் சமூகம் மெள்ள மெள்ள அரும்பித் தோன்றி வளர்ந்து வாழ்ந்து வருகின்றது.

தனியாகக் காட்டில் திரியும் விலங்குகளைப் போன்று கண்ட

தைத் தின்று காலங்கழித்த மனிதன் இன்று நினைத்த நேரத்திலே தான் சமூகம் பற்றி உணர்வு உண்டாகி யிருக்கவேண்டும்; அந்த உணர்வு ஒருவன் மற்றவனை உணரும் உணர்வாக மாறி இருக்கும். தன்னைப் போன்ற மற்றொரு மனிதனைப் பார்க்கும் போது, அவன் தன்னினும் வேறானவன் என்றோ, தனக்குப் பகைவன் என்றோ எண்ணி அவனைக் கொல்ல நினைத்துப் போரிடத் தொடங்கியிருப்பானாயின் சமூகம் உருவாகியிருக்காது. ஆனால் அதற்கு மாறாக 'அவன் நம்மவன்; நான் அவனோடு இணைந்து வாழவேண்டும்' என்று நினைத்த நினைப்பே சமூகத்தை உருவாக்கிற்று. இதற்கு உயிரினத்தின் அடிப்படை உணர்ச்சியாகிய ஆண் பெண் இனவுணர்ச்சியும் ஒரு முக்கிய காரணமாயிருந் திருக்கலாம். எனவே உயிர் தன்னை உணரும் உணர்ச்சி பெற்ற நாளிலேயே சமுதாய உணர்ச்சி தோன்றியிருக்க வேண்டும். எனினும் அந்த உணர்வு தோன்றிய நாளுக்கும் சமூகம் உருவான நாளுக்கும் இடையில் எத்தனையோ ஆயிரமாயிரம் ஆண்டுகள் கழிந்திருக்கும் என்பது உறுதி.

கூடி வாழ்வதுவே சமூகவாழ்வு என்று உணர்கின்றோம். அந்தக் கூட்டு வாழ்வு ஆதிமனிதனுக்கு எப்படி அமைந்தது? தனிமனிதனாக விலங்கெனக் காட்டில் வாழ்ந்த அவனுக்கு 'மனைவி மக்கள்' என்ற குடும்பம் தோன்றிய காரணமே முதலில் சமூக உணர்வுக்கு அடிப்படை. அப்படி மனைவி மக்களோடு கூடிவாழத் தொடங்கின போதிலும் அதில் 'குடும்பம்' என்ற ஒரு பிணைப்பு தான் இருந்திருக்குமே ஒழிய சமூகம் உருவாகியிருக்க வழியில்லை. 'தேவையே' அவனைக் கூட்டு வாழ்வுக்குப் பற்றிச் சென்றிருக்கும். உலக வரலாற்றிலே பல நாகரீகங்கள் பேசப்பெறினும் அவற்றுள் தொன்மை வாய்ந்ததும், சிறந்ததும் ஆற்றங்கரை நாகரீகமே என்று சொல்வார்கள். அந்தப் பழம்பெரும் ஆற்றங்கரைகளிலேதான் மக்கள் சேர்ந்து வாழக் கற்றுக் கொண்டதோடு, கூட்டு வாழ்வின்வழி முதன் முதல் நல்ல பண்பாட்டை உருவாக்கியிருக்க முடியும். ஆற்றங்கரையில் நீர்கொண்டு பயிரிடத் தொடங்கிய காலத்தில் ஒருவர் உதவி மற்றவருக்குத் 'தேவை'யாக இருந்திருக்கும். அந்தக் கூட்டு வாழ்வே அவனை சமூக வாழ்வுக்கு ஈர்த்துச் சென்றது எனலாம். மற்றவரோடு சேர்ந்து வாழ்ந்தாலன்றி வாழ்க்கை இல்லை என்ற நிலையில் சமுதாயம் உருவாயிற்று. பின்னர் மெள்ள மெள்ள அன்பினாலும் அன்றி அச்சத்தாலும் அச்சமுதாயம் பிணைந்து வளரத் தொடங்கியது.

இன்று சமுதாயம் அல்லது சமூகம் நன்கு வளர்ந்து விட்டது என நாம் நினைக்கின்றோம். ஆயினும் உலக நிலையை ஆராயின் அது நிச்சயம் வளரவில்லை என்பது நன்கு புலனாகும். கூடி வாழ்வதுதான் சமுதாயம் என்றால் அக்

கூட்டு வாழ்வில் நாள்தோறும் பிளவுகள் உண்டாகுவானேன்? அதனால் உலகப் பெரும் போர்கள் மூளுவானேன்? உள்ளங்கள் ஒன்று சேராது உதட்டால்பேசிப் பெரும் கலகங்களை மக்கள் உண்டாக்குவானேன்? மற்றும் வெறும் கூட்டு வாழ்வே சமூகம் என்றால் சிறைச்சாலையில் பலர் கூடித்தானே வாழ்கிறார்கள். அவர்களைத் 'திருட்டுச்சமூகம்' என்றோ, 'கொலைகாரச் சமூகம்' என்றோ கொள்ளுகிறோமா? இல்லையே! ஒரு சிலர் அவ்வாறு அத்தகைய சமூகங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கன என்று நினைக்கிறார்கள் என்றாலும், ஆராய்ந்து பார்ப்பின் அவர் கொள்வது சரியல்ல என்பது புலனாகும். எனவே சமூகம் என்பதற்குக் கூட்டு வாழ்வு அடிப்படை என்றாலும், அத்தகு வாழ்வோடு வேறு ஒன்றோ சிலவோ இணைந்ததே என்பது நன்கு புலப்படும். ஆம்! அந்த இந்த இணைப்பைப் பலர் பல பெயரிட்டு அழைக்கலாம். நாகரீகம் என்பர் சிலர். சற்று நின்று சிந்திப்பின் 'பண்பாடே' கூட்டு வாழ்வை வாழ்விப்பதோடு, சமூகத்தையும் உருவாக்கும் ஒன்று என்பது நன்கு தெளிவுறும்.

தனித்து வாழ்ந்த மனிதன் மற்றவரோடு சேர்ந்து வாழ நினைந்த நினைப்பே பண்பாட்டின் அடிப்படையில் உருவானதாகும். தன் விருப்பம் போல் கண்டபடி திரிந்து, கண்டதை உண்டு, கண்ட வாழ்வில் வாழ்ந்த ஒருவன், பக்கத்தில் உள்ள மற்றவரோடு கலந்து உறவாடி, அவர் தம்வாழ்வோடு வாழ்க்கையை பின்னிப் பிணைத்து, தேவையாயின் தன் வாழ்வின் இன்பத்தையும் தியாகம் செய்வது பண்பாட்டின் அடிப்படையில் அமையும்ஒன்றுதானே. உள்ளம் பண்பட வில்லையானால் ஒன்றி வாழும் சமுதாயம் எப்படி உருவாக முடியும்? வாய் திறந்து பேச முடியாவிட்டாலும், இந்த விட்டுக் கொடுக்கும் பண்பாட்டில்தானே குருவிகளும், காக்கைகளும், பல உயிரினங்களும்கூட ஒன்றை ஒன்று தழுவி வாழ்கின்றன. அந்த உயிரினத்தின் உச்சியில் வாழும் மனிதன் அப்பண்பாட்டில் வாழ்வதே சமூக வாழ்வாகும்.

இவ்வாறு சேர்ந்து வாழவேண்டும் என்ற உணர்வும், அதன் வழி அரும்பிய பண்பாடும், மனித வரலாற்றில் என்றைக்கு தோன்றின என்று திட்டமாகக் கூற முடியாது. என்று தோன்றியிருப்பினும் அத்தோற்ற நாள் அதன் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்க வேண்டிய நாளாகும். அந்த நாள் தொட்டு இந்த நாள் வரை பல்வேறு சூழல்களுக்கும் மாறுபாடுகளுக்கும் பிற நிலைகளுக்கும் ஏற்ப இம் மனித சமுதாயம் மெள்ள வளர்ந்து கொண்டேதான் வருகின்றது. அச் சமுதாய வாழ்வில் இன்று எத்தனையோ பிரிவுகளைக் காண்கின்றோம்.

தமிழ் நாட்டை நானிலமாகப் பிரித்த பழங்கால மக்கள், அவற்றைச் சூழலுக்கு ஏற்பவே உரு

வாக்கினர்கள். முல்லையும், குறிஞ்சியும், மருதமும், நெய்தலும் அவ்வவற்றின் சுற்றுச் சூழலுக்கு ஏற்பவே உருவாயின. அவ்வந் நிலத்து வாழும் மக்களின் சூழலுக்கும் தட்பவெட்ப நிலைகளுக்கும் பிறவற்றிற்கும் ஏற்பவே அவர்தம் வாழ்க்கை முறையும், பண்பாடும், பிற இயல்புகளும் உருவாயின. அந்த நிலையில் இன்று உலகில் பல பாகங்களிலும்—பல மூலைகளிலும்—பல நாடுகளிலும் வாழும் மக்கள் தத்தம் சூழலுக்கு ஏற்பச் சமுதாய வாழ்க்கை முறைகளை அமைத்துக்கொள்கின்றனர். அதனாலேயே ஒரு நாட்டுச் சமுதாய முறை மற்றொரு நாட்டுக்கு வேடிக்கையாக இருக்கிறது. ஒரு நாட்டுச் சமுதாயப் பண்பாடும் பிற இயல்பும் மற்ற நாடுகளுக்கு விளங்காமற் போகின்றன. அப்படியே, ஒவ்வொரு நாடும் நாகரீக சமுதாயப் பண்பாட்டின் அமைப்பினைப் போன்றே, மொழித் துறையிலும் வேறுபடுகின்றன. இவை அனைத்தும் வரலாற்று எல்லை கணக்கிட இயலாத அத்துணை நெடுங் காலத்தில் வளர்ந்து வந்த மாறுதல்களாகும். ஆயினும் இத்துணை மாறுதல்களுக்குஇடையிலும் மனித சமூகத்தில் ஒரு மெல்லிழை அனைவரையும் பின்னிப் பிணைத்தே செல்கின்றது. அதைத்தான் 'அன்பு' என்பர். அதையே வள்ளுவர் 'அன்பின் வழியது உயிர் நிலை' என்றார். உலகம் வாழ வேண்டுமானால்—உண்மையில் சமூக வாழ்வு நிலை கெடாதிருக்க வேண்டுமானால் 'தன்னைப்போல் பிறரை நேசிக்கும்' அந்த நல்ல அன்பு மக்கள் உள்ளத்தில் நடமாட வேண்டும். அந்த அன்பு என்னும் இழையிலே கோத்த பல்வேறு மணிகளெனவே இன்று உலக அரங்கில் மக்கள் சமூகம் பல்வேறு நாகரீகப் பண்பாடுகளுடன் வளர்ந்து வருகின்றது.

இருபதாம் நூற்றாண்டிற்கு இடையில் பல துறைகளில் முன்னேறிவிட்டதாக எண்ணும் மனிதன், அந்த அடிப்படைப் பண்பாட்டில் வீழுகின்றான். அன்பால் கட்டப்பட்ட சமூகத்தை வன்பால் வீழ்த்த நினைக்கின்றான். அவன் வாய் 'அன்பு, பண்பாடு, நாகரிகம்' என்று பேசிக்கொண்டே இருந்தாலும் அவனுள்ளம் அவற்றைக் குழிதோண்டிப்புதைக்கவே திட்டமிடுகின்றது. இதனால் தான் இன்று ஒரே தலைமுறையில் இரண்டு உலகப் போர்கள். இன்றும் உலகில் அமைதியற்ற நிலை. வீட்டுக்கு வீடு மாறுபாடு. நீதி மன்றங்களின் எல்லையற்ற விரிவு. இத்தனை கொடுமைகளும். இதுவரையில் அமைதியாக வளர்ந்து வந்த சமூகத்தை இன்னும் இனியும் வளர்க்க வேண்டுமாயின், மனிதன் இந்த 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும்' அநாகரீகத்தை விட்டுவிட வேண்டும். அன்பினை உள்ளத்தில் கொள்ளவேண்டும். அதற்கு ஆவன செய்ய நல்ல உள்ளம் வாய்ந்த பெரியவர்கள் நாட்டையும் உலகையும் முன்னின்று நடத்திச் செல்லவேண்டும்.

**நெருப்பு என்றதும் நமக்கு ஒருவகை அச்சமும் நடுக்கமும் எழுகிறது. அது ஏன்? நன்மையும் தீமையும் விளைவிக்கக் கூடிய ஓர் விநோத சக்தி நெருப்புக்கு உண்டு. அதுபற்றிய விளக்கக் கட்டுரையே இது.**

# நெருப்பும் நாமும்

[கல்வி கோபாலகிருஷ்ணன்]

நெருப்பு! ஆம்! எங்கும் நெருப்பு. வீடுதோறும் நெருப்பு!

காற்றும், தண்ணீரும் நாம் உயிர் வாழ எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு இன்றியமையாதது நெருப்பு! நெருப்பு நமக்கு நன்மை பயக்கும் நண்பனாய் விளங்கி வருவதால் அதை நாம் வீடுதோறும் வைத்து வளர்க்கிறோம்.

ஆனால்!

நெருப்பு என்றதும் நமக்கு ஒருவகை அச்சமும் நடுக்கமும் எழுகிறது. அது ஏன்? நன்மையும், தீமையும் விளைவிக்கக் கூடிய ஓர் விநோத சக்தி நெருப்புக்கு உண்டு. அதை அடக்கி ஆளத் தெரிந்தவரிடம் அடிமையாகி, இட்ட பணிகளைத் திறம்பட முடித்துத் தருகிறது. ஆனால் அதை அடக்கி ஆளத் தெரியாதவர்களிடமோ கொடிய அரக்கனாக மாறிக் கோர தாண்டவமாடத் தொடங்கி விடுகிறது.

அதன்மேல் குற்றங் கூறிப் பலனில்லை. நெருப்பு அடங்காப் பசியுடன் கூடிய அசுர நாக்குகளைப் படைத்தது. கிட்டியதையெல்லாம் எட்டிப் பிடித்து எரித்து விழுங்கும் இயல்பு படைத்தது. அதனால் அதை உணர்ந்து அதனுடன் பழகுபவர்கள் கண்ணும் கருத்துமாக நடந்து கொள்ளுதல் மிகமிக அவசியம்.

பண்டைக்காலம் தொட்டே மனிதன் தன் சாதுர்யத்தால் தீயைக் கட்டுப்படுத்தி அடக்கி ஆளத் தொடங்கி விட்டான். நெருப்பின் அபார சக்தியைப் பயன்படுத்தித் தன் வாழ்க்கைத் தரத்தையே உயர்த்திக் கொண்டும் வந்துள்ளான். அன்றும் இன்றும் அதன் உதவியால் மாபெரும் சாதனைகளைச் செய்து முடித்து வருகிறான்.

மனிதன் மட்டும் நெருப்பைக் கண்டு அஞ்சி, அதை அணுகாமலே இருந்திருந்தால் மனித வர்க்கமே இன்றும் காட்டுமிராண்டியாக உலகில் நடமாட நேர்ந்திருக்கும். பச்சைக் காய்கனிகளை உண்டு, கல்லால் செய்த ஆயுதங்களை ஏந்தி, மிருகங்களின் தோலை உடையாக அணிந்து, தங்க வீடு இல்லாமல் விலங்குகளைப்போல் அலைந்து திரியும் அவல நிலையில் வாழ நேர்ந்திருக்கும்.

நம் வாழ்க்கைத் தரத்தையே உயர்த்த உதவிய நெருப்பு என்பது என்ன? இது எப்பொழுது எப்படி உண்டாயிற்று?

## நெருப்பின் பிறப்பு

நெருப்பு எப்பொழுது பிறந்தது என்று எவராலும் கூற முடியாது. ஆகாயத்தில் நமக்குத் தென்படும் சூரியன் ஓர் நெருப்புப் பந்து. இதேபோல் கோடிக் கணக்கான நெருப்புப் பந்துகள் (சூரியன்கள்) வானவெளியில் பிரகாசித்த வண்ணமிருக்கின்றன. இவைகள் எவரால் எப்பொழுது எவ்விதத்தில் உற்பத்தியாக்கப்பட்டன என்பதை ஊகிக்க முடியவில்லை. ஆனால், இவ்வகைச் சூரியன்களை இயற்கையில் முதல் முதல் உண்டான நெருப்பு வகையாகும்.

## நிரந்தர நெருப்பு

சூரியன் நமது பூமியிலிருந்து 9½ கோடி மைல்களுக்கப்பால் உள்ளது. இவ்வளவு தொலைவிலுள்ள சூரியனின் வெப்பமும் வெளிச்சமும் பூமியை அடைந்து நமக்குப் பல வகையிலும் நன்மை செய்து வருகின்றது.

இந்த அதிசய நெருப்புப் பந்து, கோடி கோடி ஆண்டுகளாக வெப்பத்தையும் வெளிச்சத்தையும் கொடுத்து வந்துள்ளது. இன்னும் இவ்விதமே கோடி கோடி ஆண்டுகள் வெப்பத்தையும் வெளிச்சத்தையும் இடைவிடாது கொடுத்துவரும் என்று விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர்.

இந்த அணையா நெருப்பு இடைவிடாது எரியும் மர்மத்தை விஞ்ஞானிகள் சமீபத்தில் கண்டு பிடித்து விட்டனர். சூரியன் ஓர் அணு உலை. இது ஹைட்டிரிஜன் அணு. இவ்வணுச் சிதைவு ஏற்படும்போது அபார வெப்பமும் வெளிச்சமும் வெளியாகின்றன. அணுச் சிதைவினால் அதிசய சக்தி வெளியாகிறதே ஒழிய, சூரியனிலுள்ள ஹைட்டிரிஜனின் அளவு குறைவதில்லை. இக்காரணத்தால் சூரியன் காலவரையறையின்றி எரிந்தவண்ணமிருக்கும்.

வானவெளியில் நடமாடும் இவ்வகைச் சூரியன்களிடமிருந்துதான் இயற்கையில் முதல் முதல் நெருப்பு உண்டானது.

## அணையா அடுப்பு

முன்னொரு காலத்தில் சூரியனிலிருந்து சில பகுதிகள் விண்டு விலகி, உருண்டு வானவெளியில் சூரியனைச் சுற்றி நெருப்புப் பந்துகளாகச் சுழலத் தொடங்கின. சூரியனைப்போல் அணுவைச் சிதைக்கும் அபூர்வ சக்தி, விலகிய இந்த நெருப்புப் பந்துகளுக்கு இல்லாத காரணத்தால் காலக்கிரமத்தில் இந்த நெருப்புப் பந்துகள் குளிர்ச்சி அடைந்து கிரகங்களாகச் சூரியனைச் சுற்றி வட்டமிடத் தொடங்கின. இவ்விதம் சூரியனைச் சுற்றிவரும் கிரகங்களில் நமது உலகமும் ஒன்றாகும்.

உலகத்தின் மேல் பாகம் குளிர்ச்சி அடைந்து கற்பாறையாக உறைந்தது. ஆனால் இதன்

உட்பாகம் இன்னும் குளிர்ச்சி அடையாமல் எரியும் நெருப்பு குழம்பாகவே இருந்து வருகின்றது.

அதனால்தான் உலகில் அடிக்கடி சில இடங்களில் எரிமலைகள் உண்டாகின்றன. இந்த நெருப்பு, புகை, சாம்பல், உருகிய உலோகம், கற்பாறைக் குழம்பு முதலியவைகளைப் பூமியின் மேல் மட்டத்தில் கொண்டு வந்து கொட்டுகின்றன.

இவ்வெரிமலைகள் இயற்கையில் காணும் இரண்டாவது வகைத் தீயாகும்.

## இடியும் மின்னலும்

உலகம் குளிர்ச்சி அடையும் பொழுது பலவகை வாயுக்களும், நீராவியும் காற்றாகவும் தண்ணீராகவும் மாறிப் பூமியின் மேற்பரப்பில் பரவின. பூமியின் மேற்பரப்பில் கூடிய தண்ணீர் சூரிய வெப்பத்தால் ஆவியாக மாறி மேகக் கூட்டங்களாகப் பூமியைச் சுற்றி ஆகாயத்தில நடமாடத் தொடங்கின. இம்மேகக் கூட்டங்கள் பூமியிலுள்ள மின்சக்தியைச் சேகரித்துக் கொண்டு நடமாடத்தொடங்கின. மின்சக்தி நிறைந்துள்ள மேகங்கள் ஒன்றுடன் ஒன்று மோதும் பொழுது மின்சக்தி மேகத்திற்கு மேகமோ அல்லது பூமியை நோக்கியோ பாயத்தொடங்குகின்றன. அப்படி மேகங்களிலிருந்து வெளியாகும் மின் சக்தியை நாம் மின்னல் என்கிறோம். மின்னல் என்பது மின்சாரத்தால் உண்டாகும் ஒருவகைத் தீ. இது இயற்கையில் காணும் மூன்றாவது வகைத் தீயாகும்.

## காட்டுத் தீ

காலக் கிரமத்தில் உலகின் மேல் மட்டத்தில் முதலில் பாசி வகைகளும், பின் சிறு செடி கொடிகளும் தோன்றி, அதன் பின் பெரிய மரங்கள் வளரத் தொடங்கின. உலகின் நீர்ப்பாகம் முழுவதும் இம் மரங்கள் வளர்ந்து ஒரே காடு மயமாக மாறின.

கோடை காலத்தில் மரக்கிளைகள் சில உலர்ந்து விடும். அம் மரக் கிளைகள் காற்றில் அசைந்து ஒன்றுடன் ஒன்று உராய்ந்து, சூடு ஏறி தீப்பற்றிக் கொள்ளும். ஓர் இடத்தில் மூண்ட நுண்ணிய தீப்பொறி பிறகு காட்டையே அழிக்கும் பெருந் தீயாக மாறி விடும். கிளையுடன்கிளை உராய்ந்து சூடேறித் தானுகவேபற்றி எரிந்த மற்றோர்வகைத் தீ மூன்றும் வகைத் தீயாகும்.

## அஞ்சி நடுங்கினுன்

மின்னல் வீச்சு, எரிமலைகள் கக்கும் தீ, காட்டுத் தீ இம் மூன்று வகைத் தீக்களையே ஆதிகாலமனிதன் அறிந்திருக்க முடியும். இம் மூன்று வகைத் தீக்களும் ஆதிகால மனிதனுக்கு அச்சத்தையும் பீதியையும் உண்டாக்கும் விபரீத உருவங்களாகக் காட்சி அளித்தனவே ஒழிய, உற்ற துணைவனுகத் தோற்றமளிக்கவில்லை. மின்னலின் கண்ணைப் பறிக்கும் ஒளியும்

இடியின் பயங்கர ஒலியும் அவனைக் கதிகலங்கச் செய்தன.

எரிமலைகள் கக்கும் நெருப்புக் குழம்பு, மூச்சுத் திணற அடிக்கும் வாயு, பயங்கரப் புகை முதலியன அவன் கண்களுக்குச் சீற்றம் மிகுந்த அரக்கராகத் தோற்றமளித்தன.

காட்டுத் தீயோ அவன் வாழ்ந்த இடத்தையே அழித்து அவன் பசிக்குப் புசித்த ஆகாரத்தை ஒழித்துக் கட்டும் கொடுங்கோலாக மாறி அச்சுறுத்தியது.

இம்மூன்று வகைத் தீக்களை மட்டும் கண்ணுற்ற ஆதிகால மனிதன் அஞ்சி நடுங்காமல் என்ன செய்யமுடியும்? அவைகளை ஆதிகால மனிதன் கடவுளின் கோபக் குறிகள் என்றும், துர்தேவதைகளின் சேட்டைகள் என்றும் கருதினான். அவைகள் கொடூரத்தைக் காட்டாமலிருக்க அவைகளைத் தொழத் தொடங்கினான். அச்சத்தீக்களை அடக்கி ஆளும் அறிவு அக்காலத்தில் அவனுக்கு வளரவில்லை.

## நெருப்பை நாடினான்

இடியால் உண்டாகும் தீ, எரிமலைத் தீ, காட்டுத் தீ இவைகளின் கொடூரம் தணிந்ததும் எஞ்சிய நெருப்பை என்னவென்று பரிசோதிக்கஆதிகாலமனிதன் அவைகளை அணுகி இருக்க வேண்டும். அத்தீயின் தணல்களிலிருந்து வெளியாகும் வெப்பம், குளிரால் அவதியுறும் அவன் உடலுக்கு இதமாகஇருப்பதை உணர்ந்திருக்கவேண்டும். நெருப்பின்உதவியால் உடலை வாட்டும் குளிரை, விரட்டி அடிக்கலாம் என்பதை நெருப்பின் முதல் உதவியாக ஆதிகால மனிதன் உணர்ந்திருப்பது இயல்பு. குளிரைப் போக்கத் தீயைக் கொண்டு வந்து வளர்க்கத் தலைப்பட்டிருத்தல் வேண்டும்.

## இருட்டை விரட்ட

தீயைக் குளிர் காய்வதற்காக வளர்க்கத் தொடங்கிய ஆதி மனிதன் மேலும் அதன் மூலம் சில பலன்களை அடையலாம் என்பதைக் காலக்கிரமத்தில் உணர்ந்தான்.

கானகத்தில் வசித்து வந்த ஆதிகால மனிதனுக்கு இரவு என்றாலே பீதியை உண்டாக்கும். காடுகளில் கொடிய விலங்குகள். விஷப் பூச்சிகள், பயங்கரப் பிராணிகளின் இடையில் அவன் வாழ நேர்ந்தது. இரவுநேரங்களில் இருட்டில் அவனுக்குக் கண் நன்கு தெரியாத காரணத்தால் அவைகளிடமிருந்து தப்பிப் பிழைப்பது கடினமாகி விட்டது. எந்தநேரத்தில் எந்த விஷப்பூச்சி, பாம்பு தீண்டிவிடுமோ என்றும், எந்தக் கொடிய விலங்குகள் கொன்றுவிடுமோ என்றும் அஞ்சி வாழ நேர்ந்தது. அது போதாதென்று விலங்குகளின் கொடூரக் குரல்கள் இருள் சூழ்ந்த கானகத்தில் அவன் காதுகளுக்குப் பேய்க் குரல்களாக விளங்கி அவனை நடுங்க வைத்தன. ஆம்; அப்படிப் பட்ட அச்சத்திலிருந்து நம்மைக் காப்பாற்றியது நெருப்பே.

—"தமிழ்"

Edited Printed and Published by, P. VEERARAGHAVAN,
Venkatesan Press, 2/65, Broadway, Madras-1.

## STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWS PAPER "ARAMBAKKALVI"

Form IV

(See Rule 8)

1. Place of Publication.................Madras.
2. Periodicity of its publication...Monthly.
3. Printer's Name.......................P. Veeraraghavan.
   Nationality.......................Indian.
   Address.........................94-95, New Street, Mannady, Madras-1.
4. Publisher's Name...................P. Veeraraghavan.
   Nationality.......................Indian.
   Address.........................94-95, New Street, Mannady, Madras-1.
5. Editor's Name.......................P. Veeraraghavan.
   Nationality.......................Indian.
   Address.........................94-95, New Street, Mannady, Madras-1.
6. Name and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total share capital. — P. Veeraraghavan, 94-95, New St., Mannady, Madras-1.

I, P. VEERARAGHAVAN, here by declare that the particulars given above are true to thc best of my knowledge and belief.

(Sd) P. VEERARAGHAVAN,
Publisher,
"Arambakkalvi"